# சமூக அறிவியல்

## பகுதி - 1

## வகுப்பு VIII

**Social Science**
**Part 1**
**Std VIII**
**Tamil Medium**

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் நிறுவனம் (SCERT) கேரளம்

2025

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

# 8

# சமூக அறிவியல்

*Prepared by*
**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition - 2025
Printed at : KBPS, Kakkanad, Kochi
© Department of General Education, Government of Kerala

அன்புடைய நண்பர்களே,

சமூக அறிவியல் கல்வியின் வாயிலாகப் பரந்த உலகம் மற்றும் பலதரப்பட்ட சமூக வாழ்க்கையைப் பற்றிய பல விவரங்களை முந்தைய வகுப்புகளிலிருந்து நாம் தெரிந்து கொண்டோம். சமூகத்தின் வரலாற்றையும் மாற்றத்தையும் கூடுதலாகப் புரிந்து கொள்ளவதற்கான வாய்ப்புகள் இங்குக் கிடைக்கும். தாய் நாட்டின் துடிப்பான கடந்த காலத்தைக் குறித்துள்ள புதுமையான அறிவுகள் நமது வரலாற்று உணர்வில் புது வெளிச்சம் தருபவையாகும்.

ஐரோப்பிய நாடுகள் இந்தியாவின் மீது நூற்றாண்டுகளாக நடத்திய படையெடுப்புகளும் பூர்வீக கலாச்சாரம் எதிர்கொண்ட அடக்குமுறைகளும் இங்கு நினைவூட்டப்படுகின்றன. அடிமைத்தளத்திலிருந்து காலனிய ஆட்சியிலிருந்தும் விடுதலைபெற நமது முன்னோர்களான வீரமிக்க தேசபக்தர்கள் நடத்திய தியாக சுதந்திரப் போராட்டத்தின் வரலாற்றை அறிய உதவும் பாடங்கள் இப்பாடநூலில் அடங்கியுள்ளன.

புவியின் சலன சிறப்பம்சங்களான தற்சுழற்சி மற்றும் புவியன் சூரியசுழற்சி விவரங்களும் அவற்றிற்கு வாழ்க்கையிலுள்ள செல்வாக்கும் விவாதத்துக்கு உட்படுத்தப்படுகிறது. வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு மனிதனின் எல்லையற்ற தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்வதென்பது உள்ளிட்ட அடிப்படை பொருளாதார தலைப்புகள் இப்பாடநூல் உள்ளடக்கியுள்ளது.

நமது அரசியலமைப்பு முன்வைக்கும் சட்டங்கள், கடமைகள் மற்றும் உரிமைகளை விளக்கி சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்தை நிலைநாட்டும் மதிப்புணர்வுள்ள குடிமகனாக உங்களை மாற்ற இந்தப் பாடநூல் ஒரு வழிகாட்டியாக இருக்கும்.

நமது சமூகத்தில் ஊடகங்கள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது சமீபகால மிக முக்கியமான நிகழ்வுகளின் பின்னணியில் விளக்கப்பட்டுள்ளன. ஊடகங்களுக்கும் சமூகத்துக்கும் இடையே உள்ள தொடர்பை அறியும் திறன் பெறும் வகையில் இந்தப் பாடநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தேசீய உணர்வை அதிகரிக்கச் செய்யவும், சுயமாகப் புரிந்து கொள்ளவும், சமூகத்தை அடையாளம் கண்டு புதிய கண்ணோட்டங்களை உருவாக்கவும் சமூக அறிவியல் கல்வி உதவும். உலக நடவடிக்கைகளைக் கண்டறிந்து செயல்படும் சிறந்த குடிமக்களாக ஆகும் வகையில் சிறந்த கற்றல் அனுபவங்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ள எட்டாம் வகுப்பு சமூக அறிவியல் பாடநூல் பகுதி 1, வரலாற்றை ஆர்வத்துடன் அணுகவும், புதிய அறிவுகளைப் பெறுவதற்கும் உதவியாக அமையும் என்ற உறுதியுடன் உங்களுக்கு இப்பாடநூல் வழங்கப்படுகிறது.

அன்போடு,

**முனைவர் ஜெயப்பிரகாஷ் ஆர்.கெ.**
இயக்குநர்
எஸ்.ஸி.இ.ஆர்.டி. கேரளம்

# Textbook Development Team

## Advisor

**Dr. K. N. Ganesh**
*Chairman, Kerala Council for Historical Research*

## Chairperson

**Dr. V. Shaharban**
*Assosciate Professor & Head, Department of Economics, Kannur University*

## Experts

**Dr. Anish V. R.**
*Assistant Professor, Department of Political Science, S.A.R.B.T.M. Govt. College, Koyilandy*

**Bino P. Jose**
*Assistant Professor, Department of History, St. Dominic's College, Kanjirapally*

**Dr. Jayarajan K.**
*Associate Professor & Head Department of Geography, Govt. College Chittur, Palakkad*

## Members

**Dr. Anjana V. R. Chandran**
*Research Officer, SCERT Kerala*

**Dr. Akhil S.**
*H.S.S.T. Geography, G.H.S.S., Thazhathuvadakara, Kottayam*

**Ashraf M.**
*Principal (Rtd.), G.G.H.S.S., Adoor, Pathanamthitta*

**V. Kripalaj**
*H.S.T. Social Science, V.M.H.S. Vadavannur, Palakkad*

**Leena P. S.**
*H.S.T., Social Science, S.N.H.S.S. Uzhamalakkal, Nedumangad, Tvpm.*

**Dr. Priyanka P. U.**
*H.S.T. Social Science, G.H.S.S. Nayyardam, Tvpm.*

**Pradeepkumar L.**
*H.S.S.T. Political Science, G.H.S.S. Pattazhy, Kollam*

**P. C. Radhakrishnan**
*H.S.S.T. Sociology, G.H.S.S., Munnoorcode, Palakkad*

**Renjith Vellalloor**
*H.S.T. Social Science, G.H.S.S., Kilimanoor, Thiruvananthapuram*

**Rijukumar K. C.**
*H.S.S.T. History, G.H.S.S., Avitanallur, Kozhikode*

**Shareena K.**
*H.S.T. Social Science, G.H.S.S., Perinthalmanna, Malappuram*

**Sreejith M. Muthadath**
*H.S.T. Social Science, C.N.N.G.H.S. Cherpu, Thrissur*

**Dr. Usha Rani K.**
*Assistant Professor, Govt. College of Teacher Education, Thiruvananthapuram*

## Tamil Translation

### Experts

**Dr. Shini S**
*Associate Professor of Tamil University College, Thiruvananthapuram.*

**Dr. Rema Devi R**
*Associate Professor (Rtd), University College, Thiruvananthapuram.*

### Members

**Daisy Rani R**
*HST, PHSS Vandiperiyar, Idukki.*

**Mary Stella Rosaline K,**
*HST (Rtd.), GGHSS Karamana, Thiruvananthapuram.*

**Nirmala Princy Bell J,**
*HST (Rtd.), GV&HSS, Chalai, Thiruvananthapuram.*

**Geetha A**
*HST Social Science, GHS Pambanar.*

**Vijaya A**
*Headmistress, GHS Pambanar.*

## Academic Coordinator

**Dr. Anil D.**
*Research Officer, SCERT Kerala*


மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஆக்கிரமித்தலும் எதிர்த்து நிற்றலும் | 7-26 |
| 2. | தேசிய இயக்கத்தின் எழுச்சியை நோக்கி | 27-42 |
| 3. | புவியின் சலனங்கள்: புவியின் தற்சுழற்சியும் சூரிய சுழற்சியும் | 43-58 |
| 4. | அடிப்படை பொருளாதார பிரச்சினைகளும் பொருளாதார அமைப்புகளும் | 59-72 |
| 5 | இந்திய அரசியலமைப்பு உரிமைகளும் கடமைகளும் | 73-86 |
| 6. | வளங்களின் பயன்பாடும் நிலைத்தன்மையும் | 87-102 |
| 7. | ஊடகங்களும் சமூகப் பிரதிபலிப்புகளும் | 103-118 |


**இந்தப் புத்தகத்தில் கற்றலை எளிமையாக்க சில குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.**


அதிக வாசித்தலுக்கு மதிப்பீடு செய்ய தேவையில்லை.


கற்றல் செயல்பாடுகள்


தொடர் செயல்பாடுகள்


நாம் வாசிக்கலாம்

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

அலகு 1

# ஆக்கிரமித்தலும் எதிர்த்து நிற்றலும்



"ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி 1601 – ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கிழக்கிந்தியத் தீவிற்குத் தனது முதல் கப்பற்படையை அனுப்பியது. 18 மாதங்களுக்குப் பிறகு, அசென்ஷன், டிராகன், ஹெக்டர், சூசன் ஆகிய நான்கு கப்பல்கள், சுமத்திராவிலிருந்தும் ஜாவாவிலிருந்தும் நல்ல மிளகு மற்றும் பிற பொருட்களுடன் திரும்பி வந்தன. இந்த வெற்றியைத் தொடர்ந்து, அதே கப்பல்கள் 1604 – ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் லண்டனிலிருந்து இரண்டாவது பயணத்தைத் தொடங்கின. திரும்பி வருகின்ற பயணத்தில் ஹெக்டரும், சூசனும் முதலில் புறப்பட்டன. ஆனால் சூசன் கடலில் வைத்து உடைந்து போனது. அதன் பின்னால் வந்த அசென்ஷனும் டிராகனும் அவர்களைக் காப்பாற்றுவதற்குள் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த ஹெக்டரின் பெரும்பாலான மாலுமிகளும் இறந்து விட்டனர். 1606 – ஆம் ஆண்டு மே மாதத்தில் நல்லமிளகும் கிராம்பும் ஜாதிக்காயும் நிரப்பி கப்பல்கள் இங்கிலாந்திற்குத் திரும்பி வந்தன. கம்பெனியின் இலாபம் முதலீட்டின் 95 சதவீதமாக இருந்தது".

James Fulcher,
Capitalism : A Very Short Introduction

இந்தியா உள்ளிட்ட கிழக்குப் பகுதிகளுடனான (கிழக்கிந்திய தீவுகள்) வர்த்தக உறவுகளுக்காக இங்கிலாந்தில் நிறுவப்பட்டு, பின்னர் இந்தியாவைக் கட்டுப்படுத்தி ஆட்சிசெய்த, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் முதல் வர்த்தக முயற்சியின் விளக்கத்தை வாசித்தீர்கள் அல்லவா?

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியை இத்தகைய கடினமான வர்த்தகத்தை மேற்கொள்ளத் தூண்டியது எது என்பதை ஆராய்வோம். பண்டைய காலம் முதலே ஐரோப்பியர்களுக்கு உலகின் பிற பகுதிகளுடன் வாணிபத் தொடர்பு இருந்தது. இதில் ஆசியாவும் அடங்கும். இந்தத் தொடர்புகள் 15 – ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவில் இருந்து கிழக்குத் திசையை நோக்கி ஒரு கடல்வழிப் பாதையைக் கண்டுபிடிப்பதற்கு வழிவகுத்தது. இதற்கான முக்கிய காரணிகள் பின்வருமாறு:.

- ஐரோப்பியர்கள் கப்பல் கட்டுதலிலும் கப்பல் பயணத்திலும் அடைந்த தொழில் நுட்ப முன்னேற்றங்கள்.
- புவியியல் அறிவில் ஏற்பட்ட வளர்ச்சி.
- திசையைக் கண்டறிய உதவும் திசைகாட்டி, நிலப்படத் தயாரிப்பில் ஏற்பட்ட முன்னேற்றம்.
- புதிய பகுதிகளையும் அவற்றின் செல்வங்களையும் குறித்துப் பயணிகளின் பயணக் குறிப்புகள் அளித்த அறிவு.
- ஐரோப்பாவில் நல்லமிளகு உள்ளிட்ட ஆசிய உற்பத்திப் பொருட்களுக்கு இருந்த வியாபார வாய்ப்பு.
- துருக்கியர்கள் கான்ஸ்டாண்டி நோபிளைக் கைப்பற்றியது.

போர்ச்சுக்கீசியர்களே கடல் வழியாக இந்தியாவை அடைந்த முதல் ஐரோப்பியர்கள். கடல் வழியாக இந்தியாவை அடைந்த முதல் போர்ச்சுக்கீசியர் வாஸ்கோடகாமா ஆவார்.




படம் 1.1 ● வாஸ்கோட காமாவின் இந்தியாவிற்கான பயணம்

### கான்ஸ்டான்டி நோபிள்

*கான்ஸ்டான்டி நோபிள் ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்கும் இடையே உள்ள ஒரு முக்கிய மையமாக இருந்தது. இதன் வழியாகத் தான் ஐரோப்பா மற்றும் ஆசியாவுக்கு இடையிலான தரைவழி வாணிபம் நடைபெற்றிருந்தது. 1453–இல் துருக்கியர்கள் இந்த இடத்தைக் கைப்பற்றி அதன் வழியாக நடைபெற்ற ஐரோப்பிய வாணிபத்தையும் தடை செய்தனர். அதைத்தொடர்ந்து, ஐரோப்பியர்கள் புதிய பாதையைக் கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.*

*நிலப்படத்தை உற்று நோக்கி பின்வருவனவற்றைக் கண்டறியும்.*

- வாஸ்கோடகாமாவின் கப்பல் பயணம் ஆரம்பித்த இடம்.
- காமா சென்றடைந்த இடம்.
- காமா கடந்து வந்த கடல்கள் மற்றும் கண்டங்கள்.

## போர்ச்சுக்கீசியர்களின் இந்திய பயணம்

1498–ஆம் ஆண்டு வாஸ்கோடகாமா கோழிக்கோட்டின் அருகிலுள்ள காப்பாடு என்ற இடத்தில் வந்தடைந்தார். அவரது வருகை இந்தியாவில் ஐரோப்பிய ஆதிக்கத்திற்கு வழிவகுத்தது. அக்காலத்தில் கோழிக்கோட்டைச் சாமூதிரி அரச வம்சத்தினர் ஆட்சி செய்தனர். அரேபியர்கள்தான் கோழிக்கோட்டுடனான வெளிநாட்டு வாணிபத்தைக் கட்டுப்படுத்தி இருந்தனர். அவர்களை வெளியேற்றிவிட்டு போர்ச்சுக்கீசியர்களுக்கு வியாபாரத்திற்கான அனுமதி வழங்க வேண்டும் என்ற காமாவின் வேண்டுகோளை சாமூதிரி ஏற்றுக் கொள்ளவில்லை. இதைத் தொடர்ந்து காமா கண்ணூரிலுள்ள கோலத்திரி அரசரிடம் இருந்து வாணிபத்திற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டார். அவர் நல்லமிளகு உள்ளிட்ட பொருட்களைச் சேகரித்துக் கொண்டு போர்ச்சுகல்லுக்குத் திரும்பினார். காமா தனது பயணச் செலவை விட அறுபது மடங்கு மதிப்புடைய பொருட்களுடன் இந்தியாவிலிருந்து திரும்பினார்.

வாஸ்கோடகாமாவின் பயணத்தால் கிடைத்த இலாபம் போர்ச்சுக்கீசியர்களை மீண்டும் இந்தியாவிற்குப் பயணம் மேற்கொள்ளத் தூண்டியது. சாமூதிரி போர்ச்சுக்கீசியர்களுக்கு வியாபாரக் குத்தகையை அளிக்கவில்லை. அதன் விளைவாகச் சாமூதிரி மற்றும் போர்ச்சுக்கீசியர்களுக்கு இடையே மோதல்கள் எழுந்தன. சாமூதிரியின் கப்பற்படைத் தலைவர்களாக இருந்த குஞ்ஞாலி மரைக்கார்களிடமிருந்து போர்ச்சுக்கீசியர்கள் கடும் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டி இருந்தது. குஞ்ஞாலி மரைக்கார்களின் காலத்திற்குப் பிறகு போர்ச்சுக்கீசியர்களுக்கு இந்தியாவிலிருந்து அதிக அளவு அச்சுறுத்தல்கள் ஏற்படவில்லை.

### காமாவின் கப்பல்கள்

*ஸாவோ கப்ரியேல், ஸாவோ ராபேல், பெரியோ என்ற மூன்று கப்பல்களில் காமாவும் குழுவினரும் இந்தியாவில் வந்து சேர்ந்தனர்.*

### குஞ்ஞாலி மரைக்கார்

*போர்ச்சுக்கீசியர்களின் தாக்குதல்களுக்கு எதிராக சாமூதிரியையும் கேரளத்தின் மேற்குக் கடற்கரை பகுதிகளையும் பாதுகாத்தவர்கள் குஞ்ஞாலி மரைக்கார்கள் ஆவர். குஞ்ஞாலி மரைக்கார் என்பது ஒரு பதவியின் பெயர் ஆகும். வெவ்வேறு காலங்களில் நான்கு நபர்கள் இந்தப் பதவியைப் பெற்றிருந்தனர். போர்ச்சுக்கீசியர்களைத் தோற்கடித்து சாலியம் கோட்டையைக் கைப்பற்றியவர் மூன்றாம் குஞ்ஞாலி மரைக்கார் ஆவார். நான்காவது குஞ்ஞாலி மரைக்கார் கோவாவில் போர்ச்சுக்கீசியர்களால் தூக்கிலிடப்பட்டார். குஞ்ஞாலி மரைக்கார்களின் தோல்வியுடன் சாமூதிரியின் வீழ்ச்சியும் ஆரம்பமானது.*

### போர்ச்சுக்கீசியர்களின் வருகை இந்தியாவில் ஏற்படுத்திய விளைவுகள்.



படங்கள் 1.2 ● பலவிதமான பொருட்கள்

படத்தில் கொடுக்கப்பட்டுள்ளவற்றின் மலையாளப் பெயர்களைக் கண்டறிந்து பட்டியலிடுங்கள்.

- மேசை
- 
- 
- 
- 
- 




படம் 1.3 ● மானுவல் கோட்டையின் ஒரு பகுதி

இந்தியா மற்றும் போர்ச்சுக்கீசியர்களுக்கு இடையே உள்ள தொடர்பின் விளைவாகப் போர்ச்சுக்கீசிய மொழியிலிருந்து இந்தச் சொற்கள் மலையாள மொழிக்குக் கிடைத்தன.

- முந்திரி (பரங்கிமாவு), பப்பாளி, கொய்யா, அன்னாசி போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டன.

- இந்தியாவில் முதல் ஐரோப்பிய கோட்டை (மானுவல் கோட்டை) கொச்சியில் நிறுவப்பட்டது.
- கொச்சி, கோவா, டாமன் மற்றும் டியூ போன்ற பகுதிகள் போர்ச்சுக்கீசிய ஆட்சியின் கீழ் வந்தன.
- அச்சடி பரவலானது.
- சவிட்டு நாடகம், மார்க்கம்களி போன்ற கலை வடிவங்கள் பரவலாயின.
- ஐரோப்பிய பாணியிலான கட்டடக்கலை ஆரம்பமானது.
- ஐரோப்பிய ஆயுதங்களையும் போர்முறைகளையும் அறிமுகப்படுத்தினர்.
- கிறிஸ்தவ மதக் கல்வி நிலையங்கள் தொடங்கப்பட்டன.

*போர்ச்சுக்கீசியர்களோடுள்ள தொடர்பு இந்தியாவின் பல்வேறு துறைகளில் செலுத்திய தாக்கத்தைக் கண்டறிந்து அட்டவணையை நிரப்புக.*

| அரசியல்துறை | வேளாண்துறை | அறிவியல்துறை | கலாச்சாரத்துறை |
|---|---|---|---|
| | | | |

## டச்சுக்காரர்கள்

போர்ச்சுக்கீசியர்களைத் தொடர்ந்து இந்தியா வந்த ஐரோப்பியர்கள் ஹாலந்து (நெதர்லாந்து) நாட்டைச் சார்ந்தவர்கள் ஆவர். அவர்கள் டச்சுக்காரர்கள் என்று அழைக்கப்பட்டனர். நாகப்பட்டினம், பரோச், அகமதாபாத், சின்சுரா ஆகியவை இந்தியாவில் டச்சுக்காரர்களின் முக்கிய வாணிப மையங்களாக இருந்தன. வாணிப மேலாதிக்கத்திற்கான போட்டியில் டச்சுக்காரர்கள் போர்ச்சுக்கீசியர்களைத் தோற்கடித்தனர்.

## குளச்சல் போர் (Battle of Colachel)

கன்னியாகுமரிக்கு அருகாமையில் உள்ள குளச்சலில் வைத்து 1741 –ஆம் ஆண்டு திருவிதாங்கூர் ஆட்சியாளராக இருந்த மார்த்தாண்டவர்மாவிற்கும் டச்சுக்காரர்களுக்கும் இடையே போர் மூண்டது. டச்சுக்காரர்கள் இந்தப் போரில் தோல்வியடைந்ததால், இந்தியாவில் அவர்களின் ஆதிக்கத்தை இழந்தனர். ஓர் ஐரோப்பிய சக்தி இந்திய ஆட்சியாளரிடம் தோல்வி அடைந்த முதல் போர் இதுவாகும்.



*படம் 1.4 • குளச்சல் போராட்ட நினைவுச் சின்னம்*




*படம் 1.5 ● ஹோர்த்தூஸ் மலபாரிக்கஸின் அட்டைப் படம்*

## ஹோர்த்தூஸ் மலபாரிக்கஸ்

டச்சுக்காரர்களுடனான தொடர்பின் மிகப்பெரிய நன்கொடை 'ஹோர்த்தூஸ் மலபாரிக்கஸ்' என்ற படைப்பாகும். இந்த நூலில் கேரளத்தில் உள்ள 742 மருத்துவ தாவரங்களைக் குறித்த தகவல்கள் விவரிக்கப்பட்டுள்ளன. இந்த நூலை எழுதி வெளியிட டச்சு ஆளுநராக இருந்த ஹென்ரிக் வான் ரீட் (Hendrik-van Rheed) தலைமை தாங்கினார். இட்டி அச்சுதன் என்ற மலையாள வைத்தியர் இந்த நூலை எழுத அவருக்கு உதவினார். அப்புஃபட், ரெங்கஃபட், விநாயக ஃபட் ஆகியோரும் இந்நூலை எழுதுவதற்குப் பங்காற்றினர். மலையாள எழுத்துகள் அச்சிடப்பட்ட முதல் நூல் ஹோர்த்தூஸ் மலபாரிக்கஸ் ஆகும். டாக்டர் கே. எஸ். மணிலால் என்பவர் இந்த நூலை மலையாளம் மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்த்தார்.

### இட்டி அச்சுதன்

இன்றைய ஆலப்புழா மாவட்டத்தில் உள்ள சேர்த்தலா தாலுகாவில் உள்ள கடக்கரப்பள்ளி கிராமத்தில் ஒரு பாரம்பரிய வைத்தியக் குடும்பத்தில் பிறந்த புகழ்பெற்ற நாட்டு வைத்தியராக இருந்தவரே இட்டி அச்சுதன்.



*படம் 1.6 ● ஹோர்த்தூஸ் மலபாரிக்கஸிலுள்ள ஒரு பக்கம்*

*இது ஹோர்த்தூஸ் மலபாரிக்கஸிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு படம் ஆகும். இது எந்தத் தாவரம் என்பதைக் கண்டறியவும்.*

●

## பிரெஞ்சுக்காரர்கள்

டச்சுக்காரர்களுக்குப் பிறகு, பிரிட்டீஷ்காரர்களும் (ஆங்கிலேயர்கள்) பிரெஞ்சுக்காரர்களும் வாணிபத்திற்காக இந்தியாவிற்கு வந்தனர். தென்னிந்தியாவின் ஆதிக்கத்திற்காக ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையே நடைபெற்ற போர்தான் கர்நாடகப் போர். இந்தப் போரில் ஆங்கிலேயர்களே வெற்றி பெற்றனர். இதன் விளைவாக, பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கம் பாண்டிச்சேரி (புதுச்சேரி) யானம், காரைக்கால், மாஹி போன்ற பகுதிகளில் மட்டுமாகச் சுருங்கின.

*கொடுக்கப்பட்டுள்ள நிலப்படத்தை உற்று நோக்கி போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருந்த முக்கிய மையங்களைக் கண்டறியவும்.*




*படம் 1.7*

| போர்ச்சுகல் ஆக்கிரமித்த பகுதிகள் | டச்சுக்காரர்கள் ஆக்கிரமித்த பகுதிகள் | பிரெஞ்சுக்காரர்கள் ஆக்கிரமித்த பகுதிகள் |
|---|---|---|
| • கொச்சி | • நாகப்பட்டினம் | • பாண்டிச்சேரி |
| • | • | • |
| • | • | • |
| • | • | • |

## கர்நாடகப் போர்கள்

*இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே நடைபெற்ற போர்கள் கர்நாடகப் போர்கள் என்று அழைக்கப்படுகின்றன. இன்றைய தமிழ்நாட்டின் பெரும்பான்மையான பகுதிகளும் ஆந்திரப் பிரதேசத்தின் தென் கடலோரப் பகுதிகளும் உள்ளடங்கிய பகுதியே கர்நாடகா ஆகும். இதில் மூன்று கர்நாடகப் போர்கள் நடந்துள்ளன.*

## வணிகத்திலிருந்து அதிகாரத்தை நோக்கி

இந்தப் பாடத்தின் ஆரம்பத்தில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியைக் குறித்து நாம் விவாதித்தோம் அல்லவா? ஆங்கிலேயர்கள் ஆசியாவுடன் வாணிபத் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள 1600 – ஆம் ஆண்டு

- *1639 – ஆம் ஆண்டு மெட்ராஸ் துறைமுகத்தின் சுங்க வருவாயின் பாதியை வழங்க வேண்டும் என்ற நிபந்தனையின்படி, உள்ளூர் மன்னரான தமர்லா வெங்கடாந்திரி நாயக்கா, மெட்ராஸ் துறைமுகத்தை நீண்ட காலத்திற்கு ஆங்கிலேயர்களுக்கு வழங்கினார்.*
- *1662 – ஆம் ஆண்டு போர்ச்சுக்கீசிய இளவரசியான காதரினைத் திருமணம் செய்த போது ஆங்கிலேய மன்னர் இரண்டாம் சார்லசுக்குப் பரிசாகக் கிடைத்த பகுதியே பம்பாய். பின்னர், இந்தப்பகுதி ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டது.*
- *1698 –ஆம் ஆண்டு சுதனதி, காலிகட்டா, கோவிந்த்பூர் ஆகிய மூன்று கிராமங்களைச் சுற்றி ஆங்கிலேயர்கள் கட்டிய கோட்டையே வில்லியம் கோட்டை (Fort William). படிப்படியாக, இந்தப் பகுதி ஒரு நகரமாக மாறி கல்கத்தா என்று அழைக்கப்பட்டது.*

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியை நிறுவினர். கம்பெனியின் பிரதிநிதியான கேப்டன் வில்லியம் ஹாக்கின்ஸ், அன்றைய முகலாயப் பேரரசர் ஜஹாங்கீரிடமிருந்து அனுமதியைப் பெற்று, குஜராத்திலுள்ள சூரத்தில் ஒரு வணிக நிலையத்தை (தொழிற்சாலை) நிறுவினார். தொடர்ந்து, இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் கம்பெனியின் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து கம்பெனி, மதராஸ் (சென்னை), பம்பாய் (மும்பை), கல்கத்தா (கொல்கத்தா) ஆகிய பகுதிகளில் ஆதிக்கத்தைப் பெற்றுக்கொண்டு அந்த இடங்களின் ஆட்சி நிர்வாகத்தில் தலையிடத் தொடங்கியது.

ஆங்கிலேயர்கள், 1757 –ஆம் ஆண்டு நடைபெற்ற பிளாசிப் போரின் வாயிலாக இந்தியாவில் அரசியல் ஆதிக்கத்தை நிறுவினர். இந்தப் போரில் வங்காள நவாபான சிராஜ் – உத்–தௌளாவை, இராபர்ட் கிளைவின் தலைமையிலான ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் படை தோற்கடித்தது. வங்காளத்தின் ஆட்சியைக் கைப்பற்றியது ஆங்கிலேயர்களுக்கு இந்தியாவின் பிற பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர உதவியது. வேளாண்மை வளம் நிறைந்த வங்காளத்தின் நிலவரியினால், ஆங்கிலேயர்கள் தங்கள் இராணுவ பலத்தை மேம்படுத்தி, நாட்டின் பிற பகுதிகளைக் கைப்பற்றுவதற்கான பணத்தைத் திரட்டினர். 1764 – ஆம் ஆண்டு பக்சார் என்ற இடத்தில் வைத்து நடைபெற்ற போரின் வாயிலாகப் பீகார், வங்காளம், ஒரிசா போன்ற மாகாணங்களில் வரி வசூலிக்கும் உரிமையைக் கம்பெனி பெற்றுக் கொண்டது. இதன்மூலம் இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி வலுவடைந்தது. முகலாய ஆட்சியாளரான இரண்டாம் ஷா ஆலம், அவத் நவாபான ஹுஜ – உத் – தௌளா மற்றும் வங்காள நாவாபான மிர்காசிம் ஆகியோரின் கூட்டுப்படைகளை ஆங்கிலேயர்கள் இந்தப் போரில் தோற்கடித்தனர்.

*மெட்ராஸ், பம்பாய், கல்கத்தா ஆகிய பகுதிகளில் ஆதிக்கத்தைப் பெற்றுக்கொண்டு, ஆட்சி நிர்வாகத்தில் கம்பெனி தலையிடக் காரணமான சூழ்நிலைகளை விவாதம் செய்யுங்கள்.*

"*எனக்கு இரண்டாயிரம் வீரர்களை அனுப்புங்கள். நான் இந்தியாவை அடக்கலாம்*".

*– இராபர்ட் கிளைவ்*

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் படைத்தளபதியான இராபர்ட் கிளைவின் வார்த்தைகளை நீங்கள் வாசித்தீர்கள் அல்லவா. அவர் ஏன் இவ்வாறு தெரிவித்தார்?

- இந்திய நாட்டரசுகளுக்கு இடையே காணப்பட்ட ஒற்றுமையின்மை.
- ஆங்கிலேயரின் மேம்பட்ட இராணுவம் மற்றும் தொழில்நுட்பம்
- 

## நாட்டரசுகளும் கம்பெனியும்

ஆங்கிலேயர்கள் இந்தியாவின் நாட்டரசுகளைப் போர்கள் மற்றும் இராஜ தந்திரங்களின் வாயிலாகத்தான் கீழ்ப்படுத்தினர்.

தென்னிந்தியாவில் நாட்டரசாக இருந்த மைசூருக்கும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் இடையே நடைபெற்ற போர்களே ஆங்கிலோ– மைசூர் போர்கள். மைசூர் ஆட்சியாளரான ஹைதர் அலியும் அவரது மகன் திப்பு சுல்தானும் மைசூர் படையை வழிநடத்தினர். கம்பெனி இராணுவமும் மைசூர் சுல்தான்களும் நான்கு முறை ஒருவருக்கொருவர் மோதிக்கொண்டனர். 1782– இல் ஹைதர் அலி இறந்த பின்பு திப்புசுல்தான் மைசூர் படைகளுக்குத் தலைமை தாங்கினார். 1799 – ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காம் மைசூர் போரில் திப்பு சுல்தான், கம்பெனி படைகளால் கொலை செய்யப்பட்டதால். மைசூர் ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.


படம் 1.8 • திப்புசுல்த்தான்

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் மராட்டிய அரசுக்கும் இடையே நடைபெற்ற போர்கள் ஆங்கிலோ – மராட்டிய போர்கள். மூன்றாவது ஆங்கிலோ – மராட்டிய போரின்போது மராட்டியம் உள்ளிட்ட பகுதிகள் ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் சீக்கியர்களுக்கும் இடையே நடைபெற்ற ஆங்கிலோ – சீக்கிய போர்களில், சீக்கியர்கள் தோல்வியடைந்ததால் பஞ்சாப் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வந்தது.

*இந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கம் தொடர்பான முக்கிய நிகழ்வுகளை உள்ளடக்கி நழுவுப் படம் தயார் செய்து வகுப்பில் வெளியிடவும்.*

பிடித்தடக்கிய பகுதிகளிலிருந்து அதிகபட்ச செல்வத்தைத் திரட்டுவதுதான் ஆங்கிலேயர்களின் நோக்கமாக இருந்தது. அதற்காக அவர்கள் வாணிபம், வரி வசூல், போர்கள் போன்ற வழிமுறைகளைப் பின்பற்றினர்.

### ஆங்கிலேயர்கள் நடைமுறைப்படுத்திய வரிக் கொள்கைகள்

| வரி | நடைமுறைப் படுத்திய பகுதிகள் | நடைமுறைப் படுத்திய நபர் | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| நிரந்தர நிலவரிக் கொள்கை (1793) (Permanent Land Revenue Settlement) | வங்காளம்<br>பீகார்<br>ஒரிசா | காரன்வாலிஸ் பிரபு | • நிலத்தின் உரிமையாளர்களாக இருந்த ஜமீன்தார்கள் ஆங்கிலேயர்களுக்காக அதிக விகிதத்தில் வரியை வசூலித்தனர்.<br>• விளைச்சலில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைக் கணக்கிடாமல் குறிப்பிட்ட தொகையை விவசாயிகள் வரியாகச் செலுத்த கட்டாயப்படுத்தப்பட்டனர். |

| | | | |
|---|---|---|---|
| ரயத்வாரிக் கொள்கை (1820) (Ryotwari System) | தென்னிந்தியா டக்கான் | தாமஸ் மன்றோ, அலெக்சாண்டர் ரீட் | • விவசாயிகளை நிலத்தின் உரிமையாளர்களாகக் கருதினர்.<br>• ஆங்கிலேயர்கள் விவசாயிகளிடமிருந்து நேரடியாக வரியை வசூலித்தனர்.<br>• வரி செலுத்தத் தவறிய விவசாயிகளின் நிலத்தை ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர். |
| மஹல்வாரிக் கொள்கை (1822) (Mahalwari System) | வட இந்தியா மத்திய இந்தியா பஞ்சாப் | ஹோல்ட் மக்கன்சி | • கிராமத்தை ஓர் அலகாகக் கணக்கிட்டு வரியை வசூலித்தனர்.<br>• வரி செலுத்தத் தவறும் கிராமத்தை ஆங்கிலேய இந்தியாவுடன் இணைத்தனர். |

ஆங்கிலேயர்கள் நடைமுறைப்படுத்திய வரிக்கொள்கைகளின் பொதுவான சிறப்பியல்புகளை நாம் ஆராய்வோம்.

- அதிகமான வரிவிகிதம்
-
-
-

ஆங்கிலேயர்களின் வரிக் கொள்கைகளின் விளைவாக வேளாண் நிலங்களை இழக்காமல் இருப்பதற்காக விவசாயிகள் பணம் கடன் கொடுப்பவர்களிடமிருந்து (Money Lenders) கடன் வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதன் விளைவாக விவசாயிகள் கடனாளிகள் ஆயினர். இவர்களுடைய நிலங்களை அபகரிப்பதற்கான உரிமை பணம் கடன் கொடுத்தவர்களுக்கு இருந்தன. ஆங்கிலேயர்களின் புதிய சட்ட திட்டங்களும் நிலவரிக் கொள்கைகளும் பணம் கடனுக்குக் கொடுப்பவர்களை ஊக்கப்படுத்தின. உணவுப் பயிர்களுக்குப் பதிலாக ஆங்கிலேயர்களுக்குத் தேவையான நீலம், பருத்தி போன்ற பணப் பயிர்களைப்பயிரிட ஆங்கிலேயர்கள் விவசாயிகளைக் கட்டாயப்படுத்தினர். பணப் பயிர்களின் பரவல் உணவுப் பயிர்கள் குறைவதற்கும் உணவுப் பற்றாக்குறைக்கும் வழி வகுத்தன. வேளாண்துறையில் அதிகரித்த இந்த வணிகமயமாக்கல் விவசாயிகளைச் சுரண்டல் செய்ய பணம் கடன் கொடுப்பவர்களுக்கு உதவியது. அறுவடைக்குப் பின், விவசாயிகள் வேளாண் விளை பொருட்களைக் கிடைக்கின்ற விலைக்கு விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆங்கிலேயர்களின் வரிக் கொள்கைகள் விவசாயிகளை எவ்வாறெல்லாம் பாதித்தன என நாம் ஆராய்வோம்.

- அதிக வரி விகிதத்தைச் செலுத்த இயலாமல் விவசாயிகள் தவித்தனர்.
- வெள்ளப்பெருக்கு மற்றும் வறட்சியால் பயிர்கள் சேதம் அடைந்தாலும் வரிச்சலுகைக் கிடைக்கவில்லை.

- விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களை இழக்காமல் இருப்பதற்காகப் பணம் வட்டிக்கு கடன் கொடுப்பவர்களைச் சார்ந்து இருக்க வேண்டியதாயிற்று.
- கடனாளிகளான விவசாயிகள் நிலத்தை இழந்தனர்.

ஆங்கிலேயர்களின் கொள்கைகள் விவசாயிகளைப் போலவே கைத்தொழிலாளர்களையும் துயரத்தில் ஆழ்த்தியது. இங்கிலாந்தில் இருந்து இயந்திரத்தால் செய்யப்பட்ட பொருட்கள் இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்டன. இவைகளோடுள்ள போட்டியின் காரணமாக கைத்தொழிலாளர்களின் உற்பத்திப் பொருட்களான பருத்தி, பட்டு, கம்பளித் துணிகள், மண்பாண்டங்கள், தோல், சமையல் எண்ணெய் போன்ற பொருட்கள் சந்தை மதிப்பை இழந்தன. இது கைவினைத்தொழிலில் ஈடுபட்டவர்களின் வேலை இழப்பிற்குக் காரணமானது. பலர் தங்களது பாரம்பரிய கைத்தொழில்களைக் கைவிட வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டனர்.

*ஆங்கிலேயர்களின் பொருளாதாரக் கொள்கைகள் விவசாயிகள் மற்றும் கைத்தொழிலாளர்களை எவ்விதம் பாதிப்படையச் செய்தன எனக் கலந்துரையாடல் செய்து குறிப்பு தயார் செய்யவும்*

## சுரண்டலுக்கு எதிரான போராட்டங்கள்

ஆங்கிலேயர்களின் பொருளாதாரக் கொள்கைகள் இந்தியாவின் பல்வேறு பிரிவு மக்களைப் பாதிப்படையச் செய்தன. மக்கள் அவர்களுக்கு எதிராக போராட்டங்களை ஆரம்பித்தனர். அத்தகைய சில போராட்டங்களை நாம் அறிந்து கொள்வோம்.

### போராளிகளான துறவிகள்

*1773 – இல் ஒரு கோடைக்காலம். வங்காளத்தின் பதசின்ஹும் என்ற கிராமத்தில் மழை பெய்த போது மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். ஆனால் மழை விரைவில் நின்று விட்டது. பயிர்கள் காய்ந்து போயின. நாட்டில் பஞ்சம் பரவியது. அரசாங்கம் வரி வசூலிப்பதை நிறுத்தவில்லை. வரியையும் நிலுவைத்தொகையையும் கட்டாயமாக வசூலிக்க அவர்கள் விரைந்து செயல்பட்டனர். வங்காளம் பரிதாபகரமான நிலையில் காணப்பட்டது.*

*மக்கள் அவதிப்பட்டனர். கால்நடைகள் விற்கப்பட்டன. விவசாயக் கருவிகளை விற்றனர். விதைகள் கூட விற்க வேண்டிய நிலைமை வந்தது. வீட்டு உபயோகப் பொருட்களையும் பாத்திரங்களையும் விற்றனர். சிலர் தங்கள் வீட்டின் கதவைக் கூட உடைத்து விற்க வேண்டியதாயிற்று. மனிதர்களுக்கு மதிப்பு இல்லையே. அதனால் மனிதர்களை விற்க இயலவில்லை.*

*கிராமத்தினர் புற்களையும் இலைகளையும் கிழங்குகளையும் பறித்துச் சாப்பிட்டனர். எலிகளையும் பூனைகளையும் நாய்களையும் கொன்று தின்று பசியை அடக்கினர். நோய்கள் எங்கும் பரவின. காய்ச்சல், ப்ளேக் மற்றும் பெரியம்மை போன்ற நோய்கள் காற்றைப் போல் பரவின. நோயுற்றவர்களைக் கவனிக்கவோ, இறந்தவர்களை அடக்கம் செய்யவோ கூட யாரும் இல்லாத நிலை ஏற்பட்டது. வீடுகளில் சடலங்கள் அனாதையாகக் கிடந்து அழுகி நாறின.*

*பங்கிம் சந்திர சாட்டர்ஜி : ஆனந்த மடம்*

*பங்கிம் சந்திர சாட்டர்ஜியின் ஆனந்தமடம் என்ற வங்காள நாவலின் ஒரு பகுதியைத்தான் மேலே நீங்கள் வாசித்தீர்கள். ஆனந்தமடம் என்ற நாவலிலிருந்து அன்றைய வங்காள மக்களின் அவல நிலைகளையும் அதற்குக் காரணமான சூழ்நிலைகள் எவையெல்லாம் என்றும் விவாதிக்கவும்.*

**வந்தே மாதரம்**

*நமது தேசிய கீதமான வந்தே மாதரம், 1882 – ஆம் ஆண்டு பங்கிம் சந்திர சாட்டர்ஜி வங்காள மொழியில் இயற்றிய ஆனந்த மடம் என்ற நாவலிருந்து எடுக்கப்பட்டது. பவாநந்தன் என்ற கதாபாத்திரம் பாடுகின்ற பாடலாகத்தான் வந்தே மாதரம் நாவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சத்தைப் போக்குவதற்கு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அதனால் ஏழை விவசாயிகளும் தொழிலாளர்களும் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராட்டம் செய்தனர். விவசாயிகளின் கலகத்திற்குச் துறவிகளின் ஆதரவும் இருந்தன. அதனால், இவை துறவி கலகங்கள் என்று அழைக்கப்படுகின்றன. துறவிகளுடன் ஃபக்கீர்களும் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராட்டத்தில் இணைந்து கொண்டனர். எனவே இந்தப் போராட்டத்தைச் துறவி ஃபக்கீர் கலகம் என்றும் அழைக்கின்றனர். பவானி பதக் மற்றும் மஜ்னு ஷா ஆகியோர் துறவி – ஃபக்கீர் கலகத்திற்குத் தலைமை தாங்கினர்.

## விவசாயத்திலிருந்து போராட்டத்திற்கு

ஆங்கில காலனித்துவ ஆட்சிக்கு எதிராக நடைபெற்ற மிக முக்கியமான விவசாயப் போராட்டமே வங்காளத்தில் நடைபெற்ற நீலம் விவசாயிகள் போராட்டம் (1859). இதற்குக் காரணமான சூழ்நிலைகள் எவை என நாம் ஆராய்வோம்.

- ஆங்கிலேய தோட்டக்காரர்கள் (Indigo Planters) கிராமப்புறங்களில் நிறுவிய தொழிற்சாலைகளுக்குத் தேவையான அவுரிச் செடியை விவசாயம் செய்ய விவசாயிகளைக் கட்டாயப்படுத்தினர்.
- அவுரிச் செடியில் இருந்து உற்பத்திச் செய்யப்படும் நீலம் ஆங்கிலேயர்களுக்கு மட்டுமே விற்க வேண்டும்.
- ஆங்கிலேயர்கள் நீலத்திற்குச் சந்தை விலையை விட குறைவான விலையை விவசாயிகளுக்கு அளித்தனர்.
- கடுமையான உணவுப் பற்றாக்குறை, சுரண்டல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு இது வழி வகுத்தது.
- செயற்கை சாயங்கள் கண்டுபிடிக்கப்பட்டதால் நீலத்தின் தேவை குறைந்து, வறுமை அதிகரித்தது. வேறு வழியின்றி விவசாயிகள் ஆங்கிலேயர்களுக்கு எதிரான போராட்டப் பாதைக்கு நேராகத் திரும்பினர்.

**நீல்தர்ப்பண்**

*வங்காளத்தில் அவுரிச் செடி விவசாயிகள் அனுபவித்த துயரங்களை அடிப்படையாகக் கொண்டு 1860 –ஆம் ஆண்டு தீனபந்துமித்ரா இயற்றிய நாடகமே நீல்தர்ப்பண்.*

திகம்பர் விஸ்வாஸ் மற்றும் விஷ்ணு விஸ்வாசின் தலைமையில்தான் அவுரிச் செடி விவசாயிகளின் போராட்டம் ஆரம்பமானது. வங்காளம் முழுவதும் போராட்டம் பரவியதால் விவசாயிகள் அவுரிச் செடி விவசாயத்தைக் கைவிட்டனர். தொடர்ந்து நீலம் தொழிற்சாலைகளைத் ஆக்கிரமித்தனர். விவசாயிகளின் எதிர்ப்பு வலுவடைந்ததால்

தோட்டக்காரர்கள் தொழிற்சாலைகளை அடைத்துப் பூட்டினர். இதனால் வங்காளத்தில் அவுரிச் செடி விவசாயம் ஏறக்குறைய இல்லாமலானது.

### காடு எழுந்தபோது

*சந்தாள்கள் மிகவும் சாகசமான துணிச்சலைக் காட்டினர். எப்போது பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்கள் எனத் தெரியாமல் இருந்தாலும் அவர்கள் சரணடைய மறுத்து விட்டனர். ஒருமுறை 45 சந்தாள்கள் ஒரு மண் குடிசையில் அடைக்கலம் புகுந்து ஆங்கிலேயப் படைவீரர்களுக்கு எதிராகப் போராடினர். குடிசைக்கு நேராகப் படபடவென வெடிகுண்டுகள் வீசப்பட்டன. ஒவ்வொரு முறையும் சந்தாள்கள் அம்பினால் பதிலடி கொடுத்தனர். இறுதியில் துப்பாக்கிச் சூட்டை நிறுத்திவிட்டு குடிசைக்குள் நுழைந்த படை வீரர்களுக்கு ஒரே ஒரு முதியவரை மட்டுமே உயிருடன் காணமுடிந்தது. ஒரு படைவீரன் அவரிடம் சரணடையக் கூறினார். அப்போது விரைந்து வந்த முதியவர் தனது கோடாரியால் அவனை வெட்டி வீழ்த்தினார்.*

*பிபின் சந்திரா– இந்தியாவின் சுதந்திரப்போராட்டம்*

சந்தாள் பழங்குடி இன மக்களின் துணிச்சலைக் காட்டும் குறிப்பே மேலே கொடுக்கப்பட்டுள்ளது. சந்தாள் இன மக்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஏன் போராட்டம் செய்தார்கள்?

18–ஆம் நூற்றாண்டில் வங்காள மாகாணத்தில் ராஜ்மஹல் குன்றுகளில் குடியேறிய பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்களே சந்தாள்கள். நிலப் பிரபுக்கள் அநியாயமாக வரி வசூலித்தனர். கந்து வட்டிக்காரர்கள் நிரந்தரமாகப் பணம் கடன் கொடுத்தனர். அதற்கு ஈடாக அவர்களுடைய தானியங்களையும் வனப் பொருட்களையும் எடுத்துக் கொண்டனர். இவை அனைத்தும் ஆங்கிலேயர்களின் ஆதரவுடன் தான் நடைபெற்றன. நிலத்தோடு பழங்குடி இன மக்களுக்கு உள்ள உறவைக் குறித்து சரியான புரிதல் இல்லாத ஆங்கிலேய அரசாங்கத்திற்கு இவை அனைத்தும் வரி வருவாயை அதிகரிப்பதற்கான வழிமுறைகளாக மட்டுமே இருந்தன.

1855 – ஆம் ஆண்டு தங்களுக்கு நேர்ந்த அநீதிகளுக்கு எதிராகப் பழங்குடி இன மக்களை அணிதிரட்டி ஆங்கிலேயர்களுக்கு எதிராக சந்தாள் இன மக்கள் போராட்டங்களை ஆரம்பித்தனர். இந்தப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கிய சிநோவையும் கான்குவையும் ஆங்கிலேயர்கள் படுகொலை செய்தனர். போராட்டத்தைக் கொடூரமாக அடக்கினாலும் பழங்குடி இன மக்களின் எதிர்ப்பு வரலாற்றில் சந்தாள் கலகம் ஒரு முக்கிய பகுதியாக மாறியது.

### உல்குலான் (Great Tumult)

சந்தாள் கலகத்தைப் போன்று இந்தியாவின் பல பகுதிகளிலும் பழங்குடி இன மக்களின் போராட்டங்கள் நடைபெற்றன. 19 – ஆம் நூற்றாண்டின்

இறுதி தசாப்தத்தில் நடைபெற்ற பழங்குடி இன மக்களின் கலகமே 'உல்குலான்'. இது பொதுவாக முண்டா கலகம் என்று அழைக்கப்படுகிறது. உல்குலான் என்ற சொல்லுக்குப் 'பெரும் குழப்பம்' அல்லது 'பெரும் சலசலப்பு' என்று பொருள். இன்றைய ஜார்க்கண்டில் முண்டா பழங்குடியினரின் வசிப்பிடங்களில் ஆங்கிலேய காலனித்துவ ஆட்சியைத் தகர்த்து முண்டாராஜ் (ராஜ்ஜியம்) நிறுவ முயன்ற பிர்சா முண்டாவே இந்தக் கலகத்திற்குத் தலைமை தாங்கினார்.

### பிர்சா முண்டா



படம் *1.9* • பிர்சா முண்டா

- *பிர்சா முண்டாவின் பிறந்த நாளான நவம்பர் 15 – ஆம் நாள் ஜன்ஜாதியா கௌரவ் திவஸ் (பழங்குடியினரின் பெருமை தினம்) ஆக 2021 –ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் கொண்டாடப்படுகிறது.*
- *இந்திய நாடாளுமன்றத்தில் உருவப்படம் வைத்து கௌரவிக்கப்படும் ஒரே ஒரு பழங்குடி இனத் தலைவர் பிர்சா முண்டா ஆவார்..*
- *பிர்சா முண்டாவை முதன்மையான கதாபாத்திரமாக்கி இக்பால் துரானி இயற்றிய நூலே காந்தி சே பஹலே காந்தி.*
- *பிர்சா முண்டாவை முதன்மையான கதாபாத்திரமாக்கி மகாஸ்வேதாதேவி இயற்றிய நூல் ஆரண்ய அதிகார்*

இந்தப் போராட்டத்தின் காரணங்களை ஆராய்வோம்.

- ஆங்கிலேய காலனித்துவ சுரண்டல் மற்றும் நில அபகரிப்பு.
- வட்டிக்குப் பணம் கடன் கொடுப்பவர்கள் மற்றும் வியாபாரிகளின் பொருளாதார சுரண்டல்.

1899 – ஆம் ஆண்டு முண்டா பழங்குடியின மக்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்திய போராட்டத்தை ஆரம்பித்தனர். பல்வேறு இடங்களில் ஆங்கிலேய காவலர்களுடன் மோதல்கள் ஏற்பட்டன. ராஞ்சியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஏராளம் முண்டா பழங்குடியினர் கொலை செய்யப்பட்டனர். பிர்சா முண்டா சிறையில் அடைக்கப்பட்டு அங்கேயே இறந்து போனார். முண்டா போராட்டத்தை ஆங்கிலேயர்கள் கொடூரமாக அடக்கினர்.

குறிச்சியர் கலகம், பஹாரியா கலகம், கோல் கலகம், பீல் கலகம், காசி கலகம் போன்றவை ஆங்கிலேயர்களுக்கு எதிராக இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற சில பழங்குடி இன மக்களின் போராட்டங்களாகும்.

## போராட்டத்தின் கர்ஜனை

ஆங்கிலேயர்களின் கொள்கைகள் தமிழ்நாட்டின் படைத்தளபதிகளாக இருந்த பாளையக்காரர்களையும் பாதித்தன.

### பாலிகர்

பாளையக்காரர்கள் பாளையம் அல்லது இராணுவத்தளம் எனப் பொருள்படும் பாளையக்காரர் என்ற தமிழ்ச் சொல்லிலிருந்துதான் பாலிகர் என்ற ஆங்கிலச் சொல் உருவானது.

திருநெல்வேலியில் உள்ள பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரராக இருந்த வீரபாண்டிய கட்டபொம்மனும் சிவகங்கை பாளையக்காரர்களாக இருந்த மருதுபாண்டிய சகோதரர்களும் ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடைபெற்ற



படம் 1.10 ● வீரபாண்டிய கட்டப்பொம்மன்

போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தனர். மக்களின் பாதுகாவலர் என்ற நிலையில் கட்டப்பொம்மன் மக்களுடன் நல்லுறவு கொண்டிருந்தார். மக்களிடமிருந்து வரி வசூலிக்கும் பொறுப்பு பாளையக்காரர்களுக்கு இருந்தன. பாஞ்சாலங்குறிச்சியின் ஆட்சியாளர் ஆங்கிலேயர்களிடம் சரணடைந்த போதிலும் கட்டப்பொம்மன் அதற்குத் தயாராகவில்லை. ஆங்கிலேயர்கள் நடைமுறையிலுள்ள வரிகளை அதிகரிக்கச்செய்து மக்களை மேலும் சிரமப்படுத்தினர். வரி வசூலிப்பைக் கேள்வி கேட்டது கட்டப்பொம்மனை ஆங்கிலேயர்களின் எதிரியாக மாற்றியது. கட்டப்பொம்மனும் சிவகங்கையைச் சேர்ந்த பாளையக்காரர்களான மருதுபாண்டிய சகோதரர்களும் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராட்டம் செய்து வீர மரணம் அடைந்தனர்.

## ஆற்றிங்கல் கலகம்

1721–ஆம் ஆண்டு நடைபெற்ற ஆற்றிங்கல் கலகம் இந்தியாவில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடைபெற்ற ஆரம்கால ஒருங்கிணைந்த போராட்டம் ஆகும். ஆங்கிலேயர்கள் நல்லமிளகு வாணிபத்தோடு தொடர்பு கொண்டும், உள்நாட்டு நிர்வாகக் காரியங்களில் தலையிட்டும், மக்களிடையே இன – ஜாதி வெறுப்பை வளர்த்தியும், ஆற்றிங்கல் பகுதியில் அடிக்கடி அராஜகத்தை ஏற்படுத்த தொடர்ந்து முயன்றனர். ஆட்சியாளராக இருந்த ஆற்றிங்கல் ராணிக்கு ஒவ்வொரு புத்தாண்டுக்கும் பரிசுகளை வழங்கும் வழக்கத்தை 1721 –ஆம் ஆண்டிலும் மீண்டும் செய்ய ஆங்கிலேயர்கள் முயற்சி செய்தனர். ஆனால் இது ஏதாவது ஆபத்திற்குக் காரணமாகும் எனப் பயப்பட்டதால் சில உள்நாட்டுத் தலைவர்கள் எதிர்த்தனர். உள்நாட்டுத்



படம் 1.12 ● அஞ்சுதெங்கு கோட்டை

## வேலூர் கலகம்



படம் 1.11 ● வேலூர் கலக நினைவுச் சின்னம்

*இந்தியாவில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடைபெற்ற முதல் இராணுவக் கலகம்தான் தமிழ்நாட்டில் நடைபெற்ற வேலூர் கலகம். ஆங்கில இராணுவத்தில் இருந்த இந்தியர்களே இந்தக் கலகத்திற்குத் தலைமை தாங்கினர். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்திய இராணுவ வீரர்களின் சீருடையில் செய்த மாற்றங்களே இந்தக் கலகத்திற்கு முக்கிய காரணமாக இருந்தது. 1806 –ஆம் ஆண்டு நடைபெற்ற கலகம் ஆங்கிலேயர்களால் ஒடுக்கப்பட்டது என்றாலும் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பிற்காலத்தில் நடைபெற்ற போராட்டங்களுக்கு வேலூர் கலகம் தூண்டுதலாக அமைந்தது.*

தலைவர்கள் வழியாக மட்டுமே பரிசுகளை வழங்க வேண்டும் என்ற அவர்களின் கருத்தைப் புறக்கணித்து கிஃபோர்டின் தலைமையிலான ஏறக்குறைய 140 ஆங்கிலேயர்களைக் கொண்ட குழு ஆற்றிங்கல் ராணிக்கு பரிசுகளை வழங்க வந்ததே மோதலுக்கு வழிவகுத்தது. இந்தக் குழுவினரை இனம் – நிறம் – ஜாதி – மத பாகுபாடின்றி அப்பகுதி மக்கள் தாக்கிக் கொன்றனர். மேலும், அஞ்சுதெங்கில் இருந்த ஆங்கிலேயக் கோட்டையைச் சுற்றி வளைத்து முற்றுகை இட்டனர். கேரளத்தில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக நடைபெற்ற ஆரம்பக்கால ஒருங்கிணைந்த மக்கள் போராட்டம் என்ற நிலையில் ஆற்றிங்கல் கலகம் முக்கியத்துவம் பெறுகிறது.

## பெண்கள் முன்னேற்றம்



*படம் 1.13 • கிட்டூர் ராணி சென்னம்மா*

ஆங்கிலேயர்களின் கொள்கைகள் இந்திய ஆட்சியாளர்களையும் பாதித்தன. ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராடிய வீர பெண்மணிதான் கிட்டூர் ராணி சென்னம்மா. மராட்டிய ஆட்சியின் மேலாதிக்கத்தை அங்கீகரித்த கர்நாடக சிற்றரசு தான் கிட்டூர். மூன்றாவது ஆங்கிலோ– மராட்டியப் போரில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்ற பிறகு கிட்டூர் பகுதி ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. சிவலிங்க ருத்ரதேசாய் என்பவர் கிட்டூரின் ஆட்சியாளராக இருந்தார். அவர் இறந்த பிறகு விதவையான சென்னம்மா ஒர் ஆண் குழந்தையைத் தத்தெடுக்க முடிவு செய்தார். இதை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி தடை செய்து, கிட்டூரைப் ஆங்கில இந்தியாவுடன் இணைத்துக் கொண்டது. இதனால் கோபமடைந்த கிட்டூர் ராணி சென்னம்மா ஆங்கிலேயர்களுடன் போரை அறிவித்தார். 1829 – இல் ஆங்கிலேயர்களின் காவலில் இருந்தபோது ராணி சென்னம்மா மரணம் அடைந்தார்.

*ஆங்கிலேயர்களுக்கு எதிராக இந்தியாவில் நடைபெற்ற கலகங்களைப் பகுப்பாய்வு செய்து அட்டவணையை முழுமைப்படுத்துங்கள்.*

**ஆங்கிலேயருக்கு எதிரான கலகங்கள்**



## ஆங்கில ஏகாதிபத்தியத்தை நடுக்கிய புயல்காற்று

*"கன்வரும் அவரது குழுவினரும் ஆற்றின் நடுப்பகுதியை நோக்கி நகர்ந்த போது ஆங்கிலேயப் படைகள் கரையிலிருந்து துப்பாக்கிச் சூட்டை நடத்தினர். கன்வர்சிங்கின் இடது கையில் சுடப்பட்டது. அவரது கை உடைந்து தொங்கியது. கன்வர் சிங் மீண்டும் தயங்கவில்லை. சாகசக்காரனான கன்வர்சிங் தனது அரையில் வைத்திருந்த கத்தியை எடுத்து, பயனற்ற கையை வெட்டியெடுத்தார். நான் கங்கை அன்னைக்கு இதைக் காணிக்கையாகச் செலுத்துகிறேன் என்று கூறி வெட்டியெடுத்த உடல் பகுதியை ஆற்றின் படுகையில் வீசி எறிந்தார்.*

*கே.எஸ்.ஐ.சி.எல் – தேசிய சுதந்திரப் போராட்ட வரலாறு குழந்தைகளுக்கு*

1857–ஆம் ஆண்டு போராட்டத்தில் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடிய கன்வர் சிங்கின் தைரியத்தைக் குறித்த வார்த்தைகள்தான் இவை.



படம் 1.14 ● கன்வர்சிங்

கன்வர் சிங் ஏன் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடினார்?

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராக இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் தனிப்பட்ட போராட்டங்கள் நடந்ததை நீங்கள் புரிந்து கொண்டீர்கள் அல்லவா? இத்தகைய போராட்டங்கள் அனைத்தும் கம்பெனி இராணுவத்தால் ஒடுக்கப்பட்டன. ஆனால் 1857 –ஆம் ஆண்டு ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இந்தியாவில் ஒருங்கிணைந்த கலகம் நடைபெற்றது. எனவே, வரலாற்று ஆசிரியர்கள் இந்தக் கலகத்தை இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் எனச் சிறப்பித்துக் கூறியுள்ளனர். சாதாரண மக்கள், விவசாயிகள், கைவினைக் கலைஞர்கள், சிற்றரசர்கள், இராணுவ வீரர்கள் நிலப்பிரபுக்கள் போன்ற சமூகத்தின் பல்வேறு பிரிவு மக்கள் பங்கேற்ற முதல் பிரிட்டீஷ் எதிர்ப்புப் போராட்டம் தான் இது. இவையெல்லாம் பல்வேறு பிரிவு மக்களைப் போராட்டத்தில் பங்கேற்கத் தூண்டிய காரணிகளாக இருக்கலாம்?

ஆங்கிலேயர்கள் நடைமுறைப்படுத்திய நிர்வாகச் சீர்திருத்தங்கள் கலகத்திற்குக் காரணமாயின. அத்தகைய இரண்டு பிரிட்டீஷ் கொள்கைகள் தான் துணைப்படைத் திட்டம் மற்றும் தத்துரிமை மறுப்புச் சட்டம்.

### துணைப்படைத் திட்டம் (Subsidiary Alliance Policy)

இந்தியாவில் ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்திய வளர்ச்சிக்கும், அதிக மேலாதிக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும் கவர்னர் ஜெனரலாக இருந்த வெல்லஸ்லி பிரபு நடைமுறைப்படுத்திய திட்டம் தான் துணைப்படைத் திட்டம். இதன்படி, ஆங்கிலேயர்களுடன் இராணுவக் கூட்டணியில் ஏற்படும் சிற்றரசுகள் சில நிபந்தனைகளைப் பின்பற்ற வேண்டும்.

- துணைப்படைத் திட்டத்தில் இணையும் சிற்றரசர் கம்பெனி இராணுவத்தின் ஒரு பிரிவை நிரந்தரமாக தனது நாட்டில் நிலை நிறுத்த வேண்டும்.
- கம்பெனியின் இராணுவப் பிரிவிற்குரிய அனைத்துச் செலவுகளையும் கூட்டணியில் உள்ள மன்னரே ஏற்க வேண்டும்.
- கம்பெனியின் ஒப்புதல் இல்லாமல் பிற ஐரோப்பிய நாடுகளுடன் கூட்டணியை ஏற்படுத்தக் கூடாது.

- பிரிட்டீஷ் கவர்னர் ஜெனரலைக் கலந்து ஆலோசிக்காமல் கூட்டணி எந்த ஒரு நடவடிக்கைகளையும் எடுக்கக் கூடாது.
- கூட்டணி அரசர் தனது நாட்டில் ஒரு பிரிட்டீஷ் பிரதிநிதியைத் தங்க வைக்க வேண்டும்.
- இந்த நிபந்தனைகள் மீறப்பட்டால் அந்தச் சிற்றரசை ஆங்கிலேயர்களுக்குப் கைப்பற்றலாம்.

## தத்துரிமை மறுப்புச் சட்டம் (Doctrine of Lapse)

ஒரு சிற்றரசின் ஆட்சியாளர் ஆண் வாரிசு இல்லாமல் இறந்து போனால், வேறு குடும்பத்திலிருந்து ஓர் ஆண்மகனை வாரிசாகத் தத்தெடுக்கும் வழக்கம் நடைமுறையில் இருந்தது. ஆனால் பிரிட்டீஷ் கவர்னர் ஜெனரலான டல்ஹௌசி பிரபு நடைமுறைப்படுத்திய தத்துரிமை மறுப்புச் சட்டத்தின் படி தத்தெடுக்கும் அரசரின் அதிகாரம் ரத்து செய்யப்பட்டது. வாரிசு இல்லாத பட்சத்தில் இந்தச் சிற்றரசு ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படும்.

இந்த இரண்டு சட்டங்களின்படி ஏராளம் சிற்றரசுகள் பிரிட்டீஷ் இந்தியாவுடன் இணைக்கப்பட்டன. தவறான நிர்வாகம் எனக் குற்றம் சாட்டி அவுத் (ஔத்) என்ற சிற்றரசும் பிரிட்டீஷ் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.



*துணைப் படைத்திட்டம் தத்துரிமை மறுப்புச் சட்டம் ஆகியவற்றின் மூலம் இந்திய சிற்றரசுகளை ஆங்கிலேயர்கள் எவ்வாறு கைப்பற்றினர் என்பது பற்றி விவாதிக்கவும்.*



*படம் 1.15* ● *மங்கல் பாண்டே*

ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியில் உள்ள இந்திய இராணுவ வீரர்களுக்கு ஆங்கிலேயர்கள் மீது காணப்பட்ட அதிருப்தி தான் 1857 – இல் நடைபெற்ற போராட்டத்திற்கான இன்னொரு காரணம்.



*படம் 1.16* ● *ஜான்சி ராணிலட்சுமி*



*படம் 1.17* ● *பகதூர்ஷா II*

பிரிட்டீஷ் இராணுவ வீரர்களைப் போலத் திறமையானவர்களாக இருந்த போதிலும் இந்திய வீரர்களுக்குக் குறைவான ஊதியமும் மோசமான உணவும் தங்கும் வசதியும் கொடுக்கப்பட்டன. அதிருப்தி நிறைந்த இந்தச் சூழலில் தான் கம்பெனி புதிய வகை என்ஃபீல்டு துப்பாக்கிகளை இராணுவ வீரர்களுக்கு வழங்கின. அதன் வெடிகுண்டுகளுக்குக் கொழுப்பு தடவப்பட்ட ஒரு காகித உறை இருந்தது. துப்பாக்கியில் தோட்டாக்களை நிரப்புவதற்கு முன் இந்தக் காகித உறையை வாயினால் கடித்துக் கிழிக்க வேண்டியிருந்தது. இந்தக் காகித உறையில் பசு மற்றும் பன்றியின் கொழுப்பால் செய்யப்பட்ட ஒருவகையான கிரீஸ் பூசப்பட்டுள்ளதாக இராணுவ வீரர்களிடையே ஒரு வதந்தி பரவியது. இது அவர்களின் மத நம்பிக்கையைப் புண்படுத்துவதாக இருந்தது. இதற்கு எதிராக முதன் முதலாக பாரக்பூரில் இராணுவ வீரராக இருந்த மங்கல் பாண்டே எதிர்ப்பைத் தெரிவித்தார். துப்பாக்கியில் தோட்டாக்களை நிரப்ப வலியுறுத்திய ஆங்கிலேய இராணுவ வீரரைத் தாக்கியதற்காக மங்கல் பாண்டே 1857 –ஆம் ஆண்டு ஏப்ரல் 8 –ஆம் நாள் ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டார்.

1857 – ஆம் ஆண்டின் போராட்டம் உத்திரப்பிரதேசத்தின் மீரட்டில் ஆரம்பமானது. மங்கல் பாண்டேயின் படுகொலைக்குப் பின் ஒருங்கிணைக்கப்பட்ட இந்திய இராணுவ வீரர்கள் டெல்லியை அடைந்து முகலாய ஆட்சியாளரான இரண்டாம் பகதூர் ஷாவை இந்தியாவின் பேரரசராக அறிவித்தனர். வட இந்தியாவின் பிற பகுதிகளில் நடைபெற்ற போராட்டங்களில் இராணுவ வீரர்களைத் தவிர, அதிகாரத்தை இழந்த சிற்றரசுகளின் ஆட்சியாளர்களும், விவசாயிகளும் பிற இன மக்களும் பங்கேற்றனர். சில மாதங்களிலேயே ஆங்கிலேயர்கள் அனைத்து இடங்களிலும் நடைபெற்ற போராட்டத்தை அடக்கினர். ஏராளம் இந்தியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலர் பீரங்கி குண்டிற்கு இரையாயினர். ஆயிரக்கணக்கான மக்களைச் சாலையோர மரக்கிளைகளில் உயிருடன் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டனர். அவுத்தில் மட்டும் போராட்டத்தில் கொலை செய்யப்பட்ட ஒன்றரை லட்சம் பேரில் ஒரு லட்சம் பேர் சாதாரண மக்களாக இருந்தனர். இந்தியாவின் பல்வேறு பிரிவு மக்களின் ஒற்றுமையால் ஆங்கிலேயரின் கொடூரமான அடக்கு முறையை வலுவாக எதிர்க்க முடிந்தது. போராட்டம் நடைபெறாத இடங்களிலும் சாதாரண மக்களின் ஆதரவு போராட்ட வீரர்களுக்குக் கிடைத்தது. போராட்டத்தின் உண்மையான பலம் இந்து – முஸ்லீம் ஒற்றுமையாக இருந்தது.

கன்வர் சிங்கின் கதையை நீங்கள் வாசித்தீர்கள் அல்லவா. இதுபோன்று ஏராளம் தேசப் பற்றுடையவர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராட்டம் செய்தனர். அவர்களில் சிலரை நாம் அறிந்து கொள்வோம்.



படம் 1.18 ● நானா சாகிப்



படம் 1.19 ● தாந்திய தோப்பி



படம் 1.20 ● பீகம் ஹஸ்ரத் மஹல்

| போராட்டம் நடைபெற்ற இடம் | போராட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் | சிறப்பம்சங்கள் |
|---|---|---|
| டெல்லி | இரண்டாம் பகதூர்ஷா | ● போராட்டக்காரர்கள் அவரை இந்தியாவின் பேரரசராக அறிவித்தனர்.<br>● போராட்டத்திற்குப் பின் ஆங்கிலேயர்களால் ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டார். |
| | ஜெனரல் ஃபக்த்கான் | ● இரண்டாம் பகதூர் ஷாவின் இராணுவ ஜெனரலாக இருந்தார் |
| ஜான்சி | ராணி லட்சுமி பாய் | ● ஜான்சியின் ஆட்சியாளர் |
| கான்பூர் | நானாசாகிப் | ● மராத்திய ஆட்சியாளர் |
| | தாந்திய தோப்பி | ● நானா சாகிப்பின் படைத் தலைவர்<br>● கொரில்லா போர் முறையைப் பயன்படுத்தினார் |
| லக்னோ | பீகம் ஹஸ்ரத் மஹல் | ● அவுதின் ஆட்சியாளர் |
| பீகாரின் ஆரா | கன்வர் சிங் | ● ஜெகதீஷ்பூரின் விவசாயப் பிரபு. |

### *1857*- கலகம்: திரைப்படம் மற்றும் இலக்கியம்

*மோகன் சின் காவின் 1857, கேதன் மேத்தா இயக்கிய மங்கல் பாண்டே: தி ரைசிங் மற்றும் கிரிஷ் ஜாகர்லமுடியின் மணிகர்னிகா: தி குயின் ஆஃப் ஜான்சி ஆகியவை 1857 –ஆம் ஆண்டு கலவரத்தை பின்னணியாகக் கொண்ட திரைப்படங்கள் ஆகும். மஹால் வேதா தேவியின் ஜான்சிராணி மற்றும் மலையாற்றூர் ராமகிருஷ்ணனின் அம்ருதம் தேடி ஆகியவையும் 1857– இல் உள்ள கலவரத்தின் பின்னணியில் எழுதப்பட்ட நாவல்களாகும்.*

1857 – இல் நடைபெற்ற போராட்டத்திற்குச் சில குறைகள் இருந்தன.

- போராட்டம் வட இந்தியாவின் சில பகுதிகளில் மட்டுமே இருந்தன.
- போராட்டத்திற்கு ஒருங்கிணைந்த தலைமை இல்லாமல் இருந்தது.
- கம்பெனி இராணுவத்திற்குப் போராட்டக்காரர்களை விட சிறந்த இராணுவத் திறனும் ஒருங்கிணைக்கும் திறனும் இருந்தன.
- இந்தியாவின் நடுத்தர வர்க்கத்தினர் பொதுவாகப் போராட்டத்தை விரும்பவில்லை.
- சிற்றரசுகளின் ஆட்சியாளர்களில் ஒரு பகுதியினர் போராட்டத்தில் இருந்து விலகி நின்றனர்.

1857 – ஆம் ஆண்டு நடைபெற்ற போராட்டத்தை ஆங்கிலேயர்கள் ஒடுக்கினாலும் அது பிற்கால இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. அவை எவை என ஆராய்வோம்.

- இந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி முடிவுக்கு வந்தது.
- இந்தியாவின் ஆட்சி பிரிட்டீஷ் ராணியின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.
- கவர்னர் ஜெனரல் என்பதற்குப் பதிலாக வைசிராய் என்ற பதவி நடைமுறைக்கு வந்தது.
- இந்தியாவின் பிற்கால தேசிய இயக்கங்களுக்கு ஊக்கம் அளித்தது.

வாணிபத்திற்காக வந்த வெளிநாட்டவர்கள் இந்தியாவில் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டனர். இதற்கு எதிராக இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் பிரிவினர் நடத்திய எதிர்த்து நிற்றல்களும் முன்னேற்றங்களுமே பிற்கால தேசியப் போராட்டங்களுக்கு ஊக்கமளித்தன.

## தொடர் செயல்பாடுகள்

- போர்ச்சுக்கீசியர்களுக்கு முன் இந்தியாவிற்கு வருகை தந்த வெளிநாட்டவர்களைக் குறித்த தகவல்களையும், அவர்களது பயண வழிகளையும், பயணக் குறிப்புகளையும் கண்டறிந்து ஒரு பதிப்பைத் தயார் செய்யவும்.
- ஆங்கிலேயர்களுக்கு எதிராக இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற விவசாயிகள், பழங்குடியினர், பெண்கள் முன்னேற்றங்களின் செய்திகளையும் படங்களையும் பல்வேறு ஆதாரங்களில் இருந்து சேகரித்து ஒரு கட்டுரையைத் தயார் செய்யவும்.
- 1857– ஆம் ஆண்டின் போராட்ட மையங்களையும் அதற்குத் தலைமை தாங்கியவர்களையும் உட்படுத்தி ஒரு டிஜிட்டல் ஆல்பம் தயார் செய்யவும்.
- இந்தியாவில் ஆங்கிலேயர்களுக்கு எதிரான போராட்டங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் ஆவணப்படத்திற்கான ஒரு திரைக் கதையைத் தயார் செய்யவும்.

அலகு 2



# தேசிய இயக்கத்தின் எழுச்சியை நோக்கி




படம்2.1

### இந்தியாவின் முதுபெரும் மனிதர் (Grand old man of India)



படம் 2.2 ● தாதாபாய் நௌரோஜி

*இந்தியாவின் முதுபெரும் மனிதர் (Grand old man of India) என்று அழைக்கப்படுகின்ற தாதாபாய் நௌரோஜியின் புத்தகமே 'பாவர்டி அன்ட் பிரிட்டீஷ் ரூல் இன் இந்தியா.' ஆங்கிலேயர்கள் இந்தியாவின் செல்வத்தை வடிகட்டிக் கொண்டு போகிறார்கள் என்ற தனது நிலைப்பாட்டை (வடிகால்/ ஒழுகுதல் – கோட்பாடு) Drain Theory இந்தப் புத்தகத்தில் அவர் முன்வைக்கிறார். இதன் மூலம் பிரிட்டீஷ் ஆட்சியின் பொருளாதார விளைவுகளைப் பற்றி விவாதிக்க முடிந்தது.*

மேலே கொடுக்கப்பட்ட உரையாடலைக் கவனித்தீர்களல்லவா? இது வங்காள எழுத்தாளரும், சமூக ஆர்வலருமான தீனபந்து மித்ரா எழுதிய 'நீல்தர்பன்' என்ற நாடகத்தின் ஒரு பகுதியாகும். முந்தைய பாடத்தில் நாம் விவாதித்த நீலம் தோட்ட உரிமையாளர்களின் சுரண்டலுக்கு எதிராகக் கதாபாத்திரங்கள் பேசுகின்றன. சுரண்டுபவர்களுக்கு எதிராக இந்தியர்கள் ஒன்றுபட்டு நிற்க வேண்டியதன் அவசியத்தை அவர்கள் வலியுறுத்துகிறார்கள். இந்த உரையாடலிலிருந்து எவற்றையெல்லாம் புரிந்துகொள்ள முடிகிறது.

- வெளிநாட்டு ஆதிக்கத்திற்கு எதிராகப் போராட வேண்டியதன் அவசியம்.
- பொருளாதார சுரண்டலிலிருந்து விடுதலை.
- 

சுதந்திரம் கிடைப்பதற்கு முன், இந்தியா பல சிற்றரசுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஜாதி, மதம், உடை, மொழி, கலாச்சாரம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் பாகுபாடுகள் நிலவின. ஆனால், 19–ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் இத்தகைய வேறுபாடுகள் அனைத்தையும் தாண்டி இந்தியர்களிடையே ஓர் ஒற்றுமை உணர்வு தோன்றியது. வலுவான பிரிட்டீஷ் எதிர்ப்பு மனப்பான்மையே இந்திய மக்களின் ஒற்றுமை உணர்வின் அடித்தளம். இந்த ஐக்கிய மனப்பான்மையே தேசியம் என்று அழைக்கப்படுகிறது. இந்திய தேசியம் வலுவடைவதற்கு வழிவகுத்த சூழ்நிலைகள் எவை என்பதை நாம் ஆராய்வோம்.

## பொருளாதாரக் கொள்கை

இந்தியாவின் பல்வேறு சிற்றரசுகளைப் பிரிட்டீஷ்காரர்கள் கைப்பற்றியதைப் பற்றியும் அவர்கள் செயல்படுத்திய பொருளாதாரக் கொள்கைகளைப் பற்றியும் முன் வகுப்புகளில் விவாதம் செய்தோம் அல்லவா? பிரிட்டீஷ்காரர்களின் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்களைச் சேகரிக்கும் காலனியாகவும் பிரிட்டீஷ் உற்பத்திப் பொருட்களை விற்கும் ஒரு சந்தையாகவும் இந்தியா மாறியது. பொருளாதார சுரண்டலே ஆங்கிலேயர்களின் இலக்காக இருந்தது. இதற்காக அவர்கள் செயல்படுத்தியக் கொள்கைகள் இந்தியாவில் வேலையின்மைக்கும் வறுமைக்கும் காரணமாயின. இதன் விளைவாக வேளாண் தொழில் செய்பவர்கள், கைத்தொழிலாளர்கள், சிறு வணிகர்கள், பழங்குடியினர் போன்ற பல்வேறு பிரிவினர் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராட்டம் தொடங்கினர். பிரிட்டீஷ்காரர்களின் பொருளாதாரச் சுரண்டலைப் பற்றி விரிவான ஆய்வு நடத்தியவர்கள் தாதாபாய் நௌரோஜி, ஆர். சி. தத், மகாதேவ் கோவிந்த ரானடே போன்றவர்கள் ஆவர். இவர்கள் இந்திய தேசிய இயக்கத்தின் ஆரம்பக்கால தலைவர்களாயிருந்தனர்.

## மேற்கத்திய கல்வி

19–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் நவீன கல்வி பரவியது. ஆங்கிலேயர்களின் மேன்மையை உயர்த்திக் காண்பிக்கவும், இந்தியர்களைக் கலாச்சார முறையில் தங்களுக்குக் கீழ்ப்படியவைக்கவும் தங்களோடு அனுதாபம் கொள்ளும் ஒரு பிரிவு இந்தியர்களை உருவாக்கவுமே ஆங்கிலேயர் ஆங்கிலக் கல்வியைக் கொண்டு வந்தனர். ஆனால் ஆங்கிலக் கல்வியைக் கற்ற இந்தியர்கள் ஜனநாயகம், சுதந்திரம், அந்தஸ்தில் சமத்துவம், சமநீதி, அறிவியல் உணர்வு, குடிஉரிமை ஆகியவற்றைப் பற்றி விழிப்புணர்வு பெற்றவர்களாக மாறினர்.



படம் 2.3 • மகாதேவ் கோவிந்த ரானடே

புதிய கருத்துக்களை அறிந்த இந்தியர்கள் தங்களின் நாடு எவ்விதம் ஆங்கிலேயர்களுக்குக் கீழானது என்று சிந்தித்தனர். ஆங்கில ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டியதன் அவசியத்தை அவர்கள் தொடர்ந்து பேசினர். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகின்றவர்களுக்குக் கருத்துப் பரிமாற்றத்திற்கான பொதுவான மொழியாக ஆங்கிலம் மாறியது. நாட்டின் பொருளாதார, சமூக பலவீனங்களை அறிந்துகொள்ள மேற்கத்திய கல்வி இந்தியர்களுக்கு உதவியது. இது தேசியம் தோன்றுவதற்கு வழிவகுத்தது.



படம் 2.4 • ஆர். சி. தத்

*மேற்கத்திய கல்வி இந்தியர்களிடம் தேசியத்தை வளர்க்க எந்த அளவிற்கு உதவியது? விவாதித்துக் குறிப்பு தயாரிக்கவும்.*

## இலக்கியமும் செய்தித்தாள்களும்

இந்தியாவில் தேசியத்தைப் பரப்புவதில் இலக்கியப் படைப்புகளும் செய்தித்தாள்களும் முக்கிய பங்கு வகித்தன. ஆங்கிலேயர்களுக்கு எதிரான எதிர்ப்பு இலக்கியங்களில் பிரதிபலித்தன. நாட்டின் பல்வேறு பகுதிகளில் மக்கள் எதிர்கொள்ளுகின்ற துன்பங்கள், புறக்கணிப்புகள், சுரண்டல்கள் ஆகியவை இலக்கியப் படைப்புகளில் கருப்பொருளாயின. அன்றைய பிரபல எழுத்தாளர்களாகிய தீனபந்து மித்ரா, பங்கிம் சந்திர சாட்டர்ஜி, ரவீந்திரநாத் தாகூர், வள்ளத்தோள், சுப்பிரமணிய பாரதி போன்றவர்களின் படைப்புகள் மக்களிடையே தேசிய உணர்வை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகித்தன.

| முக்கிய தேசிய இலக்கியவாதிகள் | மொழி |
|---|---|
| • பங்கிம் சந்திர சாட்டர்ஜி<br>• ரவீந்திரநாத் தாகூர் | • வங்காளம் |
| • லக்ஷ்மிநாத் பஸ் பெருவா | • அசாமிஸ் |
| • விஷ்ணுசாஸ்திரி சிப்லங்கர் | • மராத்தி |



படம் 2.5 ● தீனபந்து மித்ரா



படம் 2.6 ● பங்கிம் சந்திர சாட்டர்ஜி



படம் 2.7 ● ரவீந்திரநாத் தாகூர்



படம் 2.8 ● வள்ளத்தோள் நாராயண மேனன்



படம் 2.9 ● சுப்பிரமணிய பாரதி

| | |
|---|---|
| ● சுப்பிரமணிய பாரதி | ● தமிழ் |
| ● பாரதேந்து ஹரிச்சந்திரா<br>● பிரேம்சந்த் | ● ஹிந்தி |
| ● அல்தாப் ஹீசைன் ஹாலி | ● உருது |
| ● வள்ளத்தோள் நாராயண மேனன் | ● மலையாளம் |

ஆங்கிலத்திலும் வட்டார மொழிகளிலும் பல செய்தித்தாள்கள் அக்காலத்தில் வெளிவந்தன. இந்திய பத்திரிகைத்துறைக்கு வித்திட்டவர் சமூக சீர்திருத்தவாதியான ராஜா ராம் மோகன் ராய் ஆவார். அவர் தொடங்கிய செய்தித்தாள்களே வங்காள மொழியில் சம்பாத் கௌமுதியும், பாரசீக மொழியில் மிராத்–உல்–அக்பருமாகும். பிரிட்டீஷ் கொள்கைகளை விமர்சிக்கவும், அவற்றிற்கு எதிராகப் பதிலளிக்கவும், சுரண்டலுக்கு எதிரான மனப்பான்மையை வளர்க்கவும் இத்தகைய நிகழ்கால செய்தித்தாள்களுக்கு முடிந்தன. நவீன கருத்துகளையும் தேசியத்தையும் வளர்ப்பதில் முக்கிய பங்குவகித்த சில முக்கிய செய்தித்தாள்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| செய்தித்தாள் | மொழி |
|---|---|
| அம்ருத் பஸார் பத்ரிகா | வங்காளம் |
| த ஹிந்து | ஆங்கிலம் |
| டைம்ஸ் ஆப் இந்தியா | ஆங்கிலம் |
| மாத்ரு பூமி | மலையாளம் |
| அல்அமீன் | மலையாளம் |

ஆங்கிலேயர்கள் செய்தித்தாள்களைத் தங்களுக்கு எதிரான பிரச்சாரமாகக் கருதி அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதில் முக்கியமானது லிட்டன் பிரபு நடைமுறைப்படுத்திய வட்டார மொழி பத்திரிகைச் சட்டமாகும் (Vernacular Press Act). இத்தகைய சட்டங்களுக்கு எதிராக இந்திய மக்கள் ஒன்றுபட்டனர்.

*'தேசிய உணர்வை வளர்ப்பதில் பத்திரிகைகளின் தாக்கம்' என்ற தலைப்பில் ஒரு சிறுகட்டுரை தயாரிக்கவும்.*

## சமூக சீர்திருத்த இயக்கங்கள்

சமூகத்தில் நிலவிய பழக்கவழக்கங்களையும் மூடநம்பிக்கைகளையும் ஒழிக்க வேண்டியதன் அவசியத்தை உணர நவீன கல்வி உதவியது. சமூக சீர்திருத்தத்திற்காகச் செயல்பட்ட இந்தியாவின் ஆரம்பகால

சீர்திருத்தவாதிகளையும் அவர்களின் செயல்பாடுகளையும் குறித்து நாம் ஆராய்வோம்.

## ராஜாராம் மோகன்ராய்

இந்தியாவில் சமூக சீர்திருத்தத்தைத் தொடங்கியவர் ராஜாராம் மோகன்ராய் ஆவார். 1772 - இல் வங்காளத்தில் பிறந்த அவருக்கு இந்து, இஸ்லாம், கிறிஸ்த்துவம், யூத மதங்களில் ஆழ்ந்த அறிவு இருந்தது. பலமொழிப் பண்டிதரான ராஜாராம் மோகன்ராயை பிரெஞ்சுப் புரட்சியின் கருத்துகள் ஈர்த்தன.

ராஜாராம் மோகன்ராயின் முக்கிய செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



*படம் 2.10 ● ராஜாராம் மோகன்ராய்*

- சதியை ஒழிப்பதில் முக்கிய பங்காற்றினார்.
- நவீன கல்விக்காகப் பல பள்ளிகள் தொடங்கப்பட்டன.
- பிரம்ம சமாஜம் என்ற சீர்திருத்த இயக்கம் தொடங்கப்பட்டது.
- குழந்தைத் திருமணம், பலதார மணம் போன்ற சமூகத் தீமைகளுக்கு எதிராகப் போராடினார்.
- பெண்களுக்குப் பரம்பரைச் சொத்தில் உரிமை உண்டு என வாதிட்டார்.
- சிலை வழிபாடு, பல தெய்வ நம்பிக்கை ஆகியவற்றிற்கு எதிராகச் செயல்பட்டார்.

## ஜோதி ராவ் பூலே

மகாராஷ்டிராவில் தாழ்ந்த சாதியினர் என்று கருதப்பட்டவர்களுக்காகவும் பெண்களின் உரிமைகளுக்காகவும் போராடிய சமூக சீர்திருத்தவாதியே ஜோதி ராவ் பூலே. சமூக சீர்திருத்த செயல்பாடுகளுக்காக 'சத்யசோதக் சமாஜம்' என்ற சங்கத்தை அவர் உருவாக்கினார். விதவை மறுமணத்தை நடைமுறைபடுத்தவும் விதவைகளின் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கவும் இந்தச் சங்கம் முயற்சிகளை மேற்கொண்டது. பெண்கள் மற்றும் தலித்துகளுக்காகப் பல கல்வி நிறுவனங்களை நிறுவினார். மகாராஷ்டிர மக்கள் அவரை 'மகாத்மா' என்று மரியாதையுடன் அழைத்தனர். அவருடைய அனைத்துச் செயல்பாடுகளிலும் அவரது வாழ்க்கைத் துணைவியான சாவித்திரிபாய் பூலேயும் கூட இருந்தார். பெண்களுக்காகப் பல பள்ளிக்கூடங்களையும் இரவு பாடசாலைகளையும் நிறுவி சாவித்திரிபாயும் கல்விச் செயல்பாடுகளில் ஈடுபட்டார்.



*படம் 2.11 ● ஜோதி ராவ் பூலே*

## பண்டித ரமாபாய்

சமூக சீர்திருத்தத்துறையில் ஈடுபாடு கொண்ட பெண்மணியாகப் பண்டித ரமாபாய் விளங்கினார். கர்நாடகத்தைச் சேர்ந்த ரமாபாய் சமஸ்கிருதம், மராத்தி, வங்காளம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். அவருக்குச்சமஸ்கிருத இலக்கியத்தில் இருந்த புலமையைக் கருத்தில் கொண்டு கல்கத்தா பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள் ரமாபாய்க்கு 'பண்டிதர்' என்ற பட்டம் அளித்து கௌரவித்தனர்.



*படம் 2.12 • பண்டித ராமாபாய்*

பண்டித ரமாபாய் குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவைகள் மற்றும் பெண்குழந்தைகளுடைய கல்விக்காகப் பல பள்ளிகளைத் தொடங்கினார். இத்தகைய செயல்களுக்காக 'ஆரிய மகிளா சமாஜம்' என்ற சங்கத்தை நிறுவினார். விதவைகளின் மறுவாழ்விற்காக 'சாரதா சதனம்' என்ற அடைக்கல மையத்தையும் பெண்களுக்குத் தொழில் பயிற்சி அளிப்பதற்காக 'முக்தி மிஷன்' என்ற திட்டத்தையும் ஆரம்பித்தார். 1889 – இல் பம்பாயில் வைத்து நடந்த இந்திய தேசிய காங்கிரசின் மாநாட்டில் அவர் கலந்து கொண்பார்.

ராஜாராம் மோகன் ராய், ஜோதிராவ் பூலே, பண்டித ரமாபாய் ஆகியோரின் செயல்பாடுகளைப் பகுப்பாய்வு செய்து குறிப்பு தயார் செய்யவும்.

இந்தியாவில் உள்ள வேறு சில முக்கியமான சமூக சீர்திருத்த இயக்கங்களையும் அவற்றை நிறுவியவர்களையும் பற்றி நாம் தெரிந்துகொள்வோம்.

| சமூக சீர்திருத்த இயக்கங்கள் | நிறுவியவர்கள் |
|---|---|
| பிரார்த்தனா சமாஜம் | ஆத்மாராம் பாண்டுரங் |
| ஆர்ய சமாஜம் | சுவாமி தயானந்த சரஸ்வதி |
| அலிகார் இயக்கம் | சர் சையது அகமது கான் |
| தியோசபிக்கல் சொசைட்டி | மேடம் பிளாவிட்ஸ்கி, கர்னல் ஓல்காட் |
| ராமகிருஷ்ண மிஷன் | சுவாமி விவேகானந்தர் |
| ஹிதகாரிணி சமாஜம் | வீரேசலிங்கம் பந்துலு |
| சுயமரியாதை இயக்கம் | ஈ. வி. ராமசுவாமி நாயக்கர் |
| ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகம் | ஸ்ரீ நாராயண குரு |
| சாதுஜன பரிபாலன சங்கம் | அய்யங்காளி |

சமூக சீர்திருத்த நடவடிக்கைகளால் இந்தியர்களின் தன்னம்பிக்கை வளர்ந்தது. இது தேசியத்தின் வளர்ச்சிக்குக் காரணமானது.

## போக்குவரத்தும் தகவல் தொடர்பும்

வணிகம், தொழில், இராணுவத் தேவைகள் போன்றவற்றுக்காக ஆங்கிலேயர்கள் இந்தியாவில் போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு வசதிகளை விரிவுபடுத்தினர். ரயில்வே, தபால், தந்தி சேவைகளை அவர்கள் தொடங்கினர். சரக்குகள் கொண்டு செல்வதை எளிமையாக்குவதற்காகச் சாலைப் போக்குவரத்தை மேம்படுத்தினர். இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் பயணிக்கவும் தகவல் தொடர்பு கொள்ளவும் ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ளவும் இந்த வசதிகள் இந்தியர்களுக்கு உதவியாக இருந்தன. இதன் மூலமாகத் தேசிய மனப்பான்மை உருவாகவும் தேசிய இயக்கம் வலுப்பெறவும் செய்தன. ஒருங்கிணைக்கப்பட்ட நிர்வாக அமைப்பு, சட்ட அமைப்பு, நாணய அமைப்பு ஆகியவற்றை நடைமுறைப்படுத்தியதும் மக்களிடையே ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தியது.

*'இந்திய தேசியத்தின் வளர்ச்சிக்கு உதவிய காரணிகள்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்குக் கட்டுரை தயாரிக்கவும்.*

*குறிப்புகள்*

- பொருளாதாரக் கொள்கை
- சமூக சீர்திருத்த இயக்கங்கள்
- இலக்கியமும் செய்தித்தாள்களும்
- மேற்கத்திய கல்வி
- போக்குவரத்தும் தகவல் தொடர்பும்

## அரசியல் அமைப்புகள் உருவாகின்றன

ஆங்கிலேயருக்கு எதிராக மக்களை ஒன்றிணைக்க அமைப்புகளை உருவாக்க வேண்டும் என்ற கருத்து இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து எழுந்தன. இதன் விளைவாக 19 – ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் புதிய அரசியல் அமைப்புகள் உருவாக்கப்பட்டன. அவற்றில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆரம்பக்கால அரசியல் இயக்கங்கள் | செயல்பட்ட மையம் | தலைமை தாங்கிய தேசிய தலைவர்கள் |
|---|---|---|
| இந்தியன் அசோசியேஷன் | கல்கத்தா | சுரேந்திரநாத் பானர்ஜி, ஆனந்த மோகன் போஸ் |
| மெட்ராஸ் மகாஜன சபை | சென்னை | எம். வீரராகவாச்சாரி, ஜி. சுப்பிரமணிய ஐயர், ஆனந்த சார்லு |
| பம்பாய் பிரசிடென்சி அசோசியேஷன் | பம்பாய் | பிரோஸ்ஷா மேத்தா, கெ. டி. தெலாங் பதருதீன் தியாப்ஜி |

இந்த அமைப்புகள் எதுவும் அகில இந்திய தன்மையைக் கொண்டிருக்கவில்லை. இவற்றின் செயல்பாடுகள் சில மாகாணங்களிலும் பிரதேசங்களிலும் மட்டுமே ஒதுங்கியிருந்தன. செல்வந்தர்கள், நடுத்தர பிரிவினர்கள் தலைமையில் இயங்கும் இத்தகைய அமைப்புகளுக்குப் பெரும்பாலான மக்களை அரசியல் ரீதியாக விழிப்புணர்வு பெறச் செய்ய முடியவில்லை. இந்தச் சூழ்நிலையில் ஓர் அகில இந்திய அமைப்பு உருவாக்கப்பட வேண்டியதற்கான தேவை வலுப்பெற்றது.

*ஆரம்பக்கால அரசியல் இயக்கங்களின் வரம்புகளை விவாதித்துப் பட்டியலிடவும்*

## அகில இந்திய அமைப்பு உருவாகிறது

*1885 டிசம்பர் 28 பகல் 12 மணி. பம்பாயில் உள்ள கோகுல்தாஸ் தேஜ்பால் சமஸ்கிருத கல்லூரியின் விசாலமான அறையில் ஒரு கூட்டம் நடைபெறுகிறது. அங்கு 72 பேர் கூடியிருந்தனர். அவர்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் சில முக்கிய அமைப்புகளின் பிரதிநிதிகளாகச் செயல்பட்டவர்களாவர். மொழி, மதநம்பிக்கை சமூகத்தில் அவர்கள் பெற்றிருந்த அங்கீகாரம் ஆகியவற்றில் பலதரப்பட்ட ஆளுமைகளைக் கொண்டவர்கள்... அமைப்பாளர்களில் ஒருவர் ஆங்கிலேயரான ஆலன் ஆக்டேவியன் ஹியூம் ஆவார். அன்றைய கூட்டத்திற்கு டபிள்யூ. சி. பானர்ஜி என்ற வழக்கறிஞர் தலைமை தாங்கினார்.*

*KSICL குழந்தைகளுக்கான தேசிய சுதந்திர போராட்ட வரலாறு.*

இந்திய தேசிய காங்கிரஸ் என்ற தேசிய அமைப்பிற்குத் தொடக்கம் குறித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாநாட்டைக் குறித்துதான் மேலே விவரிக்கப்பட்டுள்ளது.

*இந்திய தேசிய காங்கிரசின் உருவாக்கத்தோடு தொடர்புடைய என்னென்ன கருத்துகளை இதிலிருந்து கண்டுபிடிக்க முடியும்?*

- 1885–இல் இந்திய தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது.
- 
- 



படம் 1.13 ● இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாட்டில் பங்கேற்றவர்கள்

பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த சமூக – அரசியல் செயல்பாட்டாளர்களிடையே பொதுவான கருத்தை உருவாக்குவதே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாகும். இந்திய தேசிய காங்கிரசின் அறிவிக்கப்பட்ட நோக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள அரசியல் செயல்பாட்டாளர்களிடையே நட்புறவை வளர்த்தல்.
- ஜாதி, மதம், மாகாணம் வேறுபாடின்றி தேசிய ஒற்றுமை உணர்வை வளர்த்து உறுதிப் படுத்துதல்.
- பொதுத் தேவைகளுக்கு உருவாக்கம் அளித்து அவற்றை ஆங்கில அரசாங்கத்தின் முன்பு சமர்ப்பித்தல்.
- நாட்டில் பொதுக்கருத்தை உருவாக்குவதும் மக்களை ஒன்றிணைக்கவும் செய்தல்
- அகில இந்திய போட்டித் தேர்வுகளுக்கு இந்தியாவிலும் மையங்களை அனுமதித்தல்.

எல்லா ஆண்டும் டிசம்பர் மாதத்தில் இந்திய தேசிய காங்கிரசின் வருடாந்திர மாநாடு நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டன. அக்காலத்தில் தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, பிரோஸ்ஷா மேத்தா, பதருதீன் தியாப்ஜி, கோபால கிருஷ்ண கோகலே, பால கங்காதர திலகர், பி. ஆனந்த சார்லு, ஆர். சி. தத், ஆனந்த மோகன்போஸ் போன்றோர் முக்கியமான தலைவர்களாக இருந்தனர்.

*இந்திய தேசிய காங்கிரசின் ஆரம்பகால செயல்பாட்டு நோக்கங்கள் இந்தியாவில் தேசிய உணர்வை வளர்க்க உதவியாக இருந்தன. விவாதம் செய்யவும்.*

## பிரிவும் பிரித்தலும்

*"ஒன்றுபட்ட வங்காளம் ஒரு சக்தியாகும். வங்காளம் பிரிக்கப்பட்டால் பலவீனமடையும் என்பது காங்கிரஸ் தலைவர்களின் எண்ணம். அவர்களுடைய பயம், முற்றிலும் சரியானது. வங்காளத்தைப் பிரிப்பதற்கான திட்டங்களின் சிறப்புகளில் இதுவும் ஒன்று. நமது ஆட்சிக்கு எதிரானவர்களைப் பிரித்து அதன் மூலம் எதிர்க்கும் அமைப்புகளைப் பலவீனப்படுத்துவதே நமது முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்."*

*ஹச். ஹச். ரிஸ்லே*



*படம் 2.14*
*ஆலன் ஆக்டேவியன் ஹியூம்*



*படம் 2.15*
*டபிள்யூ. சி. பானர்ஜி*

### சர். சி. சங்கரன் நாயர்



*படம் 2.16*

*இந்திய தேசிய காங்கிரசின் தலைவரான முதல் மலையாளி. 1897 –இல் நடைபெற்ற அமராவதி காங்கிரஸ் மாநாட்டில்தான் இவர் காங்கிரசின் தலைவர் பதவியை வகித்தார்.*

மேலே நீங்கள் வாசித்தது, வங்காளப் பிரிவினையின் நோக்கத்தை விளக்கி இந்திய அரசின் உள்துறைச் செயலாளர் ரிஸ்லே எழுதிய ஓர் அதிகாரப்பூர்வ குறிப்பிலுள்ள செய்திகளாகும்.

காங்கிரசின் தலைமையில் நடைபெறுகின்ற போராட்டங்களைப் பலவீனப்படுத்த ஆங்கில அதிகாரிகள் பல்வேறு உத்திகளை வகுத்தனர். அவற்றில் முக்கியமானது வங்காளப் பிரிவினை. தேசிய இயக்கத்தின் அதிகார மையமாக இருந்த வங்காள மாகாணத்தை இரண்டாகப் பிரிப்பதே இதன் நோக்கம். தற்போதுள்ள வங்காள மாகாணம் விசாலமானது என்றும் திறமையான நிர்வாகத்திற்குப் பிரிவினை தவிர்க்க முடியாதது என்றும் ஆங்கில வைசிராயாக இருந்த கர்சன் பிரபு வாதிட்டார்.

**வங்காளப் பிரிவினை**

வங்காளம் கிழக்கு வங்காளம், மேற்கு வங்காளம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டன. கிழக்கு வங்காளம் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக இருந்த பகுதியாகவும் மேற்கு வங்காளம் இந்துக்கள் பெரும்பான்மையாகயிருந்த பகுதியாகவும் இருந்தன.

*வங்காளப் பிரிவினைக்குப் பின்னால் இருந்த உண்மையான நோக்கம் என்ன?*

- 

1905 அக்டோபர் 16 அன்று பிரிவினை அமல்படுத்தப்பட்டபோது வங்காளத்தில் துக்கம் அனுசரிக்கப்பட்டது. கல்கத்தாவில் கண்டன வேலைநிறுத்தம் நடத்தப்பட்டது. ரவீந்திரநாத் தாகூர் எழுதிய 'அமர் சோணார் பங்களா' என்ற தேசபக்திப் பாடலைப் பாடிக்கொண்டு மக்கள் வீதிகளில் இறங்கினர். இந்த எதிர்ப்புகள் ஒரு பெரிய போராட்டமாக மாறியது. இது 'சுதேசி இயக்கம்' என்று அழைக்கப்படுகிறது. இந்திய தேசிய இயக்கத்திற்கு ஒரு வலுவான ஊக்கம் சுதேசி இயக்கத்தினால் கிடைத்தது.

இந்தியப் பொருட்களின் பயன்பாடும், பிரிட்டீஷ் பொருட்களைப் புறக்கணித்தலுமே இந்த இயக்கத்தின் முக்கிய போராட்ட முறையாகும். 'தன்னிறைவு' என்பதே சுதேசி இயக்கத்தின் முக்கிய கருத்தாகும். உள்நாட்டுத் தொழில்களும் பிற நிறுவனங்களும் வெற்றியடைய வேண்டும் என்பதே இதன் பொருளாகும். பிரிட்டீஷ் பொருட்களைப் புறக்கணித்து அதன் மூலமாக அரசாங்கத்திற்கு வணிகத்தின் வாயிலாகக் கிடைக்கும் வருமானத்தை இழக்கச் செய்வதே சுதேசி போராட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதன் ஒரு பகுதியாக,

- பல துணி ஆலைகள், சோப்புத் தொழிற்சாலைகள், தீப்பெட்டி தொழிற்சாலைகள், கைத்தறி நிறுவனங்கள், தேசிய வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் தொடங்கப்பட்டன.

- ஆச்சாரிய பி. சி. ராய் தொடங்கிய பெங்கால் கெமிக்கல் ஸ்டோர், ரவீந்திரநாத் தாகூர் தொடங்கிய சுதேசி ஸ்டோர், வி, சிதம்பரம் பிள்ளையின் தலைமையில் தொடங்கப்பட்ட சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி, ஜாம்ஷெட்ஜி டாடா நிறுவிய ஸ்டீல் தொழிற்சாலை ஆகியவை சுதேசி போராட்டத்தின் பகுதியாக உருவானவைகளாகும்.

சுரேந்தரநாத் பானர்ஜி சுதேசி இயக்கத்தைக் குறித்து வழங்கிய விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



*படம் 2.17 • சுரேந்தர நாத் பானர்ஜி*

சிந்திக்கும் நாட்களில் சுதேசி இயக்கம் நமது சமூக இல்லற வாழ்க்கையின் முழு மேற்பரப்பையும் வண்ண மயமாக்கியது. இந்தியாவில் தயாரிக்கக் கூடிய வெளிநாட்டுப் பொருட்கள் உட்பட்ட திருமணப் பரிசுகள் திருப்பி அனுப்பப்பட்டன. தெய்வங்களுக்குப் பிரசாதமாகப் பொருட்களைச் சமர்ப்பிக்கும் சடங்குகளில் வழிபாடு நடத்துவதற்குப் பலவேளைகளில் மதகுருக்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். வெளிநாட்டு உப்பையோ சர்க்கரையையோ பயன்படுத்துகின்ற விழாக்களில் விருந்தினர்கள் பங்கேற்க மறுத்தனர்.

*- சுரேந்தரநாத் பானர்ஜி*

இந்த விளக்கத்திலிருந்து சுதேசி இயக்கத்தோடு தொடர்புடைய, கண்டுபிடிக்க இயலும் உண்மைகளைப் பட்டியலிடுங்கள்.

- வெளிநாட்டுப் பொருட்கள் உட்பட்ட திருமண வெகுமதிகள் திருப்பி அனுப்பப்பட்டன.
- 

இத்தகைய பிரச்சாரங்கள் சுதேசி இயக்கத்தின் கொள்கைகளைக் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தியதுடன் இந்திய மக்களிடையே பெரும் தாக்கத்தைச் செலுத்தவும் செய்தன. இதன்மூலம், இந்தியாவில் சாதாரண மக்களும் பெண்களும் மாணவர்களும் முதன்முதலாக ஓர் அரசியல் இயக்கத்தின் பங்காயினர். இந்த இயக்கத்தின் தாக்கம் கலாச்சாரம், கல்வி, பொருளாதாரம், அரசியல் ஆகிய துறைகளில் உணரப்பட்டன.

இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கம் தேசிய அளவில் பரவவும், சுதேசி என்ற புதிய போராட்ட முறையைச் சுதந்திரப் போராட்டத்திற்கு நன்கொடையாக வழங்கவும் சுதேசி இயக்கத்திற்கு முடிந்தது. சுதேசி இயக்கம் தேசியப் போராட்டத்தைச் சாதாரண மக்களிடம் கொண்டு சென்றது.

## சுதேசி இயக்கம்



படம் 2.18 ● அஷ்வினிகுமார் தத்

*சுதேசி இயக்கத்தின் செய்தியைப் பரப்பவும் மக்களை ஒருங்கிணைக்கவும் செயல்பட்ட தன்னார்வ அமைப்புகளே சுதேசி இயக்கங்கள். அஷ்வினி குமார் தத் உருவாக்கிய சுதேசி பாந்தப் சமிதி இதில் முக்கியமானதாகும்.*

- *தன்னார்வ வீரர்களுக்கு விளையாட்டுப் பயிற்சிகளைக் கொடுத்தல்*
- *தொற்று நோய்கள் மற்றும் பிற காரணங்களால் துன்பப்படுபவர்களுக்கு உதவுதல்*
- *சுதேசி கல்வி நிறுவனங்களை நிறுவுதல்*

*ஆகியவைகளே இவற்றின் முக்கிய நோக்கங்கள்.*

*'இந்திய தேசியப் போராட்டத்தில் சுதேசி இயக்கம் செலுத்திய தாக்கம்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கு கட்டுரை தயாரிக்கவும்.*

## மிதவாதிகளும் தீவிர தேசியவாதிகளும்

இந்திய தேசிய காங்கிரசின் செயல்பாட்டுமுறைகள் குறித்து தலைவர்களிடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் நிலவின. ஆங்கிலேயர்களுக்கு எதிராக வெளிப்படையான போராட்டத்திற்கு ஆரம்பகால தலைவர்கள் தயாராகவில்லை. அவர்கள் மிதவாதிகள் என்று அழைக்கப்பட்டனர். பிரோஸ்ஷா மேத்தா, கோபால கிருஷ்ண கோகலே, தாதாபாய் நௌரோஜி ஆகியோர் அவர்களில் முக்கியமானவர்கள். சமாதான முறையிலும் இரத்தமின்றி போராட்டங்களின் வழியாகவும், கூட்டங்கள், பிரச்சாரங்கள், தீர்மானங்கள் மூலமாகவும் அவர்கள் தங்களது கருத்துகளைப் பரப்பினர்.

மிதவாதிகளின் கருத்துகளோடும் செயல்பாடுகளோடும் அதிருப்தியான மற்றொரு பிரிவினர் காங்கிரசில் வலுப்பெற்றனர். அவர்கள் தீவிர தேசிய வாதிகள் என்று அழைக்கப்பட்டனர். பால கங்காதர திலகர், பிபின் சந்திர பால், லாலா லஜபதிராய் ஆகியோர் அவர்களில் முக்கியமானவர்கள். அவர்களின் செயல்முறைகள் மிதவாதிகளிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவைகளாயிருந்தன. சுதேசி, புறக்கணித்தல் போன்ற புரட்சிகரமான செயல்முறைகளை ஏற்றுக்கொண்ட இவர்கள் வலுவான வெளியரங்கமான போராட்டத்தின் வழியாக மட்டுமே சுதந்திரத்தை அடைய முடியும் என்று வாதிட்டனர்.

*இந்திய தேசிய இயக்கத்தில் மிதவாதிகள் மற்றும் தீவிர தேசியவாதிகளின் செயல்பாட்டு முறைகளை ஒப்பீடு செய்து குறிப்பு தயாரிக்கவும்.*

மிதவாதிகள் மற்றும் தீவிர தேசியவாதிகளின் கருத்து வேறுபாடுகள் 1907–இல் சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் தீவிரமடைந்தது. மாநாட்டைத் தொடர்ந்து நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இந்தச் சம்பவங்கள் காங்கிரசின் பிரிவுக்கு வழிவகுத்தது.

காங்கிரசில் ஏற்பட்ட பிளவை ஆங்கிலேயர்கள் மிகவும் சாமர்த்தியமாகக் கையாண்டனர். பிரித்தாளும் கொள்கையை இன்னும் ஆழமாகச் செயல்படுத்துவதற்கு இதன் மூலம் ஆங்கிலேயர்களுக்கு முடிந்தது. ஆங்கிலேயர்கள் தீவிர தேசிய வாதிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளைத் தொடங்கினர். தலைவர்களைக்

## அகில இந்திய முஸ்லீம் லீக் உருவாக்கம்

*ஆகாகான் தலைமையில் ஒரு முஸ்லீம் பிரதிநிதிகள் சங்கம் சிம்லாவில் மின்டோ பிரபுவைச் சந்தித்து சில கோரிக்கைகளை முன்வைத்தனர். அரசாங்கத்தின் அனைத்துத் துறைகளிலும் தங்களின் சமுதாயத்திற்குச் சிறப்பு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்றும், முஸ்லீம்களுக்குத் தனித் தொகுதிகள் வேண்டுமென்றும் அவர்கள் கோரினர். இந்தக் கோரிக்கைகளுக்கு வைஸ்ராய் சாதகமாகப் பதில் அளித்தார். இது முஸ்லீம்களுக்கென ஒரு தனி அரசியல் அமைப்பைத் தொடங்குவதற்குத் தூண்டுதலாகவும் 1906–இல் அகில இந்திய முஸ்லீம் லீக் உருவாகவும் காரணமாக இருந்தது.*



படம் 2.19 ● பிரோஸ்ஷா மேத்தா



படம் 2.20 ● கோபால கிருஷ்ண கோகலே

கைது செய்து சிறையிலடைத்தனர். பாலகங்காதர திலகர் உட்பட்ட பலரையும் நாடு கடத்தினர். பல தலைவர்களும் அரசியலிலிருந்து விலகினர்.

மக்களின் கோபத்தைத் தணிக்கவும், காங்கிரசிலுள்ள மிதவாதிகளிடம் செல்வாக்கைச் செலுத்தவும் வேண்டி ஆங்கிலேயர்கள் சில நிர்வாகச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தினர். 1909–இல் நடைமுறைப்படுத்தப்பட்ட மின்டோ – மார்லி சீர்திருத்தங்கள் இத்தகையதாக இருந்தது. இந்தச் சீர்திருத்தத்தின் முக்கிய ஏற்பாடு முஸ்லீம்களுக்குத் தனித்தொகுதிகள் வழங்குதல், சட்டமன்றங்களின் செயல்பாடுகளையும் அதிகாரங்களையும் விரிவாக்குதல் போன்றவைகளாகும்.

## லால் – பால் – பால்

*சுதேசி இயக்கத்திற்கு மேலும் வலுசேர்த்து ஆங்கிலேயர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய தீவிர தேசிய தலைவர்களே லாலா லஜபதிராய், பால கங்காதர திலகர், பிபின் சந்திரபால் ஆகியோர். இவர்கள் லால் – பால் – பால் என்று அழைக்கப்பட்டனர்*







படங்கள் 2.21 ● லாலா லஜபதிராய் பால கங்காதர திலகர் பிபின் சந்திரபால்

*வங்காளப் பிரிவினையும் மின்டோ – மார்லி சீர்திருத்தமும் 'பிரித்தாளும் கொள்கை' என்ற ஆங்கிலேயரின் கொள்கைக்கு உதாரணங்களாகும். இந்தக் கூற்றைக் குறித்த உங்களது கருத்துகளைப் பதிவிடவும்.*

## ஹோம்ரூல் இயக்கம்



படம் 2.22 ● அன்னி பெசன்ட்

1914–இல் தொடங்கிய முதல் உலகப்போரின் போது அரசியல் செயல்பாடுகள் மீண்டும் தீவிரமடைந்தன. இதற்குத் தலைமை வகித்தது ஹோம் ரூல் என்ற அமைப்பாக இருந்தது. அன்னிபெசன்ட் மற்றும் பாலகங்காதர திலகர் ஆகியோரின் தலைமையில் செயல்படத் தொடங்கிய ஹோம்ரூல் இயக்கம் நகரங்களிலும் கிராமங்களிலும் மக்கள் ஆதரவைப் பெற்றது. ஹோம் ரூல் அதாவது சுய ஆட்சியே இந்த இயக்கத்தின் நோக்கம். ஹோம் ரூல் இயக்கத்தின் விளம்பரத்திற்காக அன்னிபெசன்டும் பாலகங்காதர திலகரும் நாடு முழுவதும் பயணம் செய்து அதன் கிளைகளை நிறுவவும் செய்தனர். ஹோம்ரூல் இயக்கத்தின் செயல்பாடுகள் பிரிட்டீஷ் ஆதிக்கத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பதை உணர்ந்த அரசாங்கம் அன்னிபெசன்டைக் கைது செய்து சிறையில் அடைத்தது. சிறையிலிருந்து வெளிவந்த அவர் 1917–இல் கல்கத்தா மாநாட்டில் காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திய தேசிய காங்கிரசின் முதல் பெண் தலைவர் அன்னிபெசன்ட் ஆவார்.



படம்2.23 ● ஹோம் ரூல் இயக்கத்தின் பிரச்சாரம்

## ஒற்றுமையின் லக்னோ

1916–ஆம் ஆண்டு காங்கிரசின் வருடாந்திர மாநாடு லக்னோவில் வைத்து நடைபெற்றது. இந்த மாநாடு சில முக்கியமான தீர்மானங்களை எடுத்தது குறிப்பிடத்தக்கதாகும். மிதவாதிகளும் தீவிர தேசியவாதிகளும் ஒன்றிணைவதற்கும் இந்திய தேசிய காங்கிரசும் அகில இந்திய முஸ்லீம் லீக்கும் இணைந்து செயல்படுவதற்கும் இந்த மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டன.

## வேறுபட்ட வழிகள் மூலமாக

இந்திய தேசிய காங்கிரசின் போராட்ட முறையிலிருந்து வேறுபட்ட முறையில் சிலர் இரகசிய புரட்சி அமைப்புகளை உருவாக்கி ஆயுதப் போராட்டத்தின் வழியைக் கைக்கொண்டனர். மேற்கத்திய சாம்ராஜ்யத்தை வன்முறையின் வாயிலாக மட்டுமே அடக்க முடியும் என்று அவர்கள் நம்பினர். அவற்றில் சில அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| புரட்சி இயக்கங்கள் | இடம் | தலைமை |
|---|---|---|
| அனுசீலன் சமிதி | வங்காளம் | சச்சிந்திரநாத் சன்யால்,<br>அரவிந்தோ கோஷ் |
| பாரத் மாதா<br>அசோசியேஷன் | சென்னை | நீலகண்ட பிரம்மச்சாரி,<br>வாஞ்சி ஐயர்,<br>அஜித் சிங் |
| யுகாந்தர் கட்சி | வங்காளம் | ராஷ் பிஹாரி போஸ்,<br>குதிராம் போஸ் |
| கதர் கட்சி | அமெரிக்கா | லாலா ஹர்தயால் |

ஆங்கிலேயர்களின் பல்வேறு சுரண்டல் கொள்கைகளும் அதற்கு எதிராக இந்திய மக்கள் மேற்கொண்ட எதிர்ப்புகளுமே இந்திய தேசியத்தின் வளர்ச்சிக்கு வழி வகுத்தன. இந்திய தேசிய காங்கிரசின் உருவாக்கத்தோடு ஆங்கிலேயர்களுக்கு எதிரான இந்திய மக்களின் எதிர்த்து நிற்றலுக்கு ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட வடிவம் கிடைத்தது. அக்காலத்தில் மிகவும் சக்தி வாய்ந்த மக்கள் போராட்டமாக வங்காள பிரிவினைக்கு எதிராக நடந்த சுதேசி இயக்கம் இருந்தது. பின்னர் காந்திஜி தலைமை ஏற்றவுடன் சுதந்திரப் போராட்டம் அதிக மக்கள் ஈடுபாடும் சக்தி வாய்ந்ததாகவும் மாறியது.

## தொடர் செயல்பாடுகள்

- 'நீல்தர்பண்' என்ற நாடகத்திலிருந்து கூடுதல் உரையாடல்களை எடுத்து ஒரு பங்கு நாடகம் நடத்தவும்.
- இந்தியாவில் உள்ள பல்வேறு சமூக சீர்திருத்தவாதிகள், அவர்களுடைய செயல்பாடுகள் ஆகியவற்றை உட்படுத்தி டிஜிட்டல் இதழ் / டிஜிட்டல் விளக்கக் காட்சி தயாரிக்கவும்.
- தேசியத்தை உணர்த்தும் கவிதைகள், பாடல்கள் ஆகியவற்றைச் சேகரித்து வெளியிடுங்கள்.

அலகு 3

# புவியின் சலனங்கள்: புவியின் தற்சுழற்சியும் சூரிய சுழற்சியும்



ஹலோ ஸ்ருதி! புத்தாண்டு வாழ்த்துக்கள், கொண்டாட்டங்கள் எல்லாம் தொடங்கிவிட்டதா?

ஹாய் ராகுல்! இங்கு இந்தியாவில் புத்தாண்டு இன்னும் தொடங்கவில்லை. புத்தாண்டு தொடங்க இன்னும் ஐந்து மணியும் அரை மணிகூறும் வேண்டும்.

சரிதான். நான் அதை மறந்துவிட்டேன். இங்கு ஆஸ்திரேலியாவில் இந்தியாவுக்கு முன்னரே புத்தாண்டு வருமல்லவா.

அங்குக் காலநிலை எவ்வாறு உள்ளது? இங்கு நல்ல குளிர். மாலைவேளையில் சீக்கிரமே இருட்டிவிடுகிறது.

அதுதான் வேடிக்கை! இங்கு இப்போது கோடைகாலம். இரவு எட்டுமணி வரை சூரிய வெளிச்சம் காணப்படும்.



படம் 3.1



படம் 3.2

ஆஸ்திரேலியாவிலும் இந்தியாவிலும் உள்ள நண்பர்களின் உரையாடல்களைக் கவனித்தீர்கள் அல்லவா? இரண்டு வேறுபட்ட இடங்களில் அனுபவிக்கப்படும் நேர வேறுபாடும் அங்குள்ள பருவகால மாற்றங்களும் உரையாடலில் குறிப்பிடப்டுகின்றன. அனுதின வாழ்வில் நாம் அனுபவிக்கும் இந்நிகழ்வுகளின் சிறப்புத்தன்மைகள் எவையெனப் பார்க்கலாம்.

## தற்சுழற்சி (Rotation)

முன்வகுப்புகளில் தற்சுழற்சி பற்றி விவாதித்தோம் அல்லவா?

*படத்தை உற்றுநோக்கி தற்சுழற்சியுடன் தொடர்புடைய கேள்விகளுக்கு விடையைக் கண்டுபிடிக்கவும்.*




படம் 3.3

| | |
|---|---|
| • *புவியின் தற்சுழற்சித் திசை* | |
| • *அச்சுத்தண்டின் சாய்வு* | |

### சுக்கிரன் யுரேனஸ்

*சூரியக் குடும்பத்தில் சுக்கிரனும் யுரேனசும் தவிர பிற எல்லா கிரகங்களும் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் சுழலுகின்றன. ஆனால், சுக்கிரனும் யுரேனசும் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கிச் சுழலுகின்றன.*

படத்திலிருந்து புவியின் தற்சுழற்சித்திசை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி என்பதைப் புரிந்து கொண்டீர்களல்லவா? எனவேதான் சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் மறைவதாக நமக்குத் தோன்றுகிறது.

புவி தற்சுழற்சியின் விளைவாக ஏற்படும் முக்கிய மாற்றங்களே இரவு, பகல் தோன்றுதலும் கோரியோலிஸ் விளைவும் ஆகும்.

## இரவும் பகலும்

புவி தனது சுழற்சியை முழுமையாவதற்கு எடுக்கும் நேரம் 24 மணிநேரம் (23 மணிநேரம் 56 நிமிடங்கள் 4 நொடிகள்) ஆகும் என்பது தெரியுமல்லவா! புவிக்குச் சூரியனிலிருந்துதான் ஒளி கிடைக்கிறது. தற்சுழற்சி நேரத்தில் சூரியனை எதிர்கொள்ளும் புவிப்பகுதிகளில் பகலும், சூரியனின் எதிர்திசையில் இருக்கும் பகுதிகளில் இரவும் அனுபவப்படுகிறது. இவ்வாறு புவியில் இரவையும், பகலையும் பிரிக்கும் கற்பனைக் கோடு ஒளிவட்டம் (Circle of Illumination) எனப்படும். இது புவியின் அச்சுத்தண்டிலிருந்து வேறுபட்டிருப்பதைப் படத்திலிருந்து புரிந்து கொண்டீர்களல்லவா. சுழற்சி இல்லையென்றால் புவியில் இரவு, பகலின் நிலமை எவ்வாறிருக்கும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.




• படம் 3.4

## கோரியோலிஸ் விளைவு (Coriolis Effect)



படம் 3.5 ● அட்மிரல் ஃபெரல்

புவியின் மேற்பரப்பில் சுதந்திரமாகச் சஞ்சரிக்கும் பொருட்கள் புவி சுழற்சியின் பலனாகத் திசை மாற்றம் அடைகின்றன. இதற்குக் காரணமான விசையைக் கோரியோலிஸ் விசை எனவும் இந்தத் திசை மாற்றம் கோரியோலிஸ் விளைவு எனவும் அழைக்கப்படுகிறது.

கோரியோலிஸ் விளைவால் பெருங்கடல் நீரோட்டங்கள் மற்றும் காற்றுகளின் பயணதிசை வடபாதி கோளத்தில் வலதுபுறமாகவும், தென்பாதி கோளத்தில் இடது புறமாகவும் திசைமாறி இயங்குகின்றன என்பதை அட்மிரல் ஃபெரல் கண்டுபிடித்தார். எனவே இது ஃபெரல் விதி எனப்படும். (Ferrel's Law).

*தற்சுழற்சியுடன் தொடர்புடைய சில உண்மைகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றிற்கான காரணத்தைக் கண்டுபிடித்து அட்டவணையை நிரப்புக.*

| | |
|---|---|
| ● சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் மறைவதாக தோன்றுகிறது. | |
| ● இரண்டு அரை கோளங்களிலும் சுதந்திரமாக நகரும் பொருட்களுக்கு திசை மாற்றம் ஏற்படுகிறது. | |

## சூரியச் சுழற்சி (Revolution)




*படம்* 3.6 ●

படம் 3.6 யை கவனியுங்கள். புவி தனது அச்சுத் தண்டில் சுழல்வதோடு ஒரு குறிப்பிட்ட சுற்றுப்பாதையில் சூரியனையும் சுற்றிவருகிறது. இது சூரியச் சுழற்சி எனப்படும். நீள்வட்ட வடிவிலான சுற்றுப்பாதையில் ஒருமுறை தன் சுழற்சிப் பாதையை முடிப்பதற்குத் தேவைப்படும் நேரம் 365 ¼ நாட்களாகும். நடைமுறை வசதிக்காக இதில் 365 நாட்களை ஒரு வருடமாகக் கணக்கிடப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் அதிகமாகவுள்ள கால் (¼) நாளை, நான்கு வருடங்களுக்கு ஒருமுறை கூட்டிச் சேர்த்து பிப்ரவரி மாதத்தில் 29 நாட்களாகக் கணக்கிடப்படுகிறது. இவ்வாறு 366 நாட்கள் கொண்ட வருடத்தை அதிவருடம் (Leap year) என அழைக்கிறோம்.



பிப்ரவரி 2024

| Sunday | Monday | Tuesday | Wednesday | Thursday | Friday | Saturday |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | | |

*தரப்பட்டுள்ள நாட்காட்டியிலிருந்து 2024 ஓர் அதிவருடம் என்பதைப் புரிந்துகொண்டீர்களல்லவா.*

*2024 க்குப் பிறகு தொடர்ந்து வரும் ஐந்து அதிவருடங்களைக் கண்டுபிடியுங்கள்.*

## அச்சுத்தண்டு சுழற்சி *(Precession)*




• படம் 3.7

*தற்சுழற்சியும் சூரியச் சுழற்சியும் போலவே புவியின் இன்னொரு சலனம் அச்சுத் தண்டின் சுழற்சியாகும். புவி தன் அச்சுத்தண்டில் ஒரு சுழற்சியை நிறைவுச் செய்ய 24 மணிநேரம் எடுக்கும்போது. சுமார் 26000 ஆண்டுகள் எடுத்துத்தான் கூம்பு வடிவத்தில் ஒரு வட்டம் உருவாகும் வகையில் மிக மெதுவாகப் புவியின் அச்சுத்தண்டு நகர்கிறது.*

## சூரிய அண்மை (Perihelion) சூரிய தொலைவு நிலை (Aphelion)

புவியின் சுழற்சிப் பாதை நீள்வட்ட வடிவில் உள்ளதால் புவிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தூரத்தில் சில நாட்களில் வேறுபாடு காணப்படும். ஒரு சூரியச் சுழற்சியின் காலத்தில் சூரியன் புவியின் மிக அண்மையில் வருவதை (147 மில்லியன் கிலோமீட்டர் தூரம்) சூரிய அண்மைநிலை (Perihelion) என அழைக்கிறோம். இது நிகழ்வது ஜனவரி மாதத்தில் ஆகும் (ஜனவரி 03). சூரியனுக்கும் புவிக்கும் இடையே உள்ள தூரம் மிகவும் அதிகமாக இருப்பது (152 மில்லியன் கிலோமீட்டர்) ஜூலை மாதத்தில் ஆகும் (ஜூலை 04). இதனைச் சூரிய தொலைநிலை (Aphelion) என அழைக்கிறோம்.




புவியின் சுற்றுப்பாதை வேகம் ஒரு வினாடிக்குச் சுமார் 30 கிலோமீட்டர் என்ற அளவில் உள்ளது. புவிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள வேறுபாடு ஈர்ப்பு விசையில் வேறுபாட்டையும் சூரியச் சுழற்சி வேகத்தில் வேறுபாடு ஏற்பட காரணமாகிறது.

## அயனம் (Apparent Movement of the Sun)




• படம் 3.9

*சார்புநிலையை விவரிக்கும் படம் விகித அளவில் அல்ல.*

அச்சுத்தண்டின் சாய்வு $23\frac{1}{2}^0$ என்பது சூரியச் சுழற்சி நடைபெறும் காலம் முழுவதும் நிலைநிறுத்தப்படுவதால் சூரியனின் சார்புநிலை மகர ரேகைக்கும் கடக ரேகைக்கும் இடையில் மாறிவருகிறது. சூரியனின் இந்தச் சார்புநிலை மாற்றத்தை அயனம் என அழைக்கிறோம். இதற்கு ஏற்ப இரவு, பகல்களின் கால அளவில் வேறுபாடு காணப்படுகிறது. இவ்வாறு சூரியனின் நிலை வெவ்வேறு அட்சக் கோடுகளின் நேர் மேலாக வரும் சில முக்கிய நாட்கள் எவை எனப் பார்ப்போம்.

## சம இரவு பகல் நாட்கள் (Equinox)




படம் *3.10*

*படத்தை நன்கு கவனித்து விடைகளைக் கண்டுபிடிக்கவும்.*

- *சூரியக் கதிர்கள் எந்த அட்சக்கோட்டில் செங்குத்தாக விழுகின்றன?*
- *எந்தெந்த நாட்களில் இவ்வாறு நிகழ்கிறது?*

புவியின் சூரியச் சுழற்சியின் போது சூரியக்கதிர்கள் நிலநடுக்கோட்டில் செங்குத்தாக விழும் மார்ச் 21 மற்றும் செப்டம்பர் 23 ஆகிய நாட்களில் இரு அரைகோளங்களிலும் இரவு பகலின் காலஅளவு சமமாகயிருக்கும். இந்த நாட்களை விசுவங்கள் அல்லது சம இரவு பகல் நாட்கள் (Equinox) என அழைக்கப்படுகின்றன. மார்ச் 21 வசந்த விசுவம் (Spring Equinox) எனவும் செப்டம்பர் 23 இலையுதிர் விசுவம் (Autumnal Equinox) எனவும் அழைக்கப்படுகிறது.

### சூரியனின் சார்புநிலை

*கடகரேகை, மகர ரேகைகளுக்கிடையில் சூரியனின் நிலை மாறுவதாக தோன்றுகிறது. உண்மையில் புவியின் அச்சுத்தண்டின் சாய்வும் சூரியச் சுழற்சியும் காரணமாக, புவியிலிருந்து பார்க்கும் போது சூரியனின் நிலை மாறுவதாக நமக்குத் தோன்றுகிறது.*

*உங்கள் பகுதியில் மார்ச் 21 செப்டம்பர் 23 ஆகிய நாட்களில் பகலின் கால அளவு நாட்காட்டியில் உள்ள சூரிய உதயம், மறைவு நேரங்களின் அடிப்படையில் கண்டுபிடிக்கவும்.*

## கோடைக் கால அயனநாள் (Summer Solstice)




படம் *3.11*
*கருத்து விளக்கும் படம்*
*விகித அளவில் அல்ல.*

*படம் 3.11 ஐ உற்று நோக்கவும்*

- *மார்ச் 21 முதல் சூரியனின் சார்புநிலை எந்தத் திசையை நோக்கி மாறுகிறது?*
- *ஜூன் 21 அன்று எந்த அட்சக் கோடு மீது சூரியக்கதிர்கள் செங்குத்தாக விழுகின்றன?*

வடபாதிக் கோளத்தில் மார்ச் 21 முதல் ஜூன் 21 வரையிலான காலகட்டத்தில் நிலநடுக்கோட்டில் இருந்து சூரியனின் சார்புநிலையின் மாற்றம் வடக்கே கடக ரேகை வரையிலும் காணப்படுகிறது. இதன் விளைவாக ஜூன் 21–இல் வடபாதிக்கோளத்தில் மிக நீண்ட பகலும் மிகக் குறைந்த இரவும் அனுபவப்படுகின்றன. இந்த நாள் கோடைக்கால அயன நாள் என்று அழைக்கப்படுகிறது. படம் 3.6 கவனித்து கோடைக்கால அயன நாளில் புவியின் அமைவிடத்தை புரிந்து கொள்வீர்கள் அல்லவா?

மார்ச் முதல் செப்டம்பர் வரையிலான ஆறு மாதகாலம் சூரியனின் சார்புநிலை வடபாதிக் கோளத்தில் இருப்பதால் இந்தக் காலத்தில் வடதுருவப் பகுதிகளில் ஆறு மாதங்கள் தொடர்ந்து பகலாக இருக்கும்.

### சூரியனின் சலனங்கள்

*புவி மற்றும் சந்திரனைப் போலவே சூரியனுக்கும் இரண்டுவிதமான சலனங்கள் உள்ளன. அது தற்சுழற்சி – சூரிய சுழற்சி ஆகும். சூரியன் அதன் அச்சுத் தண்டில் 27 நாட்களில் ஒரு சுழற்சியை நிறைவு செய்கிறது. ஆனால் சூரியன் உட்படவுள்ள சூரியக் குடும்பம் பால்வெளி மண்டலத்தின் மையத்தைச் சுற்றி வர 230 முதல் 250 மில்லியன் வருடங்கள் ஆகிறது.*

வடபாதிக் கோளத்தில் கோடைகால அயன நாளில் வெவ்வேறு அட்சரேகைகளில் பகலின் கால அளவை குறிக்கும் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| அட்சக்கோடு | பகலின் கால அளவு |
|---|---|
| $90^0$ வடக்கு | 24 மணிநேரம் |
| $66½^0$ வடக்கு | 24 மணிநேரம் |
| $23½^0$ வடக்கு | 13 மணிநேரம் 27 நிமிடங்கள் |
| $0^0$ | 12 மணிநேரம் |
| $23½^0$ தெற்கு | 10 மணிநேரம் 33 நிமிடங்கள் |
| $66½^0$ தெற்கு | இல்லை |
| $90^0$ தெற்கு | இல்லை |

*வடபாதிக் கோளத்தில் கோடைகால அயன நாளில் (ஜூன் 21) தென்பாதிக் கோளத்தில் பகலின் காலஅளவில் ஏற்படும் மாற்றம் என்ன?*

வடபாதிக் கோளத்தின் துருவப் பகுதியில் ஆறு மாதங்கள் பகலாக இருக்கும். அவ்வாறெனில் இக்காலகட்டத்தில் தென்துருவப் பகுதியில் இரவுகள் எவ்வாறு இருக்கும்?

## குளிர்கால அயனநாள் (Winter Solstice)




படம் 3.12

*படத்தை உற்று நோக்கவும் செப்டம்பர் 23 முதல் சூரியனின் சார்புநிலை எந்தத் திசையை நோக்கி மாறுகிறது? டிசம்பர் 22–இல் எந்த அட்சக்கோட்டில் சூரியக்கதிர்கள் செங்குத்தாக விழுகின்றன?*

### துருவ ஒளி
*(Aurora)*



படம் 3.13

*குளிர் காலங்களில் துருவப் பகுதியில் வலுவான சூரியக் காற்றுகள் உருவாகும் நேரங்களில் காணமுடிகின்ற ஒரு இயற்கை நிகழ்வே துருவ ஒளி எனப்படும். உயர்ந்த அட்சக்கோடு பகுதிகளில் வளிமண்டலத்தில் இயற்கையாக உருவாகும் வண்ண ஒளியே துருவ ஒளி ஆகும். வட துருவப் பகுதிகளில் அரோமா போரியாலிஸ் (Aurora Borealis) என்றும் தென் துருவப் பகுதிகளில் அரோரா ஆஸ்ட்ராலிஸ் (Aurora Australis) என்றும் அழைக்கப்படுகின்றன.*

தென்பாதிக்கோளத்தில் செப்டம்பர் 23 முதல் டிசம்பர் 22 வரையுள்ள கால அளவில் நிலநடுக்கோட்டில் இருந்து சூரியனின் சார்புநிலையின் மாற்றம் தெற்கே மகர ரேகை வரை காணப்படுகிறது. இதன் விளைவாக டிசம்பர் 22 இல் தென்பாதிக் கோளத்தில் மிக நீண்ட பகலும் மிகக் குறுகிய இரவும் ஏற்படுகிறது. இந்நாள் குளிர்கால அயனநாள் எனப்படுகிறது. படம் 3.6 கவனித்து குளிர்கால அயனநாளில் புவியின் அமைவிடத்தை அறிந்து கொள்ளவும்.

செப்டம்பர் முதல் மார்ச் வரையிலான ஆறுமாத காலம் சூரியன் தென்பாதிக் கோளத்தில் ஒளிர்வதால் வடதுருவப் பகுதிகளில் ஆறுமாதக் காலம் தொடர்ந்து இரவாக இருக்கும்.

வடபாதிக்கோளத்தில் குளிர்கால அயன நாளில் வெவ்வேறு அட்சக்கோடு ரேகைகளில பகலின் கடகரேகை குறிப்பிடும் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| அட்சரேகை | பகலின் கால அளவு |
|---|---|
| $90^0$ வடக்கு | இல்லை |
| $66½^0$ வடக்கு | இல்லை |

| | |
|---|---|
| 23½$^0$ வடக்கு | 10 மணிநேரம் 33 நிமிடங்கள் |
| $0^0$ | 12 மணிநேரம் |
| 23½$^0$ தெற்கு | 13 மணிநேரம் 27 நிமிடங்கள் |
| 66½$^0$ தெற்கு | 24 மணிநேரம் |
| $90^0$ தெற்கு | 24 மணிநேரம் |

*தென்பாதிக் கோளத்தில் குளிர் அயன நாளாக (டிசம்பர் 22) இருக்கும் போது வடபாதிக் கோளத்தில் பகலின் கால அளவில் என்னென்ன மாற்றங்கள் ஏற்படும்?*

## வட அயனம் – தென் அயனம்

குளிர் அயன நாளைத் தொடர்ந்து (டிசம்பர் 22) மகர ரேகையில் இருந்து (23½$^0$ தெற்கு) கடக ரேகை வரையிலான சூரியனின் அயனத்தை வட அயனம் என்றும், கோடைகால அயன் நாளைத் தொடர்ந்து (ஜூன் 21) கடக ரேகையிலிருந்து (23½$^0$ வடக்கு) மகரரேகை வரையிலான சூரியனின் அயனத்தை தென் அயனம் என்றும் அழைக்கிறோம்.

*அட்டவணையை நிரப்புகள்*

| சூரியனின் சார்புநிலை | நாள் | அயன நாள் | வடபாதிக்கோளம் | | தென்பாதிக்கோளம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | பகலின் கால அளவு | இரவின் கால அளவு | பகலின் கால அளவு | இரவின் கால அளவு |
| நில நடுக்கோடு | ---------------------- | வசந்த விசுவம் | சமமாக இருக்கும் | | ----------------------------- | |
| | செப்டம்பர் 23 | ------------ | | | | |
| கடகரேகை | ---------------------- | கோடை கால அயனம் | -------------- | மிகவும் குறைவு | ------------ | மிகவும் அதிகம் |
| மகரரேகை | டிசம்பர் 22 | ------------ | மிகவும் குறைவு | ---------------- | மிகவும் அதிகம் | --------------- |

## பருவகாலங்கள் (Seasons)



வசந்தகாலம் கோடைகாலம் இலையுதிர்காலம் குளிர்காலம்

*படம் 3.14*

சூரியனின் சார்புநிலை மாற்றத்திற்கு ஏற்ப ஒவ்வொரு பகுதியிலும் தனித்துவமான காலநிலை சூழல்கள் உருவாகும். இந்தக் கால அளவைப் பருவகாலங்கள் என்று அழைக்கிறோம். புவியின் சூரியச் சுழற்சியும் சூரிய சக்தி கிடைக்கும் அளவில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளும் இதற்குக் காரணமாகும். ஒரு வருடத்தில் வசந்தகாலம், கோடைகாலம், இலையுதிர்காலம், குளிர்காலம் ஆகிய காலங்கள் சுழற்சி முறையில் மீண்டும் மீண்டும் ஏற்படுவதே பருவகால மாற்றங்கள் எனப்படும்.

## பல்வேறு பருவகாலங்களும் அவற்றின் சிறப்பியல்புகளும்

| | | |
|---|---|---|
|  | வசந்தகாலம் (Spring) | • தாவரங்கள் பூத்துக் காய்க்கின்றன<br>• குளிர்காலத்தைத் தொடர்ந்து பகலின் காள அளவு அதிகரிக்கிறது. |
|  | கோடைகாலம் (Summer) | • உயர்ந்த வெப்பநிலை<br>• நீண்ட பகல்பொழுதுகள் |
|  | இலையுதிர்காலம் (Autumn) | • குளிர்காலத்தின் முன்னோடியாக மரங்கள் இலைகளை உதிர்க்கின்றன<br>• பகலின் கால அளவு குறைந்துகொண்டே வருகிறது |
|  | குளிர்காலம் (Winter) | • குறைந்த வளிமண்டல வெப்பநிலை<br>• பனிப்பொழிவு<br>• நீண்ட இரவுப்பொழுதுகள் |

*படங்கள் 3.15*

*வட – தென் பாதிக்கோளங்களில் ஏற்படுகின்ற பல்வேறு பருவக் காலங்களைப் பற்றிய அட்டவணையை உற்று நோக்கி கீழே காணப்படும் வினாக்களுக்கு விடையைக் கண்டறியவும்.*

| சூரியனின் அயனம் | கால அளவு | பருவகாலங்கள் | |
|---|---|---|---|
| | | வடபாதிக் கோளம் | தென்பாதிக் கோளம் |
| • நிலநடுக்கோட்டிலிருந்து கடக ரேகைக்கு | மார்ச் 21 முதல் ஜூன் 21 வரை | வசந்தகாலம் | இலையுதிர்காலம் |
| • கடக ரேகையிலிருந்து நிலநடுக்கோட்டிற்கு | ஜூன் 21 முதல் செப்டம்பர் 23 வரை | கோடைகாலம் | குளிர்காலம் |
| • நிலநடுக்கோட்டிலிருந்து மகர ரேகைக்கு | செப்டம்பர் 23 முதல் டிசம்பர் 22 வரை | இலையுதிர்காலம் | வசந்த காலம் |
| • மகர ரேகையிலிருந்து நிலநடுக்கோட்டிற்கு | டிசம்பர் 22 முதல் மார்ச் 21 வரை | குளிர் காலம் | கோடை காலம் |

- *வடபாதிக் கோளத்தில் கோடைகாலத்தில் சூரியனின் சார்பு நிலையில் என்ன மாற்றம் ஏற்படுகிறது?*
- *தென்பாதிக்கோளத்தில் இலையுதிர் காலமாக இருக்கும்போது வடபாதிக் கோளத்தில் என்ன பருவ காலம்?*
- *செப்டம்பர் 23 முதல் டிசம்பர் 22 வரை தென்பாதிக் கோளத்தில் என்ன பருவம்?*
- *சூரியனின் சார்புநிலை மகர ரேகையிலிருந்து நிலநடுக்கோட்டை நோக்கிச் செல்லும்போது தென்பாதிக் கோளத்தில் என்ன பருவம் காலம்?*

### இந்தியாவின் பாரம்பரிய பருவ காலங்கள்

*பொதுவாக பருவக்காலங்களை நான்காகப் பிரிக்கப்பட்டாலும் இந்தியாவில் வளி மண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் ஆறு வேறுபட்ட பருவ காலங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.*

- *வசந்தகாலம் – மார்ச், ஏப்ரல்*
- *கோடைகாலம் – மே, ஜுன்*
- *மழைக்காலம் – ஜூலை, ஆகஸ்ட்*
- *இலையுதிர்காலம் – செப்டம்பர், அக்டோபர்*
- *முன்பனிக்காலம் – நவம்பர், டிசம்பர்*
- *குளிர்காலம் – ஜனவரி, பிப்ரவரி*

பருவகால மாற்றங்களும் இரவு பகல்களும் ஏற்படுவது எவ்வாறு என விவாதித்தோம் அல்லவா? இவைதவிர புவி சுழற்சியின் இன்னொரு சிறப்புத் தன்மையைப் பற்றி நாம் தெரிந்துகொள்வோம்.

## நேரம்

2024 ஜனவரி 14–இல் ரியல் மேட்ரிட் மற்றும் எஃப்சி. பார்சிலோனா அணிகளுக்கு இடையே பார்சிலோனாவில் வைத்து நடைபெற்ற ஸ்பானிஷ் சூப்பர் கப் கால்பந்து இறுதிப் போட்டியின் நேரடி ஒளிபரப்பின் கால அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.




*படம் 3.16*




*படம் 3.17*

நேரடி ஒளிப்பரப்பு என்றாலும் உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ளவர்கள் வெவ்வேறு நேரங்களில்தான் போட்டியைக் காண்கின்றனர் என்பதைப் புரிந்து கொண்டீர்கள் அல்லவா? இது ஏன் என்று நாம் பரிசோதிக்கலாம்.

புவிதன் அச்சுத்தண்டில் $360^0$ சுழல்வதற்கு 24 மணிநேரம் தேவைப்படுகிறது. அதாவது ஒரு சுழற்சியைப் பூர்த்தி செய்ய தேவைப்படும் நேரமாகும். சூரியனுக்கு எதிராக $15^0$ தீர்க்க ரேகை அளவைக் கடக்க ஒரு மணிநேரம் (60 நிமிடங்கள்) ஆகும். என்றால் ஒரு டிகிரி கடக்க எவ்வளவு நேரம் தேவைப்படும்?

$15^0$ = 1 மணிநேரம் = 60 நிமிடங்கள்

$1^0 = \frac{60}{15}$ = 4 நிமிடங்கள்

ஒவ்வொரு டிகிரி தீர்க்கரேகைக்கும் விகிதாச்சார நேர வேறுபாடு 4 நிமிடங்களாகும்.

தீர்க்க ரேகையின் அடிப்படையில் நேரம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்பதைப் புரிந்துகொண்டீர்களல்லவா? நேரம் கணக்கிடுதல் தொடர்பான சில முக்கிய கருத்துகளைப் பார்ப்போம்.

## வட்டார நேரம் (Local Time)

பழங்காலத்தில் நிழலையும் சூரியனின் உச்சநிலையையும் அடிப்படையாக வைத்து ஒவ்வொரு பகுதியிலும் வட்டார நேரம் கணக்கிடப்பட்டது. சூரியனின் நிலை ஒருவரின் தலைக்கு நேர் மேலாகக் வருகின்ற நேரம் பகல் 12 மணி எனக் கணக்கிடப்பட்டது. இது நிழலின் நீளம் மிகவும் குறைந்துள்ள நேரமாகும். இவ்வாறு சூரியனின் உச்சநிலையின் அடிப்படையில் கணக்கிடப்படும் நேரம் வட்டார நேரம் எனப்படும்.



*படம் 3.18*

### ஜந்தர் மந்தர்



படம் 3.19

*ஜந்தர் மந்தர் என்பது 18–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜெய்ப்பூர் மன்னராயிருந்த இரண்டாம் ஜெயசிங்கால் உருவாக்கப்பட்ட ஒரு வானிலை ஆய்வு மையமாகும். இதில் 20 முக்கிய வானியல் ஆராய்ச்சிக் கருவிகள் ஒருபகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்தி நம் கண்களால் வானியல் நிலைகளை உற்று நோக்க முடிந்தது. இந்தியாவின் வரலாற்று ஆராய்ச்சி மையங்களில் இது மிக முக்கிய மானதும், விரிவானதும் சிறந்த முறையில் பாதுகாக்கப்பட்டதும் ஆகும். இந்தியாவில் இம்மன்னரால் கட்டப்பட்ட ஐந்து ஆராய்ச்சி நிலையங்களில் இது மிகப்பெரியதும், முக்கியமானதுமாகும். டில்லி, உஜ்ஜையின், மதுரா மற்றும் வாரணாசி போன்ற இடங்களில் பிற ஆராய்ச்சி நிலையங்கள் அமைந்துள்ளன. 2010–இல் இந்த இடம் யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப்பட்டது. இங்குள்ள கருவிகள் அக்காலத்தில் வட்டார நேரத்தை மிகத் துல்லியமாகக் கணக்கிட உதவி புரிந்துள்ளன.*

## திட்ட நேரம் (Standard Time)

ஒவ்வொரு தீர்க்கரேகையிலும் வட்டார நேரம் வேறுபட்டிருக்கும். அவ்வாறெனில் ஒரு நாட்டிற்குள்ளேயே வெவ்வேறு வட்டார நேரங்கள் இருக்குமல்லவா? இது ஒரு நாட்டில் பொதுவான தேர்வுகள், ரயில்வே நேரம் வானொலி ஒலிபரப்பு போன்றவற்றில் குழப்பத்தை ஏற்படுத்தும். இச்சிக்கலைச் சமாளிக்க, நாடுகள் சர்வதேச ஒப்பந்தத்தின் அடிப்படையில் $7\frac{1}{2}^0$ தீர்க்கரேகையின் பெருக்கல் பலனாக வருவதும் நாட்டின் மத்தியப் பகுதி வழியாகக் கடந்து செல்லக் கூடியதுமான தீர்க்க ரேகையைத் திட்ட தீர்க்கரேகையாக ஏற்றுகொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட திட்ட தீர்க்கரேகையின் வட்டார நேரத்தை அந்த நாட்டின் திட்டநேரமாகக் கருதுகின்றனர்.

## கிரீன்விச் நேரம் (Greenwich Mean Time)






அட்சக்கோடுகளின் அளவு நிலநடுக்கோட்டிலிருந்து துருவங்களை நோக்கிச் செல்லும்போது அளவு குறைந்து வரும் என்பது நீங்கள் அறிந்ததுதானே. அனைத்து தீர்க்கரேகைகளும் ஒரே அளவுதானே? எனவே சர்வதேச நேர நிர்ணய வசதிக்காக இங்கிலாந்தில் உள்ள ராயல் பிரிட்டீஷ் வானியல் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள கிரீன்விச் என்ற இடத்தின் வழியாகக் கடந்து செல்லும் தீர்க்க ரேகையை $0^0$ தீர்க்க ரேகையாகக் கணக்கிடப்படுகிறது. இதனை முதன்மை மெரிடியன் (Prime Meridian) எனவும் முதன்மை மெரிடியனில் (Greenwich Mean Time) உள்ள வட்டார நேரத்தை கிரீன்விச் நேரம் எனவும் அழைக்கிறோம். உலகம் முழுவதும் உள்ள பயணிகள் நேரத்தைக் கிரீன்விச் நேரத்தின் அடிப்படையில் கணக்கிடுகின்றனர். புவியின் சுழற்சி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி இருப்பதால் கிரீன்விச் ரேகையிலிருந்து கிழக்கே ஒவ்வொரு தீர்க்கரேகையையும் கடக்கும்போது நேரம் 4 நிமிடங்கள் கூடுதலாகவும் மேற்கே நகரும் போது 4 நிமிடங்கள் குறைவாகவும் இருக்கும்.

1. *கிரீன்விச் மெரிடியனில் ($0^0$ தீர்க்க ரேகை) காலை 10 மணியாக இருக்கும்போது அதன் அருகில் ஒரு டிகிரி கிழக்கிலும் ஒரு டிகிரி மேற்கிலும் நேரம் என்னவாக இருக்கும்?*

| $1^0$ மேற்கு | $0^0$ | $1^0$ கிழக்கு |
|---|---|---|
| ? | 10 AM | ? |

2. *கிரீன்விச் மெரிடியனில் ($0^0$ தீர்க்க ரேகை) இரவு 9 மணியாக இருக்கும் போது $30^0$ கிழக்கே நேரம் என்னவாக இருக்கும்?*

| $0^0$ | $30^0$ கிழக்கு |
|---|---|
| 9 PM | ? |

## இந்திய திட்ட நேரம் (Indian Standard Time)

இந்தியாவில் திட்ட நேரம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது எனப் பார்ப்போம். இந்தியாவின் கிழக்கு எல்லையில் உள்ள மாநிலமான அருணாச்சல பிரதேசத்துக்கும் ($97^0$.25' கிழக்கு) மேற்கு எல்லையில் உள்ள மாநிலமான குஜராத்துக்கும் ($68^0$.7' கிழக்கு) இடையே சுமார் $30^0$ தீர்க்க ரேகை வேறுபாடு உள்ளதால் இரண்டு மணிநேரம் வரை வட்டாரநேர வேறுபாடு உள்ளது. இதனால் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்க்க நாட்டில் ஒரு திட்ட நேரம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்தியாவின் ஏறக்குறைய மத்திய பகுதி வழியாகக் கடந்து செல்கின்றதும் $7\frac{1}{2}^0$ யின் பெருக்கல் பலனான $82\frac{1}{2}^0$ கிழக்குத் தீர்க்கரேகையைத் திட்ட தீர்க்க ரேகையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அந்த ரேகையிலுள்ள வட்டார நேரம் இந்தியாவின் திட்ட நேரமாகக் கணக்கிடப்படுகிறது.




*படம் 3.21*

கிரீன்விச் தீர்க்கரேகைக்கும் ($0^0$) இந்தியாவின் திட்ட தீர்க்கரேகைக்கும் ($82\frac{1}{2}^0$ கிழக்கு) இடையே எவ்வளவு நேர வேறுபாடு உள்ளது?

## நேர மண்டலங்கள் (Time Zones)

சர்வதேச ஒப்பந்தப்படி உலகத்தை ஒரு மணி நேர வேறுபாட்டில் 24 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவையே நேர மண்டலங்கள் எனப்படுகின்றன. ஒவ்வொரு மண்டலத்திலும் சுமார் $15^0$ தீர்க்கரேகை




*படம் 3.22*

அளவுக்குப் பரப்பு உண்டு. இந்தியாவின் கிழக்கு எல்லையில் உள்ள அருணாச்சல பிரதேசம் மேற்கு எல்லையில் உள்ள குஜராத் இடையே சுமார் இரண்டு மணி நேர வேறுபாடு உள்ளது எனப் புரிந்து கொண்டீர்கள் அல்லவா? வேறுபாடு குறைவாக இருப்பதால் நாட்டின் மத்தியப் பகுதி வழியாகக் கடந்து செல்லும் தீர்க்க ரேகையின் நேரத்தைத் தேர்ந்தெடுப்பதில் சிக்கல் எதுவும் இல்லை. ஆனால் தீர்க்கரேகையின் பரப்பளவு கூடுதலாக உள்ள பிரான்ஸ், ரஷ்யா, கனடா, யு. எஸ்.ஏ, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் பல நேர மண்டலங்களும் திட்ட நேரங்களும் இருக்கும்.

## சர்வதேச தேதிக்கோடு (International Date Line)




*படம் 3.23*

படம் 3.23 ஐ உற்று பார்க்கவும். டிசம்பர் 25 மாலை 6.00 மணிக்குக் கிரீன்விச் தீர்க்கரேகையிலிருந்து கிழக்கு நோக்கிப் பயணம் தொடங்கிய A என்ற மனிதனும் மேற்கு நோக்கிப் பயணம் செய்த B என்ற மனிதனும் $180^0$ கிழக்கும் $180^0$ மேற்கும் சென்றடைந்த நாளையும் நேரத்தையும் கவனியுங்கள்.

படம் 3.24 லிருந்து $180^0$ கிழக்கும் $180^0$ மேற்கும் தீர்க்கரேகைகள் ஒரே தீர்க்கரேகைகள்தான் என்று புரிந்துகொள்ளலாம். அதாவது $180^0$ தீர்க்க ரேகையின் இரு புறமுமாக 24 மணிநேர வேறுபாடு உள்ளது. இந்த ரேகையைக் கடந்து கிழக்கு நோக்கிப் பயணம் செய்த A என்ற மனிதனுக்கு ஒரு நாட்காட்டி நாள் நஷ்டமும். மேற்கு நோக்கி பயணம் செய்த B என்ற மனிதனுக்கு ஒரு நாள் கூடுதலும் கிடைக்கும்.

இந்தக் கருத்து மாறுபாட்டைத் தீர்க்க சர்வதேச ஒப்பந்ததின் அடிப்படையில் $180^0$ தீர்க்க ரேகையைச் சர்வதேச தேதிக்கோடாகக் கருதுகின்றனர். இந்த ரேகையைக் கடந்து மேற்கு நோக்கி செல்லும் பயணிகள் ஒரு நாள் கூடுதலாகவும், கிழக்கு நோக்கி செல்லும் பயணிகள் ஒரு நாள் குறைவாகவும் நேரத்தைக் கணக்கிடுகின்றனர்.




படம் 3.24




படம் 3.25

சர்வதேச தேதிக் கோட்டின் இருபக்கங்களிலும் அமைந்துள்ள சில நாடுகளில் இரண்டு நாட்கள் வரும் நிலைமையைத் தவிர்க்க சர்வதேச தேதிக்கோட்டில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. படம் 3. 25–இல் காண்பதுபோல் பசிபிக் பெருங்கடல் பகுதியில் மக்கள் வாழும் நிலப்பகுதிகளைத் தவிர்க்கும் வகையில் இக்கோடு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

புவியின் தற்சுழற்சியும் சூரிய சுழற்சியும் எவ்வாறு நம்முடைய வாழ்க்கையில் தாக்கம் செலுத்துகிறது என்பதைப் பற்றி அறிந்து கொண்டீர்களல்லவா? பல்வேறுபட்ட இயற்கையின் இந்த மாற்றங்கள் நமது அன்றாட செயல்பாடுகளுக்கு ஆற்றலையும் உற்சாகத்தையும் அளிக்கும். உலகின் பல்வேறு பகுதிகளில் பருவகாலங்களிலும் நேரத்திலும் ஏற்படும் வேறுபாடுகள் அந்த இடங்களின் சமூக – கலாச்சார வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

## தொடர் செயல்பாடுகள்

- உங்கள் பகுதியில் ஏற்படும் பல்வேறு பருவ காலங்களில் இயற்கையில் ஏற்படுகின்ற மாற்றங்களை உற்றுநோக்கி சமூக அறிவியல் ஆய்வுப் புத்தகத்தில் எழுதவும்.
- டிசம்பர் 22, ஜூன் 21 ஆகிய நாட்களில் உங்களுடைய பகுதியில் இரவு, பகல்களின் கால அளவு, சூரிய உதயம் – மறைவு நேரங்களின் அடிப்படையில் கணக்கிட்டுக் கண்டுபிடிக்கவும்.

அலகு 4



# அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளும் பொருளாதார அமைப்புகளும்

நண்பர்கள் ஆதியும் ஜோபுவும், ஆஷ்னாவும் தங்களின் தேவைகளைப் பற்றி விவாதிக்கிறார்கள்.




படம் 4.1

அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக நம் அனைவருக்கும் இந்த தேவைகள் உள்ளதா? நம்முடைய தேவைகள் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன? பல்வேறு வகையான பொருட்கள் மற்றும் சேவைகளைச் சரியான முறையில் பயன்படுத்துவதன் வழி தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. உணவு, உடை, தங்குமிடம் போன்ற வாழ்க்கையின் தவிர்க்க முடியாத தேவைகளை அடிப்படைத் தேவைகள் (Basic Needs) என்று கூறலாம். ஆனால் நாம் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் எல்லா பொருட்களையும் சேவைகளையும் அடிப்படைத் தேவைகளைத் திருப்திப்படுத்துவதற்காக மட்டும் பயன்படுத்தப் படுகின்றனவா? நமது வாழ்க்கையைக் கூடுதல் வசதியாகவும் மகிழ்ச்சியாகவும் மாற்றும் சில தேவைகள் நமக்கு உண்டு. இந்த தேவைகள் மகிழ்ச்சியான தேவைகள் என்று கூறப்படுகிறது. ஆடம்பர கார்கள், விலை மதிப்பு மிக்க நகைகள், அதிக மதிப்புள்ள ஆடைகள் இவையனைத்தின் உபயோகம் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

*நமது வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளையும் ஆடம்பரத் தேவைகளையும் கண்டுபிடித்துப் பட்டியலிடவும்.*

அன்றாட வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளையும் மகிழ்ச்சியான தேவைகளையும் நாம் விவாதித்தோமல்லவா? இந்த தேவைகளுக்கு ஏதேனும் பொதுவான பண்புகள் உள்ளதா? நாம் பரிசோதிக்கலாம்.

## தேவைகளின் சிறப்புகள்

- மனிதனின் தேவைகள் பல்வேறானவைகளும், எண்ணற்றவையுமாகும்.
- சில தேவைகள் தனியாகவும் மற்ற சில தேவைகள் கூட்டு முயற்சியாகவும் பூர்த்தி செய்ய முடியும்.
- ஒரு முறை நிறைவேற்றப்பட்ட தேவை மீண்டும் மீண்டும் வரலாம்
- நேரம், இடம், தனிநபர்கள் போன்றவற்றிற்கு ஏற்ப தேவைகள் மாறுபடும்
- மனிதனின் முன்னேற்றத்திற்கு ஏற்ப தேவைகளிலும் மாற்றங்கள் வருகின்றன.

முன்னேற்றத்துடன் தேவைகளும் கூடுகிறது. ஆனால், செல்வங்கள் தேவைகளுக்கு ஏற்ப அதிகரிக்க வேண்டுமென்பதில்லை. பொருட்களையும் சேவைகளையும் பணம் கொடுத்தும் கொடுக்காமலும் நாம் பயன்படுத்துகிறோம். மனிதனின் தேவைகள் ஏராளமானதால் அவற்றை நிறைவேற்ற ஒரு முன்னுரிமை தேவையாகும். அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தனிமனிதன் முன்னுரிமை கொடுக்கிறான். இவ்வாறு மனிதனின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய நாடு ஏராளம் பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்கிறது. உற்பத்திச் செயல்முறையோடு தொடர்புள்ள நாம்

அடிப்படையாகச் சில பிரச்சினைகளை எதிர்கொள்வதுண்டு. அவை எவை என்று பார்ப்போம்.

*உங்கள் பள்ளியில் மதிய உணவு விநியோகத்திற்காகத் தேவையான காய்கறிகளை பள்ளியில் உற்பத்தி செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டது என்று வைத்துக்கொள்வோம். காய்கறி விவசாயத்துடன் தொடர்புடைய என்னென்ன தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். பட்டியலிடவும்*

பள்ளியில் காய்கறி விவசாயம் தொடர்பாக எடுக்க வேண்டிய முக்கியமான கருத்துக்களை விவாதித்தோமல்லவா? ஒரு சமூகமானலும் நாடானாலும் எந்த ஒரு பொருளை உற்பத்தி செய்யும் போதும் இவ்வாறான பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டும்.



*படம் 4.2 ● பள்ளிக்கூடத்தில் காய்கறித்தோட்டம்*

## அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள்
**(Basic Economic Problems)**

பொருட்களுடையவும் சேவைகளுடையவும் உற்பத்தி செயல்முறையுடன் தொடர்புடைய ஒருநாடு எதிர்கொள்கின்ற அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் மூன்று.

| எதை உற்பத்தி செய்வது? (What to produce?) | எப்படி உற்பத்தி செய்வது? (How to produce?) | யாருக்காக உற்பத்தி செய்வது? (For whom to produce?) |
|---|---|---|

## எதை உற்பத்தி செய்வது? (What to produce?)

பள்ளி மதிய உணவுக்கு என்னென்ன காய்கறிகளை எவ்வளவு அளவுகளில் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதை நாம் முன்னுரிமை அடிப்படையில் தீர்மானிக்க வேண்டும். அதேபோல ஒரு நாட்டில் இருக்கும் வளங்களைப் பயன்படுத்தி எவற்றை உற்பத்திச் செய்ய வேண்டும் என்பதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். எவற்றை உற்பத்திச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தால் அதை எந்த அளவுக்கு உற்பத்தி செய்ய வேண்டும் என்பதும் முக்கியமானதாகும். ஒரு நாட்டைப் பொறுத்தவரையில் அது பல பொருட்களையும் சேவைகளையும் உற்பத்திச் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். ஏதாவது ஒரு பொருளோ சேவையோ கூடுதல் உற்பத்தி செய்ய வேண்டும் என்று நாடு தீர்மானித்தால் மற்ற பொருட்களின் உற்பத்திக்குப் பயன்படுகின்ற வளங்களைக் கட்டுப்படுத்த வேண்டும், எடுத்துக்காட்டாக உணவுப்பற்றாக்குறை நேரிடுகின்ற ஒரு நாடு கிடைக்கின்ற செல்வங்களில் கூடுதல் விகிதமும் உணவு உற்பத்திக்கு விநியோகிக்க வேண்டும். அதுபோல் தொழில்துறைப் பொருட்களை உற்பத்தி செய்யத் தீர்மானித்தால் என்னென்ன தொழில்களைத் தொடங்க வேண்டும்? எத்தனை

தொழில் நிறுவனங்கள் தொடங்க வேண்டும்? என்பதையும் தீர்மானிக்க வேண்டும். சமூகத்தின் தேவைகளும் நாட்டில் உற்பத்தி செய்யும் உற்பத்தி பொருட்களின் அளவிற்கும் இடையில் ஒரு சமநிலையை அடைவதற்காக நாடு இத்தகைய முடிவுகளை எடுக்கிறது.

*உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய என்னென்ன தயாரிப்புகள் உங்கள் பகுதியில் உற்பத்தி செய்யப்படுகின்றன? அவை உங்கள் பயன்பாட்டிற்குப் போதுமானதா?*

எந்தெந்த பொருட்களையும் சேவைகளையும் உற்பத்திச் செய்ய வேண்டும் எவ்வளவு உற்பத்தி செய்யவேண்டும் என்பது தீர்மானிக்கப்பட்டால் அது எந்த முறையில் உற்பத்திச் செய்யப்பட வேண்டும் என்பதே இரண்டாவது முக்கியமான பிரச்சினையாகும்.

## எப்படி உற்பத்தி செய்வது (How to produce?)

கொடுக்கப்பட்ட படங்களைக் கவனிக்கவும். படம் 4.3 லும் 4.4 லும் சப்பாத்தி தயாரிப்பதில் என்ன வித்தியாசத்தைக் காணலாம்?

இங்கு எந்த தயாரிப்புமுறை அதிகம் பயன்படுத்தப்படுகிறது?



*படம் 4.3*



*படம் 4.4*

*படம் 4.3* ---------------------- *படம் 4.4* ----------------------------

இது போல வேளாண்மை தொடர்பாகக் கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கவனித்து எந்த விதமான உற்பத்திமுறை அதிகம் பயன்படுத்தப்படுகிறது என்பதைக் குறித்துக் கொள்ளவும்.



படம் 4.5



படம் 4.6

1. படம் 4.5 ------------------- 1. படம் 4.6 ------------------------

படங்களிலிருந்து ஒரே பொருளை வெவ்வேறு விகிதங்களில் தொழில்முறை உழைப்பு, மூலதனம் என்பவைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்ய முடியுமென்பதைப் புரிந்துகொண்டோமல்லவா? படம் 4.3, படம் 4.5 என்பவற்றைக் கவனித்தால் உழைப்பு என்னும் உற்பத்திமுறை அதிகமாகப் பயன்படுத்துவதைக் காணலாம். ஆனால் படம் 4.4 படம் 4.6 என்பவற்றைக் கவனித்தால்இயந்திரங்கள் உற்பத்திக்கு அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன என்பதை நாம் புரிந்து கொள்ளமுடியும்.

அதிக மனிதஆற்றலையும் குறைந்த மூலதனத்தையும் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் முறையை உழைப்புச் செறிந்த நுட்பம் (Labour Intensive Technique) என்று அழைக்கின்றனர்.

அதிக மூலதனத்தையும் குறைந்த உழைப்பையும் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் முறை மூலதனம் செறிந்த நுட்பம் (Capital Intensive Technique) எனப்படும்.

எப்படி உற்பத்தி செய்வது என்பது தொழில்நுட்பங்களின் தேர்வோடு தொடர்பான பிரச்சினை. அதாவது எந்த விதமான தொழில் நுட்பத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது அந்தப் பகுதியில் கிடைக்கின்ற மிகுதியான பொருள்களை அடிப்படையாகக் கொண்டுதான் தீர்மானிக்க முடியும். மிகுதியாகக் கிடைக்கின்ற பொருள்களின் தன்மையைப் பொறுத்து உற்பத்தி முறையிலும் மாற்றங்கள் ஏற்படுவதுண்டு.

## உழைப்புச் செறிந்த நுட்பத்தின் சிறப்பியல்புகள்

- அதிக தொழிலாளர்களைப் பயன்படுத்தி செய்யப்படும் உற்பத்தி
- குறைந்த அளவிலுள்ள மூலதன பயன்பாடு
- அதிகநேரம் தேவைப்படும் உற்பத்தி முறை
- சுற்றுச்சூழலுக்கு இணங்கிய உற்பத்தி முறை
- தொழில் நுட்பங்களின் குறைந்தபயன்பாடு

## மூலதனம் செறிந்த நுட்பத்தின் சிறப்பியல்புகள்

- தொழிலாளர்களின் தேவையில் குறைவு
- அதிக மூலதன முதலீடு பயன்படுத்தப்படுகிறது.
- உற்பத்தித் திறனை உறுதி செய்தல்
- தொழில்நுட்பத்தைக் கூடுதலாக சார்ந்திருப்பது
- உற்பத்திக்குக் குறைந்த அளவிலான நேரம்

நாட்டின் தேவை, உற்பத்திக் காரணிகளின் இருப்பு இவற்றைக் கருத்தில் கொண்டு உற்பத்தி முறையைத் தீர்மானிக்க வேண்டும்.

உங்கள் பகுதியில் உழைப்புச் செறிந்த தொழில்நுட்ப முறையையும். மூலதனம் செறிந்த தொழில் நுட்ப முறையையும் பயன்படுத்தி நடத்துகின்ற உற்பத்தி செயல்பாடுகளைப் பட்டியலிடவும்..

| உழைப்புச் செறிந்த தொழில்நுட்ப முறை | மூலதனம் செறிந்த தொழில்நுட்ப முறை |
|---|---|
| • | • |
| • | • |
| • | • |

## யாருக்காக உற்பத்தி செய்ய வேண்டும்?

**(For whom to produce?)**

மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற நிலையில்தான் உற்பத்தி செய்யப்பட வேண்டும். உற்பத்தி செய்யப்படும் பொருட்களும் சேவைகளும் மக்களிடையே எப்படி விநியோகிக்கப்படுகின்றது என்பது யாருக்காக உற்பத்தி செய்ய வேண்டும் என்பதைக் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டும். கிடைக்கின்ற வளங்கள் சமூகத்திலுள்ள

அனைவருக்கும் பயன்படும் விதம் விநியோகிக்கின்ற முறையில் உற்பத்தி நடவடிக்கைகள் திட்டமிடப்பட வேண்டும்.

பொருட்களும் சேவைகளும் உற்பத்தி செய்யப்படுவது உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு போன்றவற்றின் ஒருங்கிணைந்த செயல்பாட்டின் வழியாகத் தான் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? அவ்வாறெனில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் மதிப்பு உற்பத்தி காரணிகளுக்கு அவற்றின் பங்கிற்கு ஏற்ப பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். நிலத்திற்கு குத்தகையாகவும், உழைப்பிற்கு ஊதியமாகவும் மூலதனத்திற்கு வட்டியாகவும் அமைப்புக்கு லாபமாகவும் உற்பத்தி மதிப்பு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதாவது உற்பத்தியின் மூலம் கிடைக்கும் வருமானம் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படுகிறது என்பது முக்கியமாகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள சில நிகழ்வுகளைக் கவனியுங்கள். அவை எந்த அடிப்படைப் பொருளாதார பிரச்சனையுடன் தொடர்புடையவை என்று கண்டுபிடித்து எழுதவும்.




படம் 4.7 ● பகிர்ந்தளிப்பு

### *சிந்தியுங்கள் கண்டுபிடியுங்கள்*

| | |
|---|---|
| ஒரு குடும்பஸ்ரீ குழவை சேர்ந்தவர்கள் ஒரு உற்பத்தி பிரிவைத் தொடங்க தீர்மானித்தனர். உறுப்பினர்கள் மத்தியில் பல கருத்துக்கள் எழுந்தன, அவர்கள் முடிவு செய்ய வேண்டிய அடிப்படை பிரச்சினைகள் என்னவாக இருக்கும். |  • |
| கலந்துரையாடலின் முடிவில் சிறிது நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்ய தீர்மானித்தனர். விவசாயத்திற்கு நிலத்தை தயார் செய்ய இயந்திரங்களின் அளவும் எண்ணிக்கையும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் எவ்வளவு வேண்டும் என்று விவாதிக்கப்பட்டது. இது எந்த அடிப்படையிலுள்ள பொருளாதார பிரச்சினையுடன் தொடர்புடையது? | •  |
| குடும்பஸ்ரீ குழு செயல்படும் பகுதியில் காய்கறிகள் பயிரிடாத குடும்பங்கள் உள்ளன. அவர்களுக்கும் காய்கறிகள் தேவை. மீதி வரும் காய்கறிகளை அருகிலுள்ள இடங்களில் விற்கலாம் என்ற இலக்கை வைத்திருந்தார்கள். மேலும் விவசாயத்தில் கிடைக்கும் லாபத்தை உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும். இது எந்த அடிப்படையிலான பொருளாதாரப் பிரச்சினையுடன் தொடர்புடையது. | •  |

உலகம் முழுவதும் நிலவும் இந்த அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் பல்வேறுபட்ட பொருளாதார அமைப்புகள் மூலம் தீர்மானிக்கப்படுகின்றன. பொருளாதார அமைப்பு என்றால் என்ன? ஒரு நாடு பல்வேறு பொருட்களுடையவும், சேவைகளுடையவும் உற்பத்தி பகிர்ந்தளிப்பு, நுகர்வு ஆகியவற்றை ஒழுங்கமைக்கும் முறைதான் பொருளாதார அமைப்பு. கிடைக்கக் கூடிய வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் மனிதனுடைய தேவைகளைத் திருப்திபடுத்துவதுதான் அனைத்து விதமான பொருளாதார அமைப்புகளின் குறிக்கோளாகும்.

## பொருளாதார அமைப்புகளின் சிறப்புகள்

- பொருளாதார அமைப்பு மனிதனால் உருவாக்கப்பட்டது.
- பொருளாதார அமைப்பு மாற்றத்திற்கு உட்பட்டது.
- பொருளாதார அமைப்புகளில் இடம்பெற்ற பொருளாதார நடவடிக்கைகள் மாறிக்கொண்டே இருக்கும்.
- உற்பத்தி, பகிர்ந்தளிப்பு, நுகர்வு ஆகியவை பொருளாதார அமைப்புகளின் முக்கிய செயல்பாடுகள் ஆகும்.

## பல்வேறு வகையான பொருளாதார அமைப்புகள்

உற்பத்திக் காரணிகளின் உரிமைகளின் அடிப்படையில் பொருளாதார அமைப்பை மூன்றாகப் பிரிக்கலாம்




## முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு (Capitalist Economy)

உற்பத்திக் காரணிகளின் உரிமை தனிநபர்களிடம் மையப்படுத்தப்பட்டுள்ள அமைப்பு முதலாளித்துவப் பொருளாதார அமைப்பாகும்.

## தனித்தன்மைகள்

- அனைத்து நபர்களுக்கும் சொத்து வைத்திருக்கும் உரிமை உண்டு
- அதிக லாபம் ஈட்டுவதுதான் இலக்கு
- அரசாங்கத்தின் தலையீடு குறைவு.

- தனிநபர்கள் எந்த வளங்களையும் சேமித்து அவர்கள் விரும்பும் பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்ய முடியும்.
- நுகர்வோருக்குச் சந்தையில் முழு சுதந்திரம் உள்ளது. (நுகர்வோருக்கு முழு உரிமை)
- தொழில் நிறுவனங்களுக்கு இடையே போட்டி நிலவுகிறது.

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு நடைமுறையிலுள்ள பல நாடுகளிலும் பொருளாதார வளர்ச்சியில் அரசாங்கத்தின் தீவிர பங்கு இன்று இருப்பதைக் காணலாம்.

## சோசியலிச பொருளாதார அமைப்பு (Socialist Economy)

அனைத்து விதமான உற்பத்திக் காரணிகளின் உரிமையும் கட்டுபாடும் அரசாங்கத்திடம் மையப்படுத்தப்பட்டிருப்பது சோசியலி பொருளாதார அமைப்பாகும். ஒரு மையப்படுத்தப்பட்ட திட்டக்குழு பொருளாதார நடவடிக்கைகளில் முடிவுகளை எடுக்கும்.

### தனித்தன்மைகள்

- உற்பத்திக் காரணிகளின் உரிமை அரசாங்கத்திடம் உள்ளது.
- சமூக நலமே முக்கிய நோக்கம்.
- சந்தை மீதான அரசாங்கத்தின் கட்டுப்பாடு
- வளங்களையும் தேசிய நோக்கத்தையும் கருத்தில் கொண்டு மத்திய திட்டக்குழு வளங்களை ஒதுக்கீடு செய்கிறது.
- வருமானத்திற்கும் சொத்திற்கும் இடையிலான சமமின்மை குறைகிறது.

தனியார் நிறுவனங்களின் பங்களிப்பும் இன்று சோசியலிச பொருளாதார அமைப்பில் காணப்படுகிறது.

## கலப்பு பொருளாதார அமைப்பு (Mixed Economy)

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பிலும் சோசியலிச பொருளாதார அமைப்பிலும் இடம்பெற்ற சில சிறப்புகள் ஒருங்கிணைந்து காணப்படும் முறைதான் கலப்புப் பொருளாதார அமைப்பு.

### தனித்தன்மைகள்

- தனியாருக்கும் பொதுத்துறைக்கும் இடையே ஒத்துழைப்பு
- இலாபமும் சமூக நலனும் முக்கிய நோக்கங்களாகும்
- பொருளாதார நடவடிக்கைகளில் தனிப்பட்ட சுதந்திரம்

- அரசாங்கத்தின் திட்டங்களைத் தயாரிப்பதற்கு ஏற்ற பொருளாதாரத் திட்டமிடல்
- சில துறைகளில் பொருட்களின் விலையில் அரசின் கட்டுப்பாடு.
- அவசரத்தேவைப் பொருட்களுக்கும் சேவைகளுக்கும் அரசாங்கம் முக்கியத்துவம் வழங்குகிறது.

கலப்புப் பொருளாதார அமைப்பின் அடிப்படை பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது சந்தைகளின் வழியாகவும் மத்தியத் திட்டமிடலின் மூலமுமாகும். சுதந்திரத்திற்குப் பிறகு கலப்புப் பொருளாதாரத்தை இந்தியா எற்றுக்கொண்டது.

உலக பொருளாதாரம் இன்று அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமாக மாறி வருகிறது.

### அறிவுப் பொருளாதார அமைப்பு
*(Knowledge Economy)*

*அறிவும் திறனும் வளர்ச்சிக்கும் புதுமையாக்கத்திற்குமான ஒரு திறவுகோல் போன்ற ஒரு பொருளாதார அமைப்பு அறிவுப் பொருளாதார அமைப்பு எனப்படும். இந்தப் பொருளாதார அமைப்பில் அறிவு ஒரு முக்கியமான வளமாகக் கருதப்படுகிறது. அதனுடைய உருவாக்கம், பரப்புதல், பயன்பாடு ஆகியவை பொருளாதார வளர்ச்சியின் அடிப்படைகளாகும்.*

*பல்வேறு வகையான பொருளாதாரங்களின் சிறப்பியல்புகள் என்ற தலைப்பில் ஒரு குழு விவாதத்தை ஏற்பாடு செய்து ஒரு அறிக்கையைத் தயாரிக்கவும்.*

மனிதத் தேவைகள் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள், பொருளாதார அமைப்புகள் பற்றி நாம் விவாதம் செய்தோமல்லவா? இவையெல்லாம் விவாதத்திற்கு உட்படுகின்ற கற்றல் பிரிவு தான் பொருளாதாரவியலாகும். நமது அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடைய பட்ஜெட், வங்கி, சந்தை மற்றும் பொருட்களும் சேவைகளும் இதில் அடங்கும்.

பண்டையகாலத்தில் செல்வத்தின் அறிவியல் என்ற நிலையில்தான் பொருளாதாரம் அழைக்கப்பட்டது. பொருளாதாரத்தின் தந்தை என்று அழைக்கப்படும் ஆடம்ஸ்மித் இதை முன்மொழிந்தார். ஆல்பிரட் மார்ஷல் பொருளாதாரத்தை நலனைக் கையாளும் அறிவியலாக வடிவமைத்தார். மனிதனின் தேவைகளுக்கும் வளங்களுக்கும் இடையிலான உறவைக் கையாளும் பிரிவாகும் பொருளாதாரம் என்று லயனல் ராபின்ஸ் விவரித்தார்.



படம் 4.8 ●
ஆடம்ஸ்மித்



படம் 4.9 ●
ஆல்பிரட் மார்ஷல்



படம் 4.10 ●
லயனல் ராபின்ஸ்

பொருளாதாரத்தின் வளர்ச்சிக்குப் புத்துணர்ச்சி அளித்த சில கருத்துக்களைத் தெரிந்து கொள்வோம்.

இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தகம் இரு நாடுகளின் நலனைப் பெருக்கும் என்ற கோட்பாட்டை பிரிட்டீஷ் பொருளாதார நிபுணர் டேவிட் ரிக்கார்டோ கொண்டு வந்தார். நிலத்தின் குத்தகை தொடர்பான அவரது குத்தகை கோட்பாடு (Theory of Rent) மிகவும் பிரபலமானது.



படம் 4.11 ● டேவிட் ரிகார்டோ

ஜெர்மன் பொருளாதார அறிஞரும் தத்துவஞானியுமான கார்ல் மார்க்ஸ் உபரி மதிப்புக் கோட்பாட்டை (Theory of Surplus Value) உருவாக்கினார். மார்க்ஸின் கருத்துப்படி, 'உற்பத்தியின் அடிப்படை என்பது தொழிலாளியின் உழைப்பாகும்.' ஆனால், அதின் ஒரு சிறு பகுதியை மட்டும் தொழிலாளிக்குக் கொடுத்துவிட்டு பெரும் பகுதியை முதலாளிகள் தங்கள் கையில் வைத்துக்கொள்கிறார்கள்



படம் 4.12 ● கார்ல் மார்க்ஸ்

பொருளாதார துறையில் அரசாங்கத்தின் தலையீடு என்ற கோட்பாட்டை வலியுறுத்தி வாதிட்ட பொருளாதார நிபுணர் ஜெ எம் கெயின்ஸ் ஆவார். அரசாங்கத்தின் தலையீட்டின் வழியாக பொருளாதார பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வுகாண முடியும் என்று அவர் வாதிட்டார்.



படம் 4.13 ● ஜெ. எம். கெயின்ஸ்

செக் குடியரசைத் தாயகமாகக் கொண்ட ஜெ. எ. ஷும்பீட்டர் என்பவரால் உருவாக்கப்பட்ட கருத்துதான் படைப்பழிவு (Creative Destruction). தொழில்களும் தொழில்நுட்பங்களும் புதுமையான கண்டுபிடிப்புகளால் (Innovations) புதுமையான வாய்ப்புகளையும் வளர்ச்சியையும் உருவாக்குகின்றது. ஆனால் தற்போதுள்ள தொழில்களும் தொழில்நுட்பங்களும் புதிய கண்டுபிடிப்புகளால் தடைபடவோ அழிக்கப்படவோ கூடும் என்று அவர்தன் கருத்தை வெளியிட்டார்.



படம் 4.14 ● ஜெ. எ. ஷும்பீட்டர்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்கள் எந்தெந்த பொருளாதார வல்லுனர்களின் கருத்துக்களுடன் தொடர்புள்ளன என்று கண்டுபிடிக்கவும்.*

| | |
|---|---|
| *ஸ்மார்ட்போன் தொழில்களின் தோற்றம் டேப் ரெக்கார்டர், வீடியோ பிளேயர், ஃ பிலிம் கேமரா போன்ற தொழில்களின் வீழ்ச்சிக்குக் காரணமாயின.* | |
| *பொருளாதார பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கத்தின் தலையீடு தேவை.* | |
| *இரு நாடுகளுக்கிடையிலான வியாபாரம் இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கவும் மக்களின் நலனை அதிகரிக்கவும் செய்யும்.* | |
| *உற்பத்தியின் அடிப்படை தொழிலாளியின் உழைப்பாகும்.* | |

பொருளாதார அறிவியல் வளர்ச்சியில் இந்திய பொருளாதார அறிவியலாளர்களும் பெருமளவில் நன்கொடை வழங்கியுள்ளனர். புராதன இந்தியாவில் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமான வரி முறையை வகுத்த சாணக்கியரும் வடிகால் / ஒழுகுதல் கோட்பாட்டை (Drain Theory) உருவாக்கிய தாதாபாய் நௌரோஜி அவர்களும் முக்கியமானவர்கள் ஆவார்.

இந்தியாவின் தேச தந்தையான மகாத்மா காந்தியின் பொருளாதாரப் பார்வைகள் அவரது நூல்களான 'ஹிந்த் ஸ்வராஜ்', 'இந்தியா ஆப் மை டிரீம்ஸ்' என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.



*படம் 4.15 ● மகாத்மா காந்தி*

## காந்தியடிகளின் பொருளாதாரச் சிந்தனைகள்

- தன்னிறைவு, அதிகாரப் பரவலாக்கம் என்பவற்றின் அடிப்படையிலான பொருளாதாரத்தைக் காந்தியடிகள் கற்பனை செய்தார்.
- உள்நாடுகளில் வேலைவாய்ப்புகளை அதிகரிக்க கிராமப்புற தொழில்களை வளர்க்க வேண்டும்.
- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைச் சந்தைப்படுத்த உள்ளூர் சந்தைகளை விரிவுபடுத்த வேண்டும்.
- சமூக நீதியை உறுதிப்படுத்த பொருளாதார சமத்துவமின்மையை குறைத்தல் வேண்டும்.

பொருளாதாரத்தில் நோபல் பரிசு பெற்ற முதல் இந்திய பொருளாதார வல்லுநர் அமர்த்தியா குமார் சென். இவர் 1988 ம் ஆண்டு நலப் பொருளாதார அறிவியலில் (Welfare Economics) சிறந்த நன்கொடைக்கான நோபல் பரிசு பெற்றார்.



*படம் 4.16 • அமர்த்தியா குமார் சென்*

அமர்த்தியாசனின் நலன் சார்ந்த பொருளாதார அறிவியல் சிந்தனைகள்

- பொருளாதாரம் முன்னேற்றம் அடைய கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக நீதிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.
- நாட்டின் முன்னேற்றத்திற்கு பாலின சமத்துவம், பெண்களின் அதிகாரம் என்பவை தவிர்க்க முடியாதவையாகும்.
- பொருளாதார வளர்ச்சியை மதிப்பிடுவது மனித உரிமைகளிலும் சுதந்திரத்திலும் செலுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையாக இருக்க வேண்டும்.



*படம் 4.17 • அபிஜித் வினாயக் பானர்ஜி*

உலகளாவிய வறுமைக் குறைப்புக்கான சோதனை அணுகுமுறையை வகுத்ததற்காக இந்திய வம்சத்தைச் சார்ந்த அமெரிக்கப் பொருளாதார நிபுணர் அபிஜித் வினாயக் பானர்ஜிக்கு 2019 ம் ஆண்டு பொருளாதார அறிவியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. நோபல் பரிசை அவர் எஸ்தர் டூஃப்லோ மற்றும் மைக்கேல் க்ரீமர் ஆகியோருடன் பகிர்ந்து கொண்டார்.

*இந்தியாவில் உள்ள சில பொருளாதார அறிவியலாளர்களின் பெயர்களும் சிந்தனைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. விடுபட்டதைக் கண்டுபிடிக்கவும்.*



உலக நாடுகள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பொருளாதார பிரச்சினைகளைக் கண்டறிவதன் மூலம் வளங்களைத் திறமையாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் உணரப்படுகிறது. உலகின் முக்கிய பொருளாதார முறைகளைக் கண்டறிந்து அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றன என்பதைப் பற்றி விவாதித்தோம். தற்போதுள்ள வளங்களை அறிவுபூர்வமாகவும் திறமையாகவும் பயன்படுத்தி வருங்கால தலைமுறையின் நலனை உறுதி செய்வதே நமது கடமையாகும்.

## தொடர் செயல்பாடுகள்

- உங்கள் சுற்றுப்புறத்தில் உள்ள ஏதாவது ஒரு உற்பத்திப் பிரிவு அல்லது விவசாய இடத்தை பார்வையிட்டு பல்வேறு பொருட்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதைக் கண்டறியத் தேவையான வினாநிரலைத் தயாரிக்கவும்.
- உழைப்புச் சார்ந்த தொழில் நுட்பம், மூலதனம் சார்ந்த தொழில் நுட்பங்களின் பண்புகள் பற்றிய ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்யவும்.
- கீழே தரப்பட்டுள்ள நாடுகளில் பெரும்பான்மையான உற்பத்தி முறைகள், உற்பத்திப் பொருட்களின் உரிமை, கட்டுப்பாடு போன்றவை அரசாங்கத்திடமே உள்ள பொருளாதார அமைப்பு எந்தெந்த நாடுகளில் உள்ளன என்பதை ஆசிரியரின் உதவியுடன் கண்டு பிடியுங்கள்.

  (இந்தியா, யு.எஸ்.எ, சீனா, கனடா, ஸ்வீடன், டென்மார்க், இங்கிலாந்து, கியூபா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், இலங்கை.)

அலகு 5

# இந்திய அரசியலமைப்பு: உரிமைகளும் கடமைகளும்



சமத்துவம் இல்லாத நிலையில், சுதந்திரம் பலரின் மீது சிலரின் ஆதிக்கத்தை உருவாக்கும். சுதந்திரம் இல்லாத சமத்துவம் தனிமனித முன்னேற்றத்துக்கு தீங்கு விளைவிக்கும். சகோதரத்துவம் இல்லாமல் சமத்துவத்திற்கும் சுதந்திரத்திற்கும் இயல்பான தன்மையை அடைய முடியாது.

**டாக்டர். பி.ஆர். அம்பேத்கர்**
(அரசியல் அமைப்பு நிர்ணய சபை,
நவம்பர் 25, 1949)



•படம் 5.1

நமது அரசியலமைப்புச் சிற்பியான டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்கள் 1949 நவம்பர் 25–ஆம் நாள் அரசியலமைப்பு நிர்ணய சபையில் ஆற்றிய உரையின் முக்கிய பகுதியே மேலே தரப்பட்டுள்ளது. சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவத்தின் முக்கியத்துவத்தையே இவ்வார்த்தைகள் தெளிவுபடுத்துகின்றன.

## அரசியலமைப்பு நிர்ணய சபை



•படம் 5.2

*1946–ஆம் ஆண்டு டிசம்பர் 6–ஆம் தேதி அரசியலமைப்பு நிர்ணயசபை நடைமுறைக்கு வந்தது. டாக்டர் ராஜேந்திர பிரசாத் இதன் தலைவராக இருந்தார். இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு மூன்று முக்கிய துணைக் குழுக்களின் தலைவராக இருந்தார். இச்சபை உருவானபோது 389 உறுப்பினர்கள் இருந்தனர். 1947 –இல் சுதந்திரத்திற்குப் பிறகு 299 உறுப்பினர்களாக இச்சபை மறுசீரமைக்கப்பட்டது.*

இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை அனைத்துக் குடிமக்களுக்கும் பாதுகாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளன. அடிப்படை உரிமைகளாகவும், நாட்டின் கொள்கைகளின் வழிகாட்டுதல்களாகவும் இவை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. அத்துடன் குடிமக்கள், நாட்டுடனும் சமூகத்துடனும் கொண்டிருக்க வேண்டிய அடிப்படை கடமைகளும் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்திய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளும் நெறிமுறை கொள்கைகளும் கடமைகளுமே இப்பாடப்பகுதியில் விவாதிக்கப்படுகிறது.

## உரிமைகள் (Rights)

உரிமைகளின் முக்கியத்துவத்தைப் பற்றிய கருத்தரங்கில் பங்கெடுத்த பின்னர் மாணவர்கள் ஆசிரியருடன் உரையாடுவதைக் கவனியுங்கள்.

உரையாடலில் விவாதிக்கப்படும் உரிமைகள் எவை?

•  •

இவை தவிர வேறு என்னென்ன உரிமைகளை நீங்கள் விரும்புகிறீர்கள்?

•  •




•படம் 5.4

உரிமைகள் என்பது எழுப்படுகின்ற உரிமைக் கோரிக்கைகளில் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுவதும் அரசால் சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுபவையாகும். தனிநபர்களுக்கு உரிமைகள் உள்ளன என்பதை உறுதி செய்வது மக்களாட்சி அமைப்புகளின் பொறுப்பாகும். இவற்றைச் சட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்த வேண்டியது அரசாங்கமாகும். அதற்காகப் பெரும்பாலான மக்களாட்சி நாடுகளின் அரசியல் அமைப்பில் ஒரு பட்டியல் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த உரிமைகளின் பட்டியல் தனிநபர்களுடைய உரிமைகளில் தலையிடுவதற்கு அரசாங்கத்திற்குச் சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியிருக்கிறது. மேலும், உரிமை மீறல்கள் ஏற்பட்டால் அதற்கான தீர்வுகளும் உறுதிச் செய்யப்பட்டுள்ளன.

## அடிப்படை உரிமைகள் (Fundamental Rights)

சர்வதேச அளவில் மனித உரிமைகளாகக் கருதப்படுவதும் மக்களாட்சி முறையில் குடிமக்களின் கண்ணியத்திற்கும் சுதந்திரத்திற்கும் உயிர் வாழ்வதற்கும் அவசியமான சில அடிப்படை உரிமைகள் உள்ளன. நாடுகள் அங்கீகரித்து பாதுகாத்து நடைமுறைப்படுத்தவும் செய்கின்ற இத்தகைய உரிமைகளே அடிப்படை உரிமைகள் எனப்படும். உலகில் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளில் அந்தந்த நாடுகளின் சூழ்நிலைக்கேற்ப சில முக்கியமான உரிமைகள் அடிப்படை உரிமைகளாக உட்படுத்தப்பட்டுள்ளன. மனித வரலாற்றின் சில முக்கியமான சாசனங்களே அடிப்படை உரிமைகள் என்ற கருத்திற்கு வழி வகுத்தன. கீழே தரப்பட்டுள்ள நழுவுபடத்தைக் கவனியுங்கள்.

### மனித உரிமைகள்
***(Human Rights)***

*மனிதர்கள் என்ற முறையில் உலகிலுள்ள அனைவருக்கும் சாதி, மத, இனம், நிறம். நாடு, மொழி, பாலினம் என்ற பாகுபாடுகள் இல்லாமல் கண்ணியமாகவும் சமத்துவமாகவும் வாழ உரிமை உண்டு. இவ்வாறு உலக அளவில் மனிதனின் கண்ணியத்தையும் தனித்துவத்தையும் பாதுகாக்கும் உரிமைகளே மனித உரிமைகள் எனப்படும்.*

**அடிப்படை உரிமைகளின் காலவரிசை**

↓

**மேக்னா கார்ட்டா**
**(Magna Carta–1215)**

மனித உரிமைகளையும் சுதந்திரத்தையும் குறிப்பிடுகின்ற உலகின் முதல் அதிகாரப்பூர்வ ஆவணம்.

↓

### மேக்னா கார்ட்டா
***(Magna Carta)***

*பிரிட்டனில் உரிமைகளைக் குறித்து உருவான ஆரம்பகால ஆவணமே மேக்னா கார்ட்டா. பெரிய ஆவணம் என்பதே இதன் பொருள். இது அரசரும் அரசருடைய நிர்வாகமும் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல என்று பிரகடனப்படுத்தும் அதிகாரப் பூர்வ ஆவணமாகும். இது 1215 –இல் இங்கிலாந்தின் ஆட்சியாளராக இருந்த ஜாண் மன்னரை மக்கள் கட்டாயப்படுத்தி இந்த ஆவணத்தில் கையொப்பமிட வைத்தனர். இது பின்னர் பிரிட்டீஷ் பாராளுமன்றத்தின் அதிகாரங்களுக்கும் சட்டக் கொள்கைகளுக்கும் அடிப்படையாக மாறியது. இங்கிலாந்தில் உரிமைகளுக்கான மனு உரிமை மசோதா போன்ற உரிமைக்கான ஆவணங்கள் மேக்னா கார்ட்டாவின் தாக்கத்தால் உருவானவையாகும்.*

## அமெரிக்க உரிமை மசோதா
*(United States Bill of Rights)*

*அமெரிக்க அரசியலமைப்பில் உட்படுத்தப்பட்டுள்ள உரிமைகள் மசோதாவில் உரிமைகளைப் பற்றி விவாதிக்கப்பட்டுள்ளன. மத நம்பிக்கைக்கான உரிமை, கருத்துகளை வெளியிடுவதற்கான உரிமை, ஊடகச் செயல்பாட்டு உரிமை, அமைதியான முறையில் கூட்டம் கூடுவதற்கான உரிமை, உயிரும் உடைமையும் பாதுகாப்பதற்கான உரிமை போன்ற உரிமைகளை அமெரிக்க அரசியலமைப்பு குடிமக்களுக்கு உறுதி அளிக்கிறது.*

## பிரான்சின் மனித உரிமைகள் பிரகடனம்
*(The Declaration of the Rights of Man and of the Citizen)*

*1789–இல் பிரான்சின் தேசிய சபை வெளியிட்ட உரிமைகள் மசோதாவே மனித உரிமைகள் பிரகடனம் எனப்படும். அனைத்து குடிமக்களுக்கும் தனிப்பட்ட மற்றும் கூட்டு உரிமைகளை இப்பிரகடனம் அறிவிக்கிறது. குடிமக்கள் பிறப்பால் சுதந்திரமானவர்கள் எனவும் உரிமைகளில் சமமானவர்கள் எனவும் சமூக வேறுபாடுகள் பொதுநலன்களின் அடிப்படையில் மட்டுமே நிறுவப்படும் எனவும் இப்பிரகடனம் அறிவிக்கிறது.*

**அமெரிக்க உரிமை மசோதா**
**(United States Bill of Rights – 1789)**

உலகில் முதன்முதலாக எழுதப்பட்ட அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் மசோதா

↓

**பிரெஞ்சு புரட்சியைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட மனித உரிமைப் பிரகடனம்.**
**(Declaration of the Rights of Man and of the Citizen – 1789)**

உலக நாடுகளில் தாக்கம் செலுத்திய மனித உரிமைகளை வரையறுக்கும் உரிமைகளின் ஆவணம்.

↓

**ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்**
**(Universal Declaration of Human Rights–1948)**

எல்லா உறுப்பு நாடுகளிலும் நடைமுறைப்படுத்துவதற்காக ஐக்கிய நாட்டுச் சபை வெளியிட்ட உரிமைகள் மசோதா.

மேலே தரப்பட்டுள்ள உரிமைகள் மசோதாக்கள் அடிப்படை உரிமைகள் என்ற கருத்து உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்துள்ளன. பல மக்களாட்சி நாடுகளிலும் உள்ள அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் சேர்க்கப்பட்டதில் இவை ஆதிக்கம் செலுத்தியுள்ளன. நமது அரசியலமைப்பிலும் சில உரிமைகள் அடிப்படை உரிமைகளாக உட்படுத்தப்பட்டுள்ளன.

## இந்திய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள்




•படம் 5.5

இந்திய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகளைச் சேர்ப்பதில் அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் மீது தாக்கம் செலுத்திய பல காரணிகள் உள்ளன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்திய மக்கள் அனுபவித்த உரிமை மறுப்புகளே அவற்றில் முக்கியமானவை. சுதந்திரப் போராட்டம் வலியுறுத்திய இலட்சியங்கள் மற்றும் இந்திய மறுமலர்ச்சி இயக்கங்களின் கருத்துகள் ஆகியவை அரசியலமைப்பில் உள்ள அடிப்படை உரிமைகள் மீது தாக்கம் செலுத்திய பிற காரணிகள் ஆகும். பிற நாடுகளின் அரசியலமைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளும் அடிப்படை உரிமைகளின் காலவரிசையும் உரிமைகள் மசோதாவும் நமது அரசியலமைப்பில் உள்ள அடிப்படை உரிமைகள் மீது தாக்கம் செலுத்தியுள்ளன.

### அரசியலமைப்புத் தினம்

*நவம்பர் 26–ஆம் நாள் இந்தியாவில் அரசியலமைப்பு தினமாகக் கொண்டாடப்படுகிறது. 1949 நவம்பர் 26–இல் அரசியலமைப்பு நிர்ணய சபை இந்திய அரசியலமைப்பை அங்கீகரித்ததின் நினைவாக இந்தத் தினம் கொண்டாடப்படுகிறது.*

*இந்திய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகளை சேர்ப்பதில் தாக்கம் செலுத்திய காரணிகள் எவை? பட்டியலை நிரப்பவும்.*

- காலனி ஆட்சியில் மக்கள் அனுபவித்த உரிமை மறுப்புகள்
- உலகளாவிய சூழ்நிலைகள்
- 

இந்திய அரசியலமைப்பு பாகம் III – இல் (Part III) அடிப்படை உரிமைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. சட்டப் பூர்வ உரிமைகளைப் பாதுகாப்பதும் செயல்படுத்துவதும் பொதுவான சட்டங்களாகும். ஆனால் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதும், உறுதி செய்வதும் அரசியலமைப்பாகும். அரசியலமைப்பு உறுதி அளித்துள்ள அடிப்படை உரிமைகள் எவை என்று பார்ப்போம்.

## சமத்துவ உரிமை (Right to Equality)

நமது நாட்டில் சட்டத்தின் முன் அனைவரும் சமமும் சமமான சட்டப் பாதுகாப்பையும் உறுதி செய்யும் உரிமையே சமத்துவ உரிமை ஆகும். இந்த உரிமையின்படி மதம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் போன்றவற்றின் அடிப்படையில் எந்த ஒரு பாகுபாடும் இருக்கக் கூடாது. இத்துடன் உணவகம் விடுதிகள், கடைகள், கிணறுகள், குளங்கள், பொதுக் குளியலறைகள், பொதுச்சாலைகள் போன்ற இடங்களில் சமமான நுழைவு அனுமதியும் உறுதிச் செய்யப்படுகிறது. பொது வேலைகளில் சமவாய்ப்பும் தீண்டாமை ஒழிப்பும் பதவிப் பெயர்கள் ரத்து செய்தலும் இந்த உரிமை மூலம் உறுதி செய்யப்படுகிறது.




• படம் 5.6 அரசியலமைப்பின் பாகம் III (கையெழுத்துப் பிரதி)

*இந்திய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சமத்துவத்திற்கு எதிரான உரிமை மீறல்களை நீங்கள் கவனித்தீர்களா? அவை எவையென குறிப்பிடுங்கள்.*

- 
- 

## சுதந்திரத்திற்கான உரிமை (Right to Freedom)

நீண்ட காலம் அந்நியர்களின் ஆதிக்கத்தின் கீழ் வாழ வேண்டியிருந்த இந்திய மக்களின் விருப்பமே சுதந்திரத்திற்கான உரிமை என்ற அடிப்படை உரிமைகளில் பிரதிபலிக்கிறது. அரசியலமைப்பின் 19 முதல் 22 வரையிலான பிரிவுகள் இதன் மூலம் சுதந்திரத்திற்கான உரிமைகளையும் நியாயமான கட்டுப்பாடுகளையும் விளக்குகின்றன. பிரிவு 19–இல் குறிப்பிடப்பட்டுள்ள சுதந்திரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- கருத்துகளை வெளியிடவும் மறுக்கவும் உள்ள சுதந்திரம்
- இந்தியா முழுவதும் சுதந்திரமாகப் பயணம் செய்வதற்கான சுதந்திரம்
- அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கான சுதந்திரம்
- இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் நிரந்தரமாக வசிப்பதற்கான சுதந்திரம்
- சங்கங்களை உருவாக்குவதற்கான சுதந்திரம்
- விருப்பமான தொழில், வியாபாரம், வாணிபத்தில் ஈடுபடுவதற்கான சுதந்திரம்


படம் 5.7

இவை தவிர கல்விகற்கும் உரிமை, உயிருக்கும் தனிமனித சுதந்திரத்திற்குமான உரிமை போன்ற உரிமைகள் 20 முதல் 22 வரையிலான பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நாட்டின் ஒருமைப்பாடு, இறையாண்மை, பாதுகாப்பு போன்ற சூழ்நிலைகளில் இந்தச் சுதந்திரங்கள் நியாயமான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவையாகும்.

*மேலே கொடுக்கப்பட்டுள்ள படம் எந்த உரிமையைக் குறிப்பிடுகிறது?*

## கல்வி உரிமைச் சட்டம்
### (Right to Education Act 2002)

2002–இல் 86 – வது அரசியலமைப்புச் சட்ட திருத்தத்தின் பிரிவு 21 Aயின்படியே கல்வி அடிப்படை உரிமையாக அறிவிக்கப்பட்டது. 2009–இல் கல்வி உரிமைச் சட்டத்தைப் பாராளுமன்றம் அங்கீகரித்தது. 2010 ஏப்ரலில் சட்டம் நடைமுறைபடுத்தப்பட்டது. இச்சட்டத்தின்படி 6 வயது முதல் 14 வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் தரம் வாய்ந்த கட்டாய இலவசக் கல்வி உறுதி செய்யப்பட்டது.



•படம் 5.8

*'தனிமனித வாழ்க்கையில் அரசியலமைப்பு உறுதி செய்யும் சுதந்திரங்கள்' என்னும் தலைப்பில் குழு விவாதம் நடத்தவும்.*

## சுரண்டலுக்கு எதிரான உரிமை (Right Against Exploitation)

நமது நாட்டில் பல பிரிவு மக்களையும் பொது இடங்களிலிருந்து ஒதுக்கி வைக்கப்படுவதும் சுரண்டப்படுவதுமான சமூகச்சூழல் நிலவி இருந்தன. இந்திய அரசியலமைப்பு சுரண்டலுக்கு எதிரான உரிமை மூலம் அடிமைத்தனம், மனித கடத்தல், கட்டாய வேலை, குழந்தைத் தொழிலாளர் போன்ற சுரண்டல்களை ஒழித்து பாதுகாப்பான வாழ்க்கைக்கு உறுதி செய்கிறது. அரசியலமைப்பின் 23–ஆம் பிரிவு அனைத்து விதமான அடிமைத் தொழில்களையும் மனித கடத்தலையும் தடை செய்து அதைக் குற்றமாகவும் அறிவிக்கிறது. பிரிவு 24–இன் படி 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளைச் சுரங்கங்களிலோ, தொழிற்சாலைகளிலோ, பிற அபாயகரமான துறைகளிலோ வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்கிறது.


•படம் 5.9

*குழந்தைகளுக் கெதிரான சுரண்டல்களில் ஒன்றே படத்தில் தரப்பட்டுள்ளது. வேறு என்னென்ன சுரண்டல்கள் உங்கள் கவனத்திற்கு வந்துள்ளன? அவற்றைப் பதிவு செய்யுங்கள்*

- 
- 

## மதச் சுதந்திரத்திற்கான உரிமை
**(Right to Freedom of Religion)**

இந்தியாவில் ஒவ்வொருவருக்கும் அவரவர் விரும்பக்கூடிய மதத்தைப் பின்பற்றவும் வழிபடவும் பிரச்சாரம் செய்யவும் அரசியலமைப்பில் சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த உரிமையானது அவரவர் மனசாட்சிக்கேற்ப செயல்படுவதற்கான சுதந்திரத்தைக் கொண்டுள்ளது. எல்லா மதங்களுக்கும் சமமான முக்கியத்துவத்தையும் சமமான பாதுகாப்பையும் மதச்சுதந்திரத்திற்கான உரிமை உறுதி செய்கிறது. ஆனால் மேற்கூறிய உரிமை பொது ஒழுங்கு, சுகாதாரம், நெறிமுறை ஆகியவற்றின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாகும்.

*'மதச்சுதந்திரம் இந்திய மதச் சார்பின்மையை வலுப்படுத்துகிறது' என்ற தலைப்பில் கலந்துரையாடல் நடத்தி குறிப்பு தயாரிக்கவும்.*



•படம் 5.10

## கலாச்சாரம் மற்றும் கல்வி தொடர்பான உரிமைகள் (Cultural and Educational Rights)

இந்தியா பன்முகத்தன்மை நிறைந்த நாடு. மதம், மொழி மற்றும் கலாச்சார சிறுபான்மைப் பிரிவினர் இந்தப் பன்முகத்தன்மையின் சிறப்பு ஆகும். நாட்டின் ஏதாவதொரு குறிப்பிட்ட பகுதியிலோ அல்லது நாடு முழுவதுமோ, பிற பிரிவினரைவிட எண்ணிக்கையில் குறைவானவர்களும் ஒரு பொது மொழியையோ, மதத்தையோ, கலாச்சாரத்தையோ பின்பற்றும் மக்கள் பிரிவினரே சிறுபான்மையினர் எனப்படுவர். சிறுபான்மை பிரிவினர்களுக்கு அவர்களுடைய கலாச்சாரம், மொழி மற்றும் எழுத்துகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான வழிமுறைகளே கலாச்சாரம் மற்றும் கல்வி தொடர்பான உரிமைகள் ஆகும். இதன்படி மதம், மொழி கலாச்சாரம் தொடர்பான எல்லா சிறுபான்மையினருக்கும் தங்களது கல்வி நிறுவங்களை நிறுவுவதற்கும் நடத்துவதற்குமான உரிமை உண்டு. அதன்மூலம் அவர்கள் தங்களது சொந்த கலாச்சாரத்தைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் முடியும்.

*நமது மாநிலத்திலுள்ள சிறுபான்மை பிரிவுகள் எவையெனக் கண்டறிந்து எழுதவும்.*

- *மொழிச் சிறுபான்மையினர்*
- 
- 
- 

## அரசியலமைப்பு முறையிலான தீர்வுகாணும் உரிமை

**(Right to Constitutional Remedies)**

தனிமனிதனின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்கும் மிகமுக்கியமான பாதுகாப்புகளில் ஒன்றே அரசியலமைப்புப்படி தீர்வுகாணும் உரிமை. மேலே கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளில் ஏதாவது மறுக்கப்பட்டால் அது திரும்பக் கிடைப்பதற்கு பிரிவு 32 இன் படி உச்ச நீதிமன்றத்தையும், பிரிவு 226 இன் படி உயர்நீதி மன்றத்தையும் அணுகலாம். உச்ச நீதிமன்றமும் உயர் நீதிமன்றங்களும் நீதிப்பேராணைகளின் வழியாக அடிப்படை உரிமைகளை மீண்டும் நிலைநாட்டுகின்றன. அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உச்ச நீதிமன்றமோ அல்லது உயர் நீதிமன்றமோ பிறப்பிக்கும் ஆணைகளும் ஆலோசனைகளும் நீதிப்பேராணைகள் எனப்படும். இந்திய அரசியலமைப்பின் இருதயமும் ஆன்மாவுமே இந்த உரிமையென டாக்டர். பி. ஆர். அம்பேத்கர் புகழ்ந்துள்ளார்.

*அடிப்படை உரிமைகளில் மிக முக்கியமானது அரசியலமைப்புத் தீர்வுக்கான உரிமை என்று ஏன் கூறப்படுகிறது?*

- 
- 



•படம் *5.11*

**அடிப்படை உரிமைகள் (Fundamental Rights)**

- சமத்துவத்திற்கான உரிமை (பிரிவு:14 முதல் 18 வரை)
- சுதந்திரத்திற்கான உரிமை (பிரிவு: 19 முதல் 22 வரை)
- சுரண்டலுக்கெதிரான உரிமை (பிரிவு: 23, 24)
- மதச் சுதந்திரத்திற்கான உரிமை (பிரிவு: 25 முதல் 28 வரை)
- கலாச்சாரம் மற்றும் கல்வித்தொடர்பான உரிமை (பிரிவு: 29 முதல் 30 வரை)
- அரசியலமைப்பின் படி திர்வுகாணும் உரிமை (பிரிவு: 32)

## நீதிப்பேராணைகளின் வகைகள்

**ஹேபியஸ் கார்பஸ் (ஆட்கொணர்வு மனு)** *(Habeas Corpus) : சட்டத்திற்குப் புறம்பாகக் காவலில் வைக்கப்பட்ட ஒருவரை நீதிமன்றத்திற்கு முன் ஆஜர்படுத்தக்கோரி நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணையாகும்.*

**மாண்டமஸ்** *(Mandamus) : ஓர் அதிகாரி தன்னுடைய சட்டப்பூர்வமான கடமையை நிறைவேற்றாமலிருப்பதால் வேறொரு தனிநபரின் உரிமை பாதிக்கப்படுவதாக நீதிமன்றம் கண்டறிந்தால் பிறப்பிக்கப்படும் ஆணையாகும்.*

**புரொகிபிஷன் தடை ஆணை** *(Prohibition) : தங்களுடைய அதிகார எல்லைக்குள் வராத ஒரு வழக்கை கீழ்நீதிமன்றங்கள் விசாரணை செய்வதைத் தடுத்து உச்ச நீதிமன்றமோ அல்லது உயர்நீதி மன்றமோ பிறப்பிக்கும் ஆணை.*

**க்யூவாரன்ட்** *(Quo Warranto) : ஓர் அதிகாரி தனக்குத் தகுதியில்லாத பதவி வகிப்பதைத் தடை செய்து நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணை.*

**செர்ஷோரோரை** *(Certiorari) : கீழ் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை மேல் நீதிமன்றத்திற்கு மாற்றும் உத்தரவு.*

*'கண்ணியமான மனித வாழ்வில் அடிப்படை உரிமைகளின் பங்கு' என்ற தலைப்பில் ஒரு விவாதத்தை நடத்தி அறிக்கை தயாராக்கவும்.*




•படம் 5.12

*அரசியலமைப்பின் பகுதி IV கையெழுத்துப் பிரதி*

## அரசின் நெறிமுறைக் கொள்கைகள்

**(Directive Principles of State Policy)**

உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுடன் சமூக பொருளாதார நீதிக்கும் சமமான முக்கியத்துவம் உண்டு. இதை அடைவதற்கான கருத்துகளே அரசின் நெறிமுறை கொள்கைகளில் உட்படுத்தப்பட்டுள்ளன. அனைத்துப் பிரிவு மக்களின் நலன்களையும் முன்னேற்றத்தையும் உறுதி செய்வதன் மூலம் நலமான நாட்டை நிறுவுவதே இதன் நோக்கம். அடிப்படை உரிமைகளில் இருந்து வேறுபட்டு, நீதிமன்றத்தின் வழியாக நடைமுறைப்படுத்த இயலாதவையே நெறிமுறை கொள்கைகள். ஆனால் அரசாங்கங்கள் தங்கள் கொள்கைகளையும் செயல்பாடுகளையும் நடைமுறைப்படுத்தும் போது நெறிமுறைக் கொள்கைகளுக்குப் போதுமான அளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அரசியலமைப்பின் பகுதி IV இல் பிரிவு 36 முதல் 51 வரை நெறிமுறை கொள்கைகள் உட்படுத்தப்பட்டுள்ளன. இவை ஆட்சி நிர்வாகத்திலும் சட்ட நிர்வாகத்திலும் அரசாங்கங்கள் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகள் ஆகும். நாட்டின் பொருளாதார, சமூக, கல்வி, பன்னாட்டு

விஷயங்களை எல்லாம் குறிப்பிடுகின்ற விளக்கமான கருத்துகளே நெறிமுறைக் கொள்கைகளில் அடங்கியுள்ளன. நாட்டின் நெறிமுறை கொள்கைகளைத் தாராளமான கருத்துகள், சோசியலிசக் கருத்துகள், காந்திய கருத்துகள் என மூன்றாகப் பிரிக்கலாம்.

**தாராள கருத்துகள்**

- *சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் ஊக்குவித்தல்*
- *குடிமக்களுக்கு சீரான சிவில் சட்டம்*
- *சமூக நீதியும் இலவச சட்ட உதவியும்*
- *ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குப் பராமரிப்பும் கல்வியும் வழங்குதல்*
- *சுற்றுச்சூழல், கால்நடைகள் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பு*

**சோசியலிச கருத்துகள்**

- *தொழிலாளர்கள் வாழ்வதற்கு தேவையான ஊதியம்*
- *ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம வேலைக்குச் சம ஊதியம்*
- *தொழிற்சாலைகளின் நிர்வாகத்தில் தொழிலாளர்களின் பங்களிப்பு*
- *வேலைவாய்ப்பு உரிமை*
- *நியாயமான மற்றும் மனிதாபிமான வேலைச் சூழல்கள், மகப்பேறு நன்மைகளை உறுதி செய்தல்*

**காந்திய கருத்துகள்**

- *கிராம பஞ்சாயத்துகளை ஒருங்கிணைத்தல்*
- *குடிசைத் தொழில்களை வளர்த்தல்*
- *வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பு*
- *உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும் போதை பொருட்கள் உட்கொள்வதைத் தடை செய்தல்*
- *தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர், பிற நலிந்த பிரிவினரை மேம்படுத்துதல்*

*அரசின் நெறிமுறைக் கொள்கைகள் சமூக வாழ்க்கையின் எந்தெந்தப் பகுதிகளைத் தொடுகின்றன. பட்டியல் தயார் செய்க.*

- *சமூக–பொருளாதார நீதி*
- *மக்கள் நலன்*
- 
- 

## அடிப்படை உரிமைகளும் நெறிமுறைக் கொள்கைகளும்: வேறுபாடுகள்

இந்திய அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளும் அரசின் நெறிமுறை கொள்கைகளும் ஒன்றுக்கொன்று சார்புடையவை. அடிப்படை உரிமைகள் அரசின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் போது நெறிமுறைக் கொள்கைகள் சில செயல்களை நடைமுறைப்படுத்த அரசைத் தூண்டுகின்றன. அடிப்படை உரிமைகள் முக்கியமாகத் தனி மனித உரிமைகளையே பாதுகாக்கிறது. ஆனால், நெறிமுறைக்

## நடைமுறை நெறிமுறைக் கொள்கைகள்

*சமூக மற்றும் பொருளாதார நீதியை இலக்காகக் கொண்டுள்ள நெறிமுறைகளே அரசின் கொள்கைக்கான வழிகாட்டுதல்களாக அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த நெறிமுறைக் கொள்கைகளில் பல அவ்வப்போது தேவைக்கேற்ப சட்ட நிர்வாகத்தின் வழியாகச் செயல்படுத்தப்படுகின்றன. கிராமப் பஞ்சாயத்துகளை உருவாக்க வேண்டும் என்ற காந்தியின் கருத்து தான் 1993–இல் உருவான பஞ்சாயத்து ராஜ்–முனிசிபாலிட்டி சட்டங்கள் வாயிலாக நடைமுறைப்படுத்தப் பட்டது. தாராள கருத்தான இலவசக் கல்வி 2009–இன் பள்ளி உரிமைச் சட்டத்தின் வழியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. 1986–இல் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் தாராளக் கருத்தின் பலனாக உருவாக்கப்பட்டது. 1976–இல் சம வேலைக்குச் சம ஊதியச் சட்டம் சோசியலிஸ்ட் கருத்தான ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம வேலைக்குச் சம ஊதியம் என்ற தத்துவம் நடைமுறைப்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்டதாகும்.*

கொள்கைகள் சமூகத்தில் உள்ள அனைத்துப் பிரிவு மக்களின் நலனையும் உறுதி செய்கின்றன. அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும் போது உச்சநீதிமன்றத்தையோ உயர் நீதிமன்றத்தையோ அணுக முடியும். நெறிமுறைக் கொள்கைகள் மறுக்கப்படும் போது நீதிமன்றத்தை அணுக இயலாது. அடிப்படை உரிமைகளில் திருத்தங்கள் செய்ய கடினமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நெறிமுறைக் கொள்கைகளில் திருத்தம் கொண்டு வர எளிமையான சட்டங்களின் வழியாக நடைமுறைப்படுத்த முடியும். மக்களாட்சி முறையில் அடிப்படை உரிமைகள் மக்களாட்சியை வலிமையானதாக்கும் போது நெறிமுறைக் கொள்கைகள் சமூக, பொருளாதார மக்களாட்சி முறையையே வலுவடையச் செய்கின்றன.



படம் 5.13

*அடிப்படை உரிமைகள் மற்றும் நெறிமுறைக் கொள்கைகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளைக் கண்டறிந்து எழுதுக.*

| அடிப்படை உரிமைகள் | நெறிமுறைக் கொள்கைகள் |
|---|---|
| • நீதிமன்றம் வழியாக மீட்டெடுக்க இயலும் | • நடைமுறைப்படுத்த நீதிமன்றத்தை அணுக இயலாது. |
| • | • |
| • | • |
| • | • |

## அடிப்படைக் கடமைகள்

*"நான் ஓர் இந்தியனாக இருக்கும்போது அனைத்து உரிமைகளுடன் வழக்கமான கடமைகளும் உள்ளன என்பதை ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும் "*

*– சர்தார் வல்லபாய் பட்டேல்*



●படம் 5.14

இந்தியாவின் முதல் துணை பிரதமராகவும் உள்துறை அமைச்சராகவும் இருந்த சர்தார் வல்லபாய் பட்டேலின் கூற்றினைக் கவனித்தீர்களல்லவா? இந்தியக் குடிமக்களுக்கு உரிமைகளோடு சில வழக்கமான கடமைகளும் உண்டு என்பதை அவர் குறிப்பிடுகின்றார்.

உரிமைகளும் கடமைகளும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாகும். குடிமக்கள் பின்பற்ற வேண்டிய சில கடமைகள் நமது அரசியலமைப்பில் உட்படுத்தப்பட்டுள்ளன.

1976 இல் மத்திய அரசாங்கம் குடிமக்களின் அடிப்படைக் கடமைகளைப் பற்றிய பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க சர்தார் ஸ்வரன்சிங் கமிட்டியை ஏற்படுத்தியது. இக்கமிட்டியின் பரிந்துரைகளை ஏற்று 1976–இல் 42–வது அரசியலமைப்புச் சட்ட திருத்தத்தின் பகுதியாக அடிப்படை கடமைகளை உட்படுத்தி ஒரு புதிய பகுதி (IV A) உருவாக்கப்பட்டது. இதன்படி 51 A என்ற பிரிவாக அடிப்படைக் கடமைகள் அரசியலமைப்பின் பகுதியானது.

குடிமகன் என்ற முறையில் அரசியலமைப்பிற்குக் கீழ்ப்படிதல், நாட்டைப் பாதுகாத்தல், தேவைப்படும் போது தேசிய சேவை செய்தல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் போன்றவை அடிப்படை கடமைகளில் அடங்கும் கருத்துகளாகும். ஒவ்வொரு குடிமகனும் நாட்டிற்கும் சமூகத்திற்கும் ஆற்ற வேண்டிய கடமைகள் எவையென இவை உணர்த்துகின்றன. பதினொன்று கடமைகள் அடிப்படைக் கடமைகளாக அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றில் சில தார்மீகக் கடமைகளாகவும் மற்றவை குடிமைத்தன்மை சார்ந்தவைகளாகும். குடிமக்கள் அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்தும்போது அடிப்படைக் கடமைகளைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டும் என்பதே இதன் அடிப்படைத் தத்துவமாகும்.




●படம் 5.15

*இந்திய அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள சில அடிப்படைக் கடமைகள் கீழே தரப்பட்டுள்ளன. வேறு என்னென்ன கடமைகளை இந்தியக் குடிமக்கள் நிறைவேற்ற வேண்டும் என்பதைப் பாடப்புத்தகத்தின் இறுதி பக்கத்திலிருந்து கண்டுபிடித்து கலந்துரையாடல் நடத்தி குறிப்பு தயாரிக்கவும்.*

- *அரசியலமைப்பிற்குக் கீழ்ப்படிந்து அதன் லட்சியங்களையும் நிறுவனங்களையும் தேசியக் கொடியையும் தேசியக் கீதத்தையும் மதிக்க வேண்டும்.*
- *சுதந்திரத்திற்கான நமது தேசியப் போராட்டத்திற்கு ஊக்கமளித்த உன்னத லட்சியங்களைப் போற்றிப் பாதுகாத்துப் பின்பற்றவும் வேண்டும்.*
- 
- 

நம்முடைய அரசியலமைப்பு தனிமனிதனின் கண்ணியமான வாழ்க்கைக்கு இன்றியமையாத உரிமைகளை அடிப்படை உரிமைகளாக உறுதி செய்கின்றன. மேலும் சமூக நலனுக்காக நாட்டின் கொள்கைகள் வழிகாட்டுதல்களையும் முன் வைக்கிறது. நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் நிலைப்பாட்டுக்கு உதவும் அடிப்படைக் கடமைகளும் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வகையில் அரசியலமைப்பு உரிமைகளையும் கடமைகளையும் ஒன்றிணைத்துச் செயல்படுத்துகிறது.

## தொடர் செயல்பாடுகள்

- 'அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதில் நீதிமன்றங்களின் பங்கு' என்ற தலைப்பில் சட்ட நிபுணர்களுடன் நேர்காணல் ஏற்பாடு செய்யவும்.
- 'அடிப்படை உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதற்கு அடிப்படைக் கடமைகளைச் சரியாக நிறைவேற்ற வேண்டும். இந்தத் தலைப்பில் குழு விவாதம் நடத்தவும்.
- அடிப்படை உரிமைகள், நெறிமுறை கொள்கைகள், அடிப்படைக் கடமைகள் பற்றிய பத்திரிகை செய்திகளை சேகரித்து டிஜிட்டல் ஆல்பம் தயாரிக்கவும்.

அலகு 6

# வளங்களின் பயன்பாடும் நிலைத்தன்மையும்





*படம் 6.1* • கோலார் தங்கவயல்

மேலே தரப்பட்டுள்ள படத்தை உற்றுநோக்கவும்

இந்தியாவில் மிகப் பழமையானதும் பெரியதுமான தங்கவயல் இதுவாகும். 1804 ஆம் ஆண்டு ஜோண்வாரன் என்பவர் ஆங்கில அரசுக்காக வளநிலப்படத்தை உருவாக்கியதுடன் கர்நாடகாவிலுள்ள உரிகம் என்ற கிராமமும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் தங்கத்தின் நாடு

என்று கண்டறிந்தார். இதுதான் பின்னர் கே. ஜி. எப். (கோலார் தங்க வயல்) என்று மறு பெயரிடப்பட்டது. 1880 முதல் 1956 வரை 800 டன்னிற்கும் கூடுதலான தங்கத்தை உற்பத்தி செய்து கோலார் தங்க வயல் (கே. ஜி. எப்.) உலகத்தின் தங்க நிலப்படத்தில் இந்தியாவின் இடத்தைப் பதிவு செய்தது. தங்க வைப்புகள் இருப்பதால் கர்நாடகாவிலுள்ள கோலார் இந்தியாவில் மிகப் பழமையான தொழில் நகரங்களில் ஒன்றாக மாறியது. இந்தியாவின் பொருளாதாரத்திலும் மக்களின் வாழ்க்கையிலும் தங்கத்தின் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டீர்களா?

நாம் தங்கத்தை என்னென்ன தேவைகளுக்குப் பயன்படுத்துகிறோம்.?

- மின்னணுப் பொருட்களை உருவாக்க
- மருந்து உருவாக்க
- 

நமது அன்றாட வாழ்வில் தேவைகளை நிறைவேற்ற தங்கத்தைத் தவிர பயன்படுத்தும் பிற பொருட்கள் எவை என்று சொல்ல முடியுமா?

- 
- 



• படம் 6.2

## மனிதவளம்

*மனிதர்கள் தங்களது திறமை, நிபுணத்துவம், தொழில்நுட்பம் போன்றவற்றைப் பயன்படுத்தி ஏராளம் வளங்களை உருவாக்குவதால் மனிதர்களையும் ஒரு வளமாகக் கருதலாம்.*

தங்கம், இரும்பு, வெள்ளி போன்றவை இயற்கையிலிருந்து கிடைக்கின்றன. இது தவிர இயற்கையிலிருந்து கிடைக்கும் காற்று, நீர், மண் போன்ற பௌதீகப் பொருட்களும் நமது தேவைகளை நிறைவேற்ற பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு தேவைகளை நிறைவேற்ற தகுந்ததும் சுற்றுச்சூழலில் கிடைப்பதும் தொழில்நுட்ப ரீதியாக அணுகக் கூடியதும் கலாச்சார முறையாக ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான எதையும் வளம் என்று அழைக்கலாம். நீர், காற்று, மண், முதலான பௌதீக பொருட்கள் மட்டுமல்லாது அறிவு சுகாதாரம் போன்ற பௌதீகமல்லாத பொருட்களும் வளம் என்பதில் அடங்கும். மனிதனின் தேவைகளுக்கு ஏற்ப நேரத்தையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி எந்த ஒரு பொருளையும் வளமாக மாற்றலாம்.
இதைத் தவிர மனித திறமைகளையும் வளமாகப் பயன்படுத்துவண்டு. இதை மனிதவளம் என்று அழைக்கிறோம்.

உற்பத்தியின் அடிப்படையில் வளங்களை முக்கியமாக இயற்கை வளங்களென்றும் மனிதனால் உருவாக்கப்படும் வளங்களென்றும் பிரிக்கலாம்.

**வளங்கள்**

**இயற்கை வளங்கள்**

இயற்கையிலிருந்து கிடைக்கும வளங்கள்.
எ. கா – காற்று, தாது செல்வங்கள்

**மனிதனால் உருவாக்கப்படும் வளங்கள்**

மனிதர் உருவாக்கும் வளங்கள்
எ. கா – சாலை, இயந்திரங்கள்

நம் விருப்பப்படி இயற்கை வளங்களையெல்லாம் பயன்படுத்த இயலுமா? எல்லா வளங்களையும் ஒரே மாதிரியாகப் பயன்படுத்த இயலாதது ஏன்?

- எல்லா இடங்களிலும் கிடைப்பதில்லை
- தொடர்ந்து பயன்படுத்தும் போது தீர்ந்து விடுகிறது.
- 

இயற்கை வளங்களின் கிடைக்கும் தன்மையும் புதுப்பிக்கப்படும் திறனும் வேறுபட்டவை. புதுப்பிக்கப்படும் திறனின் அடிப்படையில் வளங்களை இரண்டாகப் பிரிக்கலாம்.

## 1. புதுப்பிக்கக் கூடிய வளங்கள்

**(Renewable Resource)**

பயன்படுத்துவதால் தீர்ந்து போகாததும் மீண்டும் பயன்படுத்தக் கூடியதுமான வளங்களே புதுப்பிக்கக் கூடிய வளங்கள். இவை இயற்கையில் தொடர்ச்சியாக உற்பத்தி செய்யப்படுவதும் எளிதில் மனிதர்களுக்குக் கிடைப்பதுமான வளங்களாகும். சூரிய ஒளி, காற்று, கடல்அலை போன்றவை இவ்வகை வளங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

## 2. புதுப்பிக்க இயலாத வளங்கள்

**(Non-Renewable Resources)**

மில்லியன் கணக்கான வருடங்களால் உருவானதும் பயன்படுத்துவதற்கு ஏற்ப அளவு குறைகின்றதுமான வளங்களே புதுப்பிக்க இயலாத வளங்கள். இரும்பு, தங்கம், நிலக்கரி, பெட்ரோல் போன்றவை இவ்வகை வளங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

### முழுமையான சூரிய சக்தி விமான நிலையம்..



*படம் 6.3 • கொச்சி சர்வதேச விமான நிலையம்*

*கொச்சி சர்வதேச விமான நிலையம் முற்றிலும் சூரிய சக்தியால் இயங்கும் உலகின் முதல் விமான நிலையமாகும். இது பொதுத்துறை மற்றும் தனியார் துறையின் பங்களிப்புடன் இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் விமான நிலையமாகும்.*

## மும்பை ஹை (பாம்பே ஹை)



படம் 6.4 ● மும்பை ஹை

*மஹாராஷ்டிரா மாநிலத்தில் மும்பை கடலோரத்திலிருந்து 160 கிலோமீட்டருக்கு அப்பால் அரபிக்கடலில் அமைந்துள்ள எண்ணெய்க் கிணறுதான் மும்பை ஹை. இது இந்தியாவின் மிகப்பெரிய கடலோர எண்ணெய் சுரங்கங்களில் ஒன்று. 1974 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட இந்த எண்ணெய்க் கிணறை ஆயில் அண்ட் நேச்சுரல் கியாஸ் கார்பரேஷன் (ONGC) கண்காணிக்கிறது.*

**நீர், உலோகங்கள், சூரிய சக்தி, நிலக்கரி, காற்று, பெட்ரோலியம்**

*கொடுக்கப்பட்டுள்ள வளங்களில் இருந்து புதுப்பிக்கக் கூடியவை மற்றும், புதுப்பிக்க இயலாதவற்றை அடையாளம் கண்டு அட்டவணைப்படுத்தவும்.*

| புதுப்பிக்கக் கூடியவை | புதுப்பிக்க இயலாதவை |
|---|---|
| ● | ● |
| ● | ● |
| ● | ● |

மனித முன்னேற்றத்தின் பல்வேறு நிலைகளில் இரும்பு, செம்பு போன்ற தாதுக்கள் முக்கிய பங்கு வகித்துள்ளன என்று முந்தைய வகுப்பில் நீங்கள் அறிந்து கொண்டீர்களல்லவா.

## அகழ்தல்

*புவியின் மேற்பரப்பில் இருந்தோ அல்லது புவியின் உட்பகுதியில் இருந்தோ மதிப்புமிக்க பொருள்களைக் கண்டுபிடித்து வெளியே எடுக்கின்ற செயல்முறைதான் அகழ்தல் எனப்படுகிறது. அகழ்தலைப் புவியின் மேற்பரப்பில் அகழ்தல், புவியின் உட்பகுதியில் அகழ்தல் என இரண்டாகப் பிரிக்கலாம்.*

இவ்வாறான வளங்களைப் புதுப்பிக்க இயலாது. ஒரு பகுதியின் பொருளாதார அமைப்பில் தாக்கம் செலுத்துகின்ற இத்தகைய வளங்களைக் குறித்து நாம் கலந்துரையாடுவோம்.

### கனிமங்கள் (Minerals)

இயற்கையாக உருவானதும் வேதி – இயற்பியல் பண்புகளுள்ள உயிர் –உயிரற்ற பொருட்களே கனிமங்கள். பெட்ரோலியம், இரும்புத் தாது, பாக்சைட் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். இந்தக் கனிமங்களை நாம் நேரடியாகப் பயன்படுத்த இயலாது.

புவியோட்டில் தாதுக்களின் வடிவத்தில் காணப்படுகின்ற கனிமங்களை வெட்டியெடுத்து சுத்திகரித்த பின்பு மட்டுமே பயன்படுத்த முடியும். வெட்டியெடுக்கும் போது மாசுக்கள் கலந்த கச்சாப் பொருள் வடிவத்தில் கனிமங்கள் புவியோட்டிலிருந்து கிடைக்கின்றன. இதைத் தாதுக்கள் என்று அழைக்கிறோம். இந்தத் தாதுக்களைப் பல்வேறு பிரித்தெடுத்தல்

செயல்முறைகளின் வழியாகப் பிரித்தெடுத்தால் மதிப்புள்ள கனிமங்களாக மாற்ற முடியும்.

**பெட்ரோலியம், இரும்புத் தாது, பாக்ஸைட்**

*கொடுக்கப்பட்டுள்ள கனிமங்களிலிருந்து உலோகத்தின் அம்சம் கொண்ட கனிமங்களை அடையாளம் காணவும்.*

- 
- 

இதிலிருந்து சில கனிமங்களில் உலோகத்தின் அம்சம் இருப்பதைப் புரிந்து கொண்டீர்களல்லவா. தாதுக்களில் அடங்கியுள்ள பொருட்கள் மற்றும் அவற்றின் இயற்பியல் பண்புகளின் அடிப்படையில் கனிமங்களை இரண்டாகப் பிரிக்கலாம்.




## உலோக கனிமங்கள் (Metallic Minerals)

இயற்கையில் இயல்பாகக் காணப்படுகின்ற உலோகத்தின் அம்சம் கொண்டவையே உலோக கனிமங்கள். பிரித்தெடுத்தல் செயல் முறை வாயிலாக உலோக கனிமங்களிலிருந்து பிரித்தெடுக்கப்படும் உலோகம் பொதுவாகக் கடினமானதாகவும் பளபளப்பானதாகவும் இருக்கும்.. பாக்சைட்டிலிருந்து அலுமினியம் பிரித்தெடுக்கப்படுவது இதற்கு எடுத்துக்காட்டாகும். இரும்பின் சேர்க்கை அடிப்படையில் உலோக கனிமங்களை இரண்டாகப் பிரிக்கலாம். இவைகளின் சிறப்புப் பண்புகள் எவை என ஆராய்வோம்.

| இரும்பின் அம்சம் கொண்ட உலோகங்கள் (Ferrous minerals) | இரும்பின் அம்சம் இல்லாத உலோகங்கள் (Non-ferrous minerals) |
|---|---|
| • சாம்பல் நிறத்தில் காணப்படுகின்றன. | • வெவ்வேறு நிறங்களில் காணப்படுகின்றன. |
| • காந்தத் தன்மை உள்ளது | • காந்த தன்மை இல்லை |
| • எடை கூடுதல் | • ஒப்பீட்டளவில் எடை குறைவு |

## இரும்புத் தாதுக்கள்



மாக்னடைட்



ஹேமடைட்



லிமோனைட்



சிடரைட்

●படம் 6.5

*இரும்புத் தாதுக்களில் காணப்படும் இரும்பின் அடிப்படையில் இரும்பு தாதுக்களை நான்காகப் பிரிக்கலாம். மாக்னடைட், ஹேமடைட், லிமோனைட், சிடரைட். மாக்னடைட்டைக் கறுப்புத் தாது என்று அழைப்பர். தரம் வாய்ந்த மாக்னடைட் தமிழ்நாடு, கர்நாடகம், ஜார்கண்ட், கோவா, ஆந்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் காணப்படுகிறது.*

### அலோக கனிமங்கள் (Non-Metallic Minerals)

உலோகத்தின் அம்சம் இல்லாத கனிமங்களை அலோக தனிமங்கள் என்று அழைப்பர். அலோக கனிமங்களுக்குக் கடினத்தன்மை, பளபளப்பு, நெகிழ்வுத் தன்மை போன்ற பண்புகள் ஒப்பீட்டளவில் குறைவாகும். கரிம கனிமங்கள் என்றும் கனிம கனிமங்கள் என்றும் அலோக கனிமங்கள் இரண்டாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. நிலக்கரி, பெட்ரோலியம் போன்ற கரிம கனிமங்களில் கரிமக் கூறுகள் அடங்கியுள்ளன. ஆனால் கிராபைஃட், களிமண் போன்ற கனிம கனிமங்களில் கனிமக் கூறுகளே அடங்கியுள்ளன.

*கொடுக்கப்பட்டுள்ள உலோக கனிமங்கள் மற்றும் அலோக கனிமங்களின் பயன்பாட்டைக் கண்டறிந்து அட்டவணையை முழுமைப்படுத்தவும்.*

| உலோக கனிமங்களும் பயன்பாடும் | அலோக கனிமங்களும் பயன்பாடும் |
|---|---|
| • *இரும்பு – கட்டுமானப் பணி* | • *கிராஃபைட் – பென்சில் உருவாக்க* |
| • *தங்கம் -* | • *பெட்ரோல் -* |
| • *செம்பு -* | • *களிமண் -* |

இந்தியா பல்வேறு வகையான கனிமங்களால் வளம் நிறைந்தது. இந்தியாவின் புவியியல் சிறப்புகள் கனிமங்களின் வேறுபாட்டிற்கும் காரணமாயின. இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் கனிமங்கள் சமச்சீரற்ற முறையில் பரவிக் காணப்படுகின்றன. இந்தியாவில் உள்ள கனிம வைப்புகளின் பரவலைக் குறித்து அறிந்து கொள்வோம். நிலப்படத்தை 6.6 ஐ கவனிக்கவும்.




*படம் 6.6 • நிலப்படம்*

*நிலப்படத்திலிருந்து முக்கியமான கனிமங்களையும் அவை காணப்படும் மாநிலங்களையும் கண்டுபிடிக்கவும்.*

| கனிமங்கள் | மாநிலங்கள் |
|---|---|
| • *தங்கம்* | • *மத்திய பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், கேரளம், கர்நாடகா, ஜார்கண்ட்* |
| • *இரும்பு* | • |
| • *நிலக்கரி* | • |
| • *மாங்கனீஸ்* | • |

## உற்பத்தித் தொழில்கள்

*உற்பத்தித் தொழில் என்பது மூலப்பொருள்களை இயந்திரங்கள் பயன்படுத்தி உயர்ந்த தரமான பொருள்களாக மாற்றம் செய்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள சந்தைகளில் விற்பனைப் பொருளாக்குகின்ற செயல்முறையாகும்.*

## இந்தியாவில் உற்பத்தித் தொழில்கள்

தனிமங்கள் எவ்வாறு மனிதர்களுக்குப் பயன்படுகின்றன என்பதைக் குறித்து நாம் கலந்துரையாடினோம் அல்லவா? இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் பரவலாக காணப்படும் இந்தக் கனிமங்கள் இந்தியாவின் உற்பத்தி மற்றும் தொழில் துறைகளில் முக்கிய பங்கு வகிக்கின்றன. பல்வேறு சுத்திகரித்தல் செயல்கள் மூலம் பிரித்தெடுக்கப்படுகின்ற கனிமங்களே தொழில்களின் முக்கிய மூலப்பொருள்களாகும். மூலப்பொருட்களின் அடிப்படையில் உற்பத்தித் தொழில்களை முக்கியமாக கீழே கூறப்பட்டுள்ள முறையில் வகைப்படுத்தலாம்.




பல்வேறு மாநிலங்களில் காணப்படுகின்ற முக்கியமான உற்பத்தித் தொழில்களின் நிலப்படம் தான் கீழே தரப்பட்டுள்ளது.




படம் *6.7* • நிலப்படம

*நிலப்படத்தை உற்றுநோக்கி தரப்பட்டுள்ள அட்டவணையை நிரப்புக.*

| முக்கியமான உற்பத்தித் தொழில்கள் | மாநிலங்கள் |
|---|---|
| • *இரும்பு உருக்குத் தொழில்* - | • *ஒடிசா, மேற்கு வங்காளம், சத்தீஸ்கட்* |
| • *பருத்தித்துணித் தொழில்* | • |
| • *பெட்ரோலியம் – இரசாயனத் தொழில்* | • |
| • *பட்டுத்துணித் தொழில்* | • |

## கனரகத் தொழில்

*தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களில் பெரும் பங்கும் அதிலிருந்து உருவாக்கப்படும் உற்பத்திப் பொருட்களின் அளவும் எடையும் அதிகமாக இருப்பதால் இரும்பு உருக்குத் தொழிலை கனரகத் தொழில் என அழைப்பர்.*

நாம் அறிந்து கொண்ட கனிமம் சார்ந்த தொழில்களில் முக்கியமான இரும்பு உருக்குத் தொழில் தொழில் வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்குகிறது. இரும்பு உருக்குத் தொழில் பிற தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்களையும் உற்பத்திப் பொருட்களையும் வழங்குவதால் இதை அடிப்படைத் தொழில் என்று அழைப்பர். இரும்பு உருக்குத் தொழில் கனரகத் தொழில் என்றும் அழைக்கப்படுகிறது. உலகில் அதிகளவு இரும்பு உருக்கு உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

## இந்தியாவில் இரும்பு உருக்குத் தொழில்

இயற்கை வளங்கள் மற்றும் மனித வளங்களின். கிடைக்கும் தன்மை இந்தியாவின் தொழில் துறையின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. ஒவ்வொரு நாட்டின் தொழில் வளர்ச்சியின் அளவும் அந்நாட்டில் பயன்படுத்தப்படும் இரும்பு, உருக்குப் பயன்பாட்டின் அடிப்படையிலே நிர்ணயிக்கப்படுகிறது. இரும்பு உருக்குத் தொழில் பிற தொழில் துறைகளுக்கும் சேவைத் துறைகளுக்கும் பின்பலமாகவும் நாட்டின் வருமானத்தை அதிகரிக்கவும் செய்கின்றது.

மேலும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதன் வாயிலாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது. இவ்வாறாக இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் இரும்பு உருக்குத் தொழில் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

*உலோகத்தைப் பிரித்தெடுக்கும் தொழில்நுட்பத்தைப் பற்றிய அறிவை*

> *'இந்தியப் பொருளாதாரத்தின் அடித்தளமே இரும்பு உருக்குத் தொழில்'.கலந்துரையாடி குறிப்பு எழுதவும்.*

## ஐந்தாண்டு திட்டங்கள்

*ஐந்தாண்டிற்குள் ஒரு நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூக முன்னேற்றத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்காக அரசு உருவாக்கிய திட்டமே ஐந்தாண்டு திட்டங்கள்.*

இந்தியர்கள் பண்டைய காலம் முதலே அறிந்திருந்தனர். 1907 ஆம் ஆண்டு ஸாக்சியில் (ஜாம்ஷெட்பூர்) டாட்டா அயன் அண்ட ஸ்டீல் கம்பெனி (TISCO) தொடங்கப்பட்டதன் மூலம் நவீன இரும்புருக்குத் தொழிலுக்கு இந்தியாவில் தொடக்கம் குறிக்கப்பட்டது. 1919 ஆம் ஆண்டு மேற்கு வங்காளத்தில் இந்தியன் அயண் அண்ட் ஸ்டீல் கம்பெனியும் (IISCO) 1923 ஆம் ஆண்டு கர்நாடகாவில் மைசூர் அயன் அண்ட் ஸ்டீல் (விஸ்வேஸ்வரய்யா அயண் அண்ட் ஸ்டீல்) கம்பெனியும் நடைமுறைக்கு வந்தன.

சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவில் இரும்பு உருக்குத் தொழில் வேகமாக வளர்ச்சியடைந்தது. இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தில் பிலாய், ரூர்கேலா, துர்காப்பூர் ஆகிய இடங்களில் மூன்று ஒருங்கிணைந்த இரும்பு உருக்குத் திட்டங்கள் முறையே சோவியத் யூனியன், ஜெர்மனி, பிரிட்டன் போன்ற நாடுகளின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டன. பின்னர் இந்நிறுவனங்களின் நிர்வாகத்தையும், பொறுப்பையும் அரசு நிறுவனமான ஸ்டீல் அதோரிட்டி ஆஃப் இந்தியா (SAIL) ஏற்றுக் கொண்டது. இந்தியாவின் முக்கியமான இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளின் நிலப்படம் தரப்பட்டுள்ளது. நிலப்படத்தைக் கவனிக்கவும்.




படம் *6.8* ● *நிலப்படம்*

*தரப்பட்டுள்ள நிலப்படத்திலிருந்து இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளையும் அவை அமைந்துள்ள மாநிலங்களையும் கண்டறியவும்*

| மாநிலம் | இரும்புருக்குத் தொழிற்சாலைகள் |
|---|---|
| ● *ஒடிசா* | ● *ரூர்கேலா, பாராதீப், கெந்துஜார்கட்* |
| ● | ● |
| ● | ● |
| ● | ● |
| ● | ● |




படம் 6.9 ● நிலப்படம்

தரப்பட்டுள்ள நிலப்படத்திலிருந்து ஒடிசா இந்தியாவின் முக்கியமான இரும்புருக்குத் தொழில் மாநிலம் என்பதை அறிந்து கொண்டீர்களல்லவா? இந்தியாவில் பிற மாநிலங்களை விட ஒடிசாவில் இரும்புருக்குத் தொழில் வளர்வதற்கான காரணங்கள் கீழே கூறப்பட்டுள்ளவையாகும்.

ஒடிசாவின் புவியியல் இருப்பிடம், கனிம வளங்கள் மற்றும் நீர் கிடைக்கும் தன்மை நீர்வசதி போன்றவை இரும்புருக்குத் தொழிலின் வளர்ச்சிக்குக் காரணமாயின. உயர்தரமான இரும்புத்தாது, கியோஞ்ஜர், சுந்தர்கட், மயூர்பஞ்ச் மாவட்டங்களிலும் நிலக்கரி, தால்சர் பகுதியிலும் காணப்படுகின்றன. ரூர்கேலாவிலும், கலிங்கநகரிலும் உள்ள தொழிற்சாலைகளை இந்தியாவின் முக்கிய சந்தைகளுடன் இணைக்கும் சிறந்த ரயில்பாதை இணைப்புகளும் தேசிய நெடுஞ்சாலைகளும் இரும்புருக்குத் தொழில் வளர்ச்சியடைவதற்கு உதவின. மேலும் நீண்ட கடலோரப் பகுதிகளும் துறைமுகங்களும் உள்நாட்டு மற்றும் சர்வதேச வியாபாரத்திற்கு வழிவகுத்ததன் விளைவாக ஒடிசா இரும்புருக்குத் தொழிலின் மையமாக மாறியது.

## உற்பத்தித் தொழில்களின் பரவலில் தாக்கம் செலுத்தும் காரணிகள்

புவியியல் காரணிகள் மற்றும் புவியியல் அல்லாத காரணிகள் உற்பத்தித் தொழில்களின் பரவலில் தாக்கம் செலுத்துகின்றன.

**உற்பத்தித் தொழில்களின் பரவலில் தாக்கம் செலுத்தும் காரணிகள்**

| புவியியல் காரணிகள் | புவியியல் அல்லாத காரணிகள் |
|---|---|
| நில அமைப்பு,<br>காலநிலை<br>நீர்,<br>ஆற்றல்<br>மூலப் பொருட்கள் | மூலதனம்,<br>தொழில் அமைப்பு,<br>சந்தை,<br>அரசாங்க கொள்கைகள்,<br>போக்குவரத்து<br>தொழிலாளர்கள் கிடைக்கும் தன்மை |



•*படம் 6.10*

*படத்திலிருந்து டாட்டா இரும்புருக்குத் தொழிற்சாலையைத் தாக்கம் செலுத்திய காரணிகளைக் கண்டறியவும்*

- நீர் கிடைக்கும் தன்மை (நதி)
- துறைமுகங்களின் அருகாமை (கொல்கத்தா)
- சந்தை (கொல்கத்தா, மும்பை)
- 
- 
- 

இரும்புருக்குத் தொழிலைப் போன்ற உற்பத்தித் தொழில்கள் இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமானதோடு மட்டுமல்லாமல் பல்வேறு சமூகச் சுற்றுச்சூழல் பிரச்சனைகளுக்கும் வழிவகுக்கின்றன.




மேலே கொடுக்கப்பட்ட செய்தித் தலைப்புகளைக் கவனித்தீர்களா? இவற்றில் என்னென்ன பிரச்சினைகள் குறிப்பிடப்பட்டுள்ளன?

- 
- 
- 

இவை அனைத்தும் உற்பத்தித் தொழில்களின் விளைவுகளாகும். இவைகளால் ஏற்படும் முக்கிய எதிர்விளைவே சுற்றுச்சூழல் மாசடைதல்.

### மாசடைதல்

காற்று, நீர், மண் போன்றவைகளின் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பண்புகளில் ஏற்படும் ஏற்றுக்கொள்ள முடியாத



படம் 6.11 ● காற்று மாசுபாடு

மாற்றமே மாசடைதல். மனிதர்களின் அறிவீனமான செயல்பாடுகள் மாசடைதலுக்குக் காரணமாகின்றன. இது இயற்கையின் நிலைத்தன்மைக்கு அச்சுறுத்தலாகவும் சுற்றுச்சூழலின் மறுசீரமைப்பைபுத் திறனை பாதிக்கவும் ெ◌சய்கின்றது.

## பல்வேறு வகையான மாசடைதல்கள்

### காற்று மாசுபாடு

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகைகளில் உள்ள விஷவாயுக்களான சல்பர் டை ஆக்சைடு, கார்பன் டை ஆக்சைடு, கார்பன் மோனாக்சைடு, மீத்தேன் போன்றவை வளிமண்டலத்தை மாசுபடுத்துகின்றன. இது இயற்கைக்கும் மனித ஆரோக்கியத்திற்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.



படம் 6.12 ● நீர் மாசுபாடு

### நீர் மாசுபாடு

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர், இரசாயனத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நச்சுப்பொருள்கள் போன்றவை நதிகள், ஏரிகள் மற்றும் நீர் நிலைகளை மாசடையச் செய்கின்றன. இது நீர்வாழ் உயிரினங்களுக்கும் மனிதர்களுக்கும் தீங்கை விளைவிக்கின்றது.



படம் 6.13 ● மண் மாசுபாடு

### மண்மாசுபாடு

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகள் இ– கழிவுகள் போன்றவை மண்ணின் இயற்கையான அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.. இது வேளாண்துறைக்கும் சுற்றுச்சூழலுக்கும் கேட்டை விளைவிக்கின்றது.



படம் 6.14 ● ஒலி மாசுபாடு

### ஒலி மாசுபாடு

தொழிற்சாலைகளிலிருந்து வெளிவருகின்ற அதிகப்படியான ஒலி சுற்றுப்புறப் பகுதிகளில் இருக்கும் மக்களின் உடல் மற்றும் மனநலத்தை மிகவும் பாதிக்கிறது.

*மாசடைதல் பிரச்சினைகளைக் குறித்து கலந்துரையாடி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குத் தேவையான விழிப்புணர்வு பலகை, சுவரொட்டி, முத்திரை வாக்கியங்கள் தயாரிக்கவும்.*



படம் 6.15 ● வறட்சி

## வளங்களைச் சுரண்டுதல்

உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் தொழிற்சாலைகளில் வளங்களை அறிவியல் முறையில் பயன்படுத்துவதால் வளங்கள் குறைவதற்கும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் ஏற்படுவதற்கும் காரணமாகின்றன. வன அழிப்பு, மண்ணின் வளம் குறைதல், நீர்நிலைகள் மற்றும் கனிம வளங்களைச் சுரண்டுதல் போன்றவை இதற்குஎடுத்துக்காட்டுகளாகும்.

## வட்டார சமத்துவமின்மை

இயற்கை வளங்களின் சமச்சீரற்ற பங்கீடு, அடிப்படை வசதிகளின் குறைவு போன்றவை ஒரு சில பகுதிகளில் மட்டும் தொழில் வளர்ச்சி மையம் கொள்வதற்குக் காரணமாகின்றன.இத்தகையப் பகுதிகளில் மக்களின் வருமானத்திலும் மற்றும் வாழ்க்கைத் தரத்திலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. தொழில் ரீதியாகப் பின்தங்கிய பகுதிகளில் இது வட்டார சமத்துவமின்மைக்குக் காரணமாகின்றது.



*படம் 6.16 • காடழிப்பு*

## குடியேற்றம்

மக்கள் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு நிரந்தரமாகவோ தற்காலிகமாகவோ இடம் பெயர்ந்து வாழ்வதே குடியேற்றம். வளர்ச்சி குன்றிய பகுதிகளிலிருந்து வளர்ச்சியடைந்த தொழில் நகரங்களுக்கு மக்கள் தொழிலுக்காகவும் மேம்பட்ட வாழ்க்கைச் சூழலுக்காகவும் குடியேறுகின்றனர். இதன் விளைவாகக் குடியேற்றம் நடந்த பகுதிகளில் மக்கள் அடர்த்தி அதிகரிக்கின்றது.



*படம் 6.17 • குடியேற்றம்*

## நகரமயமாக்கல்

கிராமங்களிலிருந்து மக்கள் நகரங்களில் குடியேறுதல் மற்றும் நகரங்களில் இயல்பான மக்கள் தொகை வளர்ச்சி ஆகியவற்றின் விளைவாக அளவிலும் மக்கள் தொகையிலும் ஏற்படும் அதிகரிப்பே நகரமயமாக்கல். இது நகரங்களின் பரப்பளவையும், மக்கள் தொகையையும் பெருமளவில் அதிகரிப்பதற்கும் சமூக – பொருளாதார சுற்றுச்சூழல் மாற்றங்களுக்கும் காரணமாகின்றது.



*படம் 6.18 • நகரமயமாக்கல்*

> *'உற்பத்தித் தொழில்கள் : வாய்ப்புகளும் வரம்புகளும்' என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு விவாதம் நடத்தவும்*

தொழில்கள் உருவாக்கும் பல்வேறு பிரச்சினைகளில் முக்கியமான ஒன்று வளங்களைச் சுரண்டுதல் என்பதை அறிந்து கொண்டீர்களல்லவா? அறிவியல்பூர்வமான வளப் பயன்பாட்டின் மூலம் வளங்களைப் பாதுகாக்கலாம்.

## வளங்களைப் பாதுகாத்தல்

அறிவுப்பூர்வமான பயன்பாட்டின் மூலம் வளங்களின் அதிகப்படியான சுரண்டலைத் தவிர்த்து வளங்களின் கிடைக்கும் தன்மையை உறுதி செய்வதே வளங்களைப் பாதுகாத்தல் எனப்படும். வரும் தலைமுறைக்காக வளங்களைப் பாதுகாத்தல், சுற்றுச்சூழல் சமநிலையை நிலைநிறுத்துதல், இயற்கையிலும் மனிதர்களிலும் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்தல் போன்றவை வளங்களைப்




*• படம் 6.19*

பாதுகாத்தலின் நோக்கங்களாகும். முக்கியமான வளப் பாதுகாப்பு வழிமுறைகள் எவை என அறிந்துகொள்வோம்.

- வளங்களை மீண்டும் பயன்படுத்துதல்
- நீர் பாதுகாப்பு
- ஆற்றல் பாதுகாப்பு
- வனப்பாதுகாப்பு
- 
- 

*வளங்களைப் பாதுகாப்பதற்காக உங்களுக்குப் பள்ளியில் நடத்த முடிகின்ற பல்வேறு செயல்பாடுகளைப் பல குழுக்களாகப் பிரிந்து கலந்துரையாடி கருத்து விளக்கப் படத்தை தயாரித்து வெளியிடவும்.*

வளங்களைப் பாதுகாத்தல் என்ற கருத்து இயற்கை வளங்களின் சுரண்டலைத் தடுத்து வரும் தலைமுறைக்குத் தேவையான வளங்களைக் கிடைக்கச் செய்தல் என்பதாகும். தற்பொழுது வளங்களைப் பாதுகாப்பதற்காக உலக நாடுகள் பின்பற்றும் கொள்கையே நிலையான வளர்ச்சி.

## நிலையான வளர்ச்சி (Sustainable Development)




•படம் 6.20

எதிர்கால தலைமுறையினரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறனுக்குக் குறைவு ஏற்படாத வகையில் தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வளர்ச்சியே நிலையான வளர்ச்சி எனப்படும். சுற்றுச்சூழலின் நன்மைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கும் இடையேயான சமநிலையின் மூலம் பொருளாதார வளர்ச்சியடையலாம். வளங்களை மறுசுழற்சி செய்தல், பயன்பாட்டைக் குறைத்தல், மீண்டும் பயன்படுத்துதல் போன்றவைகள் நிலையான வளர்ச்சி அடைவதற்கான வழிமுறைகளாகும். நிலையான வளர்ச்சியை 2030 ஆண்டிற்குள் அடையவேண்டும் என்ற நோக்கத்தோடு ஐக்கிய நாட்டு சபை 2015 ஆம் ஆண்டில் முன்வைத்த 17 இலக்குகளின் தொகுப்பே நிலையான வளர்ச்சியின் நோக்கங்கள் ஆகும்.

## தொடர் செயல்பாடுகள்

- முக்கியமான கனிமங்களின் படங்களைத் திரட்டி ஓர் ஆல்பம் தயாரிக்கவும்.
- உங்கள் பகுதியில் மாசடைதலைக் குறித்து ஒரு விழிப்புணர்வு வகுப்பு நடத்தவும்.
- வளப் பாதுகாப்பை அடிப்படையாக்கி ஒரு டிஜிட்டல் மலர் தயாரியுங்கள்.
- உங்கள் பகுதியில் நிலையான வளர்ச்சியைக் குறித்து ஒரு விழிப்புணர்வு வகுப்பு நடத்தவும்.
- இந்தியாவின் கனிம வளங்கள், உற்பத்தித் தொழில்கள் என்பவைகளின் நிலப்படம் தயாரித்து எனது நிலப்படத் தொகுப்பில் இணைக்கவும்.

அலகு 7



# ஊடகங்களும் சமூகப் பிரதிபலிப்புகளும்




படம் 7.1

படத்தைக் கவனிக்கவும்

தகவல் தொடர்புக்காகப் பயன்படுத்தப்படும் பல்வேறு உபகரணங்கள் படத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. பண்டைய காலம் முதலே மனிதர்கள் தகவல் தொடர்பிற்காகப் பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி வருகின்றனர். ஒரே நேரத்தில் ஏராளமான மக்களோடு தகவல் தொடர்பு கொள்ள முடிகின்ற பல்வேறு வடிவங்கள் பொது ஊடகங்கள் (Mass Media) எனப்படுகிறது. செய்தித்தாள்கள், இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி, இணையம், சமூக ஊடகங்கள் ஆகியவை இதில் அடங்கும்.

*தகவல் தொடர்பு ஊடகம் என்ற நிலையில் வெவ்வேறு ஊடகங்களில் இடம் பெறுகின்ற செய்திகளைக் குறிக்கும் பட்டியலை முழுமை செய்யவும்.*

| அச்சு ஊடகங்கள் | வானொலி | தொலைக்காட்சி | இணையம் |
|---|---|---|---|
| • செய்திகள்<br>• கட்டுரைகள்<br>•<br>• | • அறிவிப்புகள்<br>• வானிலை முன்னறிவிப்புகள்<br>•<br>• | • பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்<br>• திரைப்படம்<br>•<br>• | • இணைய வழி செய்திகள்<br>• மின் வணிகம்<br>•<br>• |



படம் 7.2 •



படம் 7.3 •

தனி நபர்களில் வாசிப்பு மற்றும் எழுதும் திறனை வளர்ப்பதில் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. செய்தித்தாள்கள், இதழ்கள், வலைப்பதிவுகள், சமூக ஊடகங்கள் ஆகியவற்றின் மூலமாகத் தனிநபர்கள் எழுத்துமொழியோடு தொடர்பு கொள்கிறார்கள். இது வாசிப்பை ஊக்கப்படுத்துகிறது. சமூக ஊடகங்கள், வலைப்பதிவுகள், இணைய மன்றங்கள் போன்ற உணர்திறன் தளங்கள் (Sensitive plat forms) தனிநபர்கள் தங்கள் எண்ணங்களைப் பிரதிபலிக்க வைக்கவும் பகிர்ந்துகொள்ளவும் உதவுகின்றன. ஊடகங்கள், வாசிப்பு நிலையங்கள், புத்தக மன்றங்கள், இணைய வழி எழுத்துச் சமூகங்கள் ஆகியவை வாசிப்பையும் எழுத்தையும் கலாச்சாரத்தையும் வளர்க்கின்றன. பல்வேறு கல்வியறிவுத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கவும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் முடிவதின் மூலம் ஊடகங்கள் சமூக முன்னேற்றத்திற்கு ஊக்கம் கொடுக்கின்றன. அச்சு ஊடகங்களிலிருந்து டிஜிட்டல் ஊடகங்களுக்கான வளர்ச்சிக்குத் தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்கள் காரணமாக அமைந்தன.

## ஊடகத்தின் பல்வேறு வடிவங்கள்

சமூக உறவுகளை உருவாக்குவதற்கும் தனிநபர்களுக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பை (Interaction) உறுதிபடுத்துவதற்குமுள்ள முக்கிய தகவல் தொடர்பு முறையே ஊடகங்கள். இவை சமூக வாழ்க்கையில் தனிநபர்களுக்கும் சங்கங்களுக்கும் நிறுவனங்களுக்கும் தொடர்புகொள்ள முடிகின்ற பரிமாற்ற இடங்களாகும். பயன்பாட்டின் அடிப்படையில் ஊடகங்களைப் பலவகைகளாகப் பிரிக்கலாம்.



படம் 7.4 • *அச்சகம்*

### 1. அச்சு ஊடகங்கள் (Print Media)

- பள்ளி நூலகத்திலுள்ள வெளியீடுகளை நீங்கள் வாசிப்பதுண்டா? உங்களுக்கு மிகவும் பிடித்த வெளியீடுகள் எவை?
-

செய்தித்தாள்கள், இதழ்கள், புத்தகங்கள் போன்ற அச்சு ஊடகங்களின் மதிப்பு டிஜிட்டல் யுகத்திலும் பெரிதாகும். இவை விரிவான செய்திகளையும் சிறப்புக் கட்டுரைகளையும் இலக்கியப் படைப்புகளையும் சமூகத்திற்கு வழங்குகின்றன. நம்பகமானதும் ஆழ்ந்த வாசிப்பு அனுபவமும் அச்சு ஊடகங்கள்வழி கிடைக்கின்றன. இவைகளைப் பாதுகாத்து வைத்து மீண்டும் வாசிப்பதற்கு உதவுகின்றன. அச்சு ஊடகங்களிலிருந்து வாசிப்பவர்களுக்கு மட்டுமே தகவல் பரிமாற்றம் சாத்தியமாகும்.

*பருவ இதழ்களில் வெளிவந்துள்ள ஏதாவது செய்திகள், கட்டுரைகள் ஆகியவற்றைப் பற்றிய உங்களின் மதிப்பீட்டையும் கருத்தையும் குறிப்பிட்டு செய்தி ஆசிரியருக்கு ஒரு கடிதம் தயார் செய்து வகுப்பில் சமர்ப்பிக்கவும்.*

## 2. ஒளிப்பரப்பு ஊடகம் (Broadcast Media)




படம் 7.5

ஒளிபரப்பு ஊடகங்கள் நிகழ்ச்சிகளை ஒளிப்பரப்புவதை குறிப்பிடும் படம் தான் மேலே கொடுக்கப்பட்டுள்ளது. வானொலி, தொலைக்காட்சி போன்ற ஒளிப்பரப்பு ஊடகங்கள் ஏராளமான மக்களுக்கு ஒரே நேரத்தில் கருத்துகளைத் தெரிவிக்கின்றன. இதில் கருத்துப் பரிமாற்றம் ஒரு திசையில் மட்டுமே சாத்தியமாகிறது. ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளின் கருத்துகளைப் பதிவு செய்ய காலதாமதம் ஏற்படுவதால் இவற்றிலும் பரஸ்பர தொடர்புக்கான வாய்ப்புக் குறைவாகும்..

செய்திகள், இசை, விவாதங்கள், உரையாடல்கள், விளையாட்டு பொழுது போக்குகள் போன்றவை ஒளிபரப்பு ஊடகங்கள் வாயிலாகக் கிடைக்கின்றன. டிஜிட்டல் தளங்கள் வளர்ந்து வந்தாலும் ஒளிபரப்பு ஊடகங்கள் மக்கள் தொகையின் ஒரு பெரும் பிரிவினரிடத்தில்

செல்வாக்கையும் பொதுமக்கள் கருத்து உருவாக்கத்திற்கு துணை புரியவும் செய்கின்றன

வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பற்றியுள்ள உங்கள் கருத்துகளை ஒளிபரப்பாளர்களுக்கு எந்த முறையில் தெரிவிப்பீர்கள்?

- கடிதங்கள் வாயிலாக
- 
- 

## 3. தொழில்நுட்ப ஊடகங்கள் (Digital Media)




படம் *7.6*

மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் SCERT மற்றும் சமக்ரா இணையதளம் ஆகியவற்றின் முகப்புப் பக்கத்தின் படங்கள் மேலே கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் 'சமக்ரா' இணையதளத்தைப் பயன்படுத்திருப்பீர்கள் அல்லவா? என்னென்ன சிறப்பம்சங்கள் அதற்குள்ளது?

- 
- 

உங்கள் கற்றல் செயல்பாடுகளுக்கு அது எவ்வாறு துணை புரிகிறது?

- 
- 

இணையத்தின் வருகையால் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டதோடு டிஜிட்டல் தளங்களும் பயன்பாட்டிற்கு வந்தன. இணையதளங்கள், இணையவழி செய்திகள், வலைப்பதிவுகள் ஆகியவை உடனடித் தகவல்களை மக்களிடம் கொண்டு சேர்க்கத் தொடங்கின. இதனால் ஊடகங்கள் வழியாகச் சமூகத் தொடர்பு (Social Interaction) அதிகரித்தது. இவை தகவல்களின் உள்ளடக்கத்தைப் பகிரவும் விவாதிக்கவும் வாய்ப்பளித்தன.

*கல்வித் தொடர்பான வலைப்பதிவுகளை நீங்கள் பார்ப்பது உண்டா? சமீபத்தில் எந்த முக்கியமான கல்வி இணையதளத்தைப் பார்வையிட்டீர்கள்? அவற்றில் உங்களைப் பாதித்த காரணிகள் எவை? வகுப்பில் விவாதிக்கவும்.*

## 4. சமூக ஊடகங்கள் (Social Media)




படம் 7.7

இணைய வழி கருத்தரங்கு குறித்துச் சமூக ஊடகங்கள் வழியாக வகுப்பாசிரியர் மாணவர்களுக்கு அறிவிப்பு கொடுத்ததையும், மாணவர்கள் அதற்குப் பதிலளித்ததையும் கவனித்தீர்கள் அல்லவா?

சமூக ஊடகங்கள் உங்கள் கற்றல் தேவைகளுக்கு எந்தெந்த வகையில் உதவிப் புரிகின்றன.?

- கற்றல் வளங்களைப் பகிர்தல்
- 
- 

சமூக ஊடகங்கள் நவீன கால மக்களின் வாழ்க்கையில் பிரிக்க முடியாத அங்கமாக மாறியுள்ளன. தனிப்பட்ட உறவுகளும் (Interpersonal relationship) சமூகப் பரஸ்பரத் தொடர்பும் சமூகத் தொடர்புகளும் சமூக ஊடகங்களில் அதிகமாக காணப்படுகின்றன. எழுத்து (Text) படங்கள், காணொலி போன்ற உள்ளடக்கத்தை உருவாக்கவும் பகிரவும் விவாதிக்கவும் பயனர்களை அனுமதிக்கின்ற இணையவழி தளங்களே சமூக ஊடகங்கள். நேரடிச் செய்தியனுப்புதல், கருத்துகளைப் பதிவிடல், பொதுவான பகிர்தல் ஆகியவை உட்பட பல்வேறு தகவல்

தொடர்பு வடிவங்கள் மூலம் சமூக உறவுகளும் சமூகக் கூட்டமைப்புகளும் எளிதாக்கப்படுகின்றன. பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதிலும் சமூகத் தொடர்புகளை ஊக்கப்படுத்துவதிலும் சமூக–அரசியல் இயக்கங்களில் செல்வாக்குச் செலுத்துவதிலும் சமூக ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

*ஊடகத்தின் பரிணாம வளர்ச்சியைக் குறிப்பிடுகின்ற ஒரு சுவரொட்டியைத் தயாரித்து சமூக அறிவியல் மன்றத்தில் வெளியிடவும்.*

அச்சு ஊடகங்களும் ஒளிபரப்பு ஊடகங்களும் பாரம்பரிய ஊடகங்களாகும். ஒரு திசையில் மட்டும் தகவல் பரிமாற்றம் செய்ய முடிவதால் இவற்றின் மூலம் பரஸ்பர தொடர்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், டிஜிட்டல் ஊடகங்களும் சமூக ஊடகங்களும் நவீன ஊடகங்களாகும். இவை இரு திசைகளிலும் சமமான பரஸ்பர தொடர்புகளைச் செயல்படுத்துகின்றன.

**ஊடகங்களின் பல்வேறு வடிவங்கள்**

**பாரம்பரிய ஊடகங்கள்**

- **அச்சு ஊடகங்கள்**
  செய்தித்தாள், புத்தகங்கள் போன்றவை
- **ஒளிப்பரப்பு ஊடகங்கள்**
  வானொலி, தொலைக்காட்சி போன்றவை

**நவீன ஊடகங்கள்**

- **டிஜிட்டல் ஊடகங்கள்**
  இணையதளம், இணைய வழிச் செய்திகள், வலைப்பதிவுகள் போன்றவை
- **சமூக ஊடகங்கள்**
  புகைப்படம்– காணொலி பகிர்தல் தளங்கள், இணையவழி விவாத மன்றங்கள் போன்றவை

*வெவ்வேறு ஊடக வடிவங்களின் (செய்தித்தாள், இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி, இணையதளம், சமூக ஊடகங்கள்) பெயர்களை எழுதிய துண்டுகளை ஒரு பெட்டியில் வைக்கவும். வெவ்வேறு குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு வகையான ஊடக வடிவங்களைத் தேர்ந்தெடுக்கவும். கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் ஒவ்வொரு ஊடகத்திலும் எவ்வாறு செயல்படுகிறது என்பதைக் கண்டுபிடிக்கவும்.*

- *வட்டார/தேசிய/ அகில உலகச் செய்திகள்*
- *அறிவியல்*
- *விளையாட்டு*
- *பொழுதுபோக்கு*
- *விளம்பரங்கள்*
- *கலைகள்*

*ஒவ்வொரு ஊடகத்திலும் பார்வையாளர்களின் பதில்கள் காட்டப்படும் முறையைக் கூடக் கண்டறிந்து அதன் அடிப்படையில் வெளியிடவும்.*

செயல்பாட்டளவில் கண்டறிதலின் அடிப்படையில் பாரம்பரிய ஊடகங்களும் நவீன ஊடகங்களும் எவ்வாறு வேறுபட்டுள்ளன என்பதை ஆராய்வோம்.

வேறு சில வேறுபாடுகளைக் கண்டுபிடித்துச் சேர்க்கவும்.

| சிறப்புகள் | பாரம்பரிய ஊடகங்கள் | நவீன ஊடகங்கள் |
|---|---|---|
| தகவல் தொடர்பு | ஒரு வழி தகவல் தொடர்பு (தகவல் கொடுப்பவர்களிடமிருந்து பெற்றுக்கொள்பவர்களுக்கு மட்டும்) | இரு வழி தகவல் தொடர்பு (தகவல் கொடுப்பவருக்கும் பெறுபவருக்கும் இடையே) |
| பரஸ்பரம் | பரஸ்பரம் வரம்புக்குட்பட்டது | உயர்ந்த பரஸ்பர தொடர்பும் பங்கேற்பும் |
| வடிவம் | திட வடிவம் (செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி) | டிஜிட்டல் வடிவம் (இணைய வசதியுள்ள உபகரணங்கள்) |
| பெறுபவர்கள் | வரையறுக்கப்பட்ட பங்கேற்பு | ஆக்கப்பூர்வமான பங்கேற்பு |
| கிடைக்கும் தன்மை | இடம் மற்றும் நேர எல்லைக்கு உட்பட்டதால் எப்போதும் கிடைப்பதில்லை | இடம் மற்றும் நேர எல்லை இல்லாமல் சர்வதேச அளவிலும் கிடைக்கிறது |
| • | • | • |
| • | • | • |

பொதுமக்கள் கருத்துகள் (Public Opinion) சமூக விதிமுறைகள் (Social Norms) கலாச்சார விழுமியங்கள் ஆகியவற்றில் செல்வாக்கைச் செலுத்தி சமூகத்தை வடிவமைப்பதில் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி ஆகிய பாரம்பரிய ஊடகங்கள், பொழுதுபோக்கு, தகவல் தொடர்பு, அறிவியல் செய்திகள் ஆகியவற்றை வழங்குகின்றன. அதே நேரத்தில் நவீன ஊடகங்கள் அதிக தகவல் தொடர்புகளைச் சாத்தியமாக்குவதோடு பங்கேற்பை அதிகரிக்கவும் செய்கின்றன.

சமூக ஊடகங்களின் ஈடுபாடு தனிநபர்களுக்கு இடையிலான உறவில் சிறந்த முறையிலான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஆனால் அவை சமூகத்தில் தரமற்ற சூழ்நிலைகளை உருவாக்குவதாகச் சமூகவியலாளர்கள் மதிப்பிடுகிறார்கள். சமூக ஊடகங்கள் குறுகிய நிலையில் தொடர்புகளில் ஈடுபட முடியும் என்றாலும், அவை அர்த்தமுள்ள ஆழமான தொடர்புகளில் ஈடுபட தவறி விடுகின்றன.

சமூக ஊடகங்களின் அளவற்ற பயன்பாட்டால் ஏற்படுகின்ற பிரச்சனைகளைக் கண்டறிந்து சேர்க்கவும்.



படம் 7.8

- மாணவர்களின் கற்றலையும் உடல் – மனநலங்களையும் மோசமாகப் பாதிக்கிறது.
- கட்டுப்பாடற்ற பயன்பாடு தனிப்பட்ட உறவுகளிலும் சமூக உறவுகளிலும் விரிசலை ஏற்படுத்துகிறது.
- 
- 



*பாரம்பரிய ஊடகங்கள் மற்றும் நவீன ஊடகங்களின் சிறப்புகளைக் குறிக்கும் ஒரு படக்கலவை தயாரித்து வகுப்பில் வெளியிடவும்.*

## சமூக வாழ்வில் ஊடகங்களின் தாக்கம்

பாரம்பரிய ஊடகங்களும், நவீன ஊடகங்களும், நவீன சமூகத்தின் பிரிக்க முடியாத அங்கமாக மாறிவிட்டன. பல்வேறு வகையான ஊடகங்கள் நமது சமூக வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை ஆராய்வோம்..

### 1. ஊடகமும் சமூகமயமாக்கலும் (Media & Socialisation)

உங்களுக்குப் பிடித்த குழந்தைகள் வெளியீடு எது?

அதிலிருந்து உங்களுக்கு என்னென்ன அறிவுகள் கிடைத்தன?

| | | |
|---|---|---|
| • கதைகள் | • விழுமியங்கள் | • நல்ல பாடங்கள் |
| • | • | • |

கதைகள், கவிதைகள் மூலமாகச் சமூக பழக்கங்களும் நல்லொழுக்கங்களும் அறிவும் பொழுதுபோக்கும் கிடைக்கிறதல்லவா? சமுதாயத்தில் எப்படி வாழவேண்டும், எப்படி நடந்துகொள்ள வேணடும் என்பதைச் சிறுவயதிலிருந்தே நமது சுற்றுப்புறத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் செயல்முறையே சமூகமயமாக்கல் ஆகும். உதாரணமாக, பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்ற பண்பை நாம் குழந்தைகளாகயிருக்கும் போதே பெற்றோர்களிடமிருந்து கற்றுக் கொள்கிறோம்.

குடும்பம், பள்ளி, நண்பர்கள், ஊடகங்கள் ஆகியவையெல்லாம் சமூகமயமாக்கல் செயல்பாட்டிற்கு உதவுகின்றன. நாம் சமூகத்தில் எப்படிப் பழக வேண்டுமென்றும் எதை விரும்ப வேண்டும் என்று தீர்மானிப்பதிலும் ஆளுமை உருவாக்கத்திலும் ஊடகங்கள் செல்வாக்கு

செலுத்துகின்றன. ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கைமாறப்படும் சமூக விழுமியங்களும் பழக்க வழக்கங்களும் ஊடகங்கள் வழியாகவும் பரிமாறப்படுகின்றன.

*கைற்று விக்டர்ஸ் கல்விச் சேனலில் உள்ள நிகழ்ச்சிகள் உங்களின் பண்பு உருவாக்கத்திலும், சமூக அறிவு உருவாக்கத்திலும் எவ்வாறு உதவிபுரிகின்றன என்பதைக் கண்டுபிடித்து ஓர் ஆய்வுக் குறிப்பைத் தயார் செய்து வகுப்பில் வெளியிடவும்.*

## 2. ஊடகங்களும் பொதுமக்கள் கருத்து உருவாக்கமும்

**(Media & Public opinion Formation)**

### கேரள சட்ட சீர்திருத்த ஆணையம் ஆலோசனைகளும் கருத்துகளும் வரவேற்கப்படுகின்றன

கேரள பணியாளர் தேர்வு வாரியம் தேர்வர்களின் தர வரிசைப் பட்டியலைத் தயாரித்து, அது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்கும் பணியைக் கேரள சட்ட சீர்திருத்த ஆணையத்திடம் அரசு ஒப்படைத்துள்ள நிலையில், இந்தச் செயல் தொடர்பாகப் பொதுமக்களிடமிருந்து ஆலோசனைகளும் கருத்துகளும் சேகரிக்கப்படுகின்றன. 2022 செப்டம்பர் 01 காலை 10.30 மணிக்குத் திருவனந்தபுரம் தைக்காடு அரசு விருந்தினர் மாளிகை மாநாட்டு அரங்கத்தில் வைத்து பொது விசாரணை நடத்தப்படும். இந்த விஷயத்தைக் குறித்து தொடர்புடைய அனைவரும் அன்றைய தினம் நடைபெறும் விசாரணையில் பங்கெடுத்து ஆலோசனைகளையும் கருத்துகளையும் நேரிலோ, தபால் மூலமாகவோ, செயலர், கேரள சட்ட சீர்திருத்த ஆணையம், TCஎண் 25/2450. 3 வது தளம், சி. எஸ். ஐ. கட்டடம், புத்தன்சந்தை, திருவனந்தபுரம் – 695 001 என்ற அலுவலக முகவரியிலும் சமர்ப்பிக்கலாம்.



படம் 7.9 • கருத்து உருவாக்கம்

பத்திரிக்கைச் செய்தியை வாசித்தீர்களல்லவா? ஜனநாயக முறையில் அரசாங்கம் புதிய கொள்கைகளை உருவாக்குவதற்கு முன் பொது மக்களின் கருத்துகளைக் கவனத்தில் கொள்வதுண்டு. பல்வேறு ஊடகங்கள் வாயிலாகப் பொதுமக்களிடம் ஆலோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுண்டு.

தேர்தல் நேரங்களிலும் சர்வதேசக் கொள்கை உருவாக்கத்திலும் ஊடகங்கள் மூலம் பொதுமக்களிடம் கருத்து உருவாக்கப்படுகிறது. இவ்வாறாக மக்களின் கருத்து உருவாக்கத்திலும் மக்கள் செல்வாக்கைப் பெறுவதிலும் ஊடகங்கள் முக்கிய கருவியாகச் செயல்படுகின்றன.

சில ஊடகங்களில் வரும் நிகழ்ச்சிகள் பாரபட்சமானதாகவும் எதிர்மறையானதாகவும் இருக்கக் கூடும். தவறான, தெளிவற்ற கருத்துகள் நவீன ஊடகங்கள் வழியாகச் பரப்பப்படுவதைக் கவனித்திருக்கிறீர்களா? சமூக ஊடகங்களின் வளர்ச்சி இந்தச் செயல்களுக்கு ஊக்கமளிக்கின்றன. கோவிட் – 19 பரவிய காலத்தில் சில சமூக ஊடகங்களில் போலி மருத்துவ முறைகள், வைரஸ் முதலான கட்டுக்கதைகள் பரப்பப்பட்டது இதற்கு உதாரணமாகும்.

## தகவல் தொழில் நுட்பச் சட்டம் 2000 *(IT Act 2000)*

*தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியோ அல்லது அதை இலக்கு வைத்தோ செய்யப்படும் குற்றங்கள் சைபர் கிரைம்கள் எனப்படும். கணினி அலைபேசி, டிஜிட்டல் புகைப்படக் கருவி ஆகியவையே இதன் உபகரணங்கள். தகவல் தொழில் நுட்பச் சட்டம் 2000 என்பது இணையக் குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்குக் கடுமையான சட்ட நடவடிக்கைகளையும் தண்டனைகளையும் உறுதி செய்வதற்காக பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டமாகும்.*

இது தவறான பொது மக்கள் கருத்து உருவாக்கத்திற்குக் காரணமாகின்றது. இது போன்ற தவறான செய்திகளை உருவாக்குவதும் பரப்புவதும் தகவல் தொழில் நுட்பச் சட்டத்தின் படி (IT ACT 2000) தண்டனைக்குரிய குற்றமாகும்.

*ஊடகங்களின் தவறான புரிதல்களையும் தகவல்களையும் அடையாளம் காண என்னென்ன செய்யலாம் என்பதை வகுப்பில் விவாதித்து விளக்கப் படத்தாளில் அட்டவணைப்படுத்தவும்.*

சமூக, அரசியல், சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப் பொதுமக்களிடம் கொண்டுவர சமூக ஊடகங்கள், வலைதளங்கள், இணையவழிப் பிரச்சாரங்கள் போன்ற தொழில்நுட்ப கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. சமூக ஊடகங்களில் இது போன்ற செயல்பாடுகள் அதிகரிப்பதை நீங்கள் கவனித்தது உண்டா? நீங்கள் அவற்றில் பங்கேற்பதுண்டா?

சமூக ஊடகங்களின் தளங்கள் தகவல் தொடர்பிற்கும், உடனடியாக வளங்களைத் திரட்டுவதற்கான வழிகளைச் செயல்படுத்துவதற்கும் பொதுமக்களின் ஈடுபாட்டைத் தூண்டுகின்றன. சமூக ஊடகங்களில் பல்வேறு ஹேஷ்டேக், பிரச்சாரங்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், நிதி சேகரிப்பு ஆகியவை இதற்குச் சில சான்றுகள்.

## 3. ஊடகமும் நுகர்வு நடத்தையும் (Media and Consuming Behaviour)




படம் 7.10

படத்திலுள்ள விளம்பரங்கள் பொதுமக்களை ஈர்ப்பதற்கான காரணங்கள் எவை?

- 
- 

உங்கள் உணவு பழக்க வழக்கங்களில் ஊடகங்கள் தாக்கம் செலுத்துகின்றனவா?

உணவுப் பொருட்களின் விளம்பரங்கள், சமையல் நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் களஞ்சியமே ஊடகங்கள். இத்தகைய பல்வேறு துறைகளோடு தொடர்புடைய விளம்பரங்களை ஊடகங்களில் காணலாம். இவற்றில் விளம்பரங்கள் கொடுப்பதின் மூலமும், வேலை வாய்ப்புகளை அறிவிப்பதின் மூலமும் நுகர்வோர்களை அதிகரிப்பதன் மூலமும் உலகளாவிய பொருளாதார வளர்ச்சிக்கு ஊடகங்கள் உதவுகின்றன. ஊடகங்கள் மூலமான விளம்பரங்களும், பிற நிகழ்ச்சிகளும் நமது நுகர்வுப் பழக்கத்தை உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

*செய்தித்தாள்களிலும் இதழ்களிலும் வந்துள்ள உணவு தொடர்பான விளம்பரங்களின் படங்களைச் சேகரிக்கவும், அவை உங்களது ஆரோக்கியமான உணவு பழக்கத்தில் என்னென்ன மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளன என்பதைப் பற்றி விவாதித்துச் செய்தி படக் கலவை தயாரிக்கவும்.*

## 4. ஊடகங்களும் ஸ்டீரியோடைப்புகள் (Media and Stereotypes)

சமூகத்தில் சில பகுதிகளில் இப்போதும் நிலை நிற்கின்ற மனோபாவங்களையும் நம்பிக்கைகளையும் பற்றிய முன் அனுபவங்களைக் கவனியுங்கள்.




என்னென்ன முன் அனுமானங்கள் இங்குச் குறிப்பிடப்பட்டுள்ளன.

- 
- 
- 
- 
- 

இவை உண்மையில் சரியானவையா?

பொதுவான முன் அனுமானங்களைக் கொண்ட அறிக்கைகளே ஸ்டீரியோடைப்புகள் (Stereo types). இனம், பாலினம், கலாச்சாரம், நிறம் போன்றவற்றின் அடிப்படையில் தனிநபர்களைப் பற்றிய எளிய பொதுவான ஏற்புடைய நம்பிக்கைகளும் கருத்துகளும் ஸ்டீரியோடைப்புகள்களாகும்.

இத்தகைய ஸ்டீரியோடைப்புகள் ஊடகங்களில் வெவ்வேறு வடிவங்களில் பிரதிபலிக்கப்படுவதை நீங்கள் கவனித்தது உண்டா?

இவை எந்தெந்த ஊடக நிகழ்ச்சிகளில் பிரதிபலிக்கின்றன?

- தொடர்கள்
- விளம்பரங்கள்
- திரைப்படம்
- 
- 
- 

பல்வேறு வகையான ஊடகங்களான திரைப்படங்கள், செய்திகள், சமூக ஊடகங்கள் ஆகியவை சமூக மனப்பான்மைகளை உருவாக்கவும், பிரதிபலிக்கவும் செய்கின்றன. ஊடகங்கள் பொது மக்களின் தொலை நோக்குப் பார்வையில் தாக்கம் செலுத்தவும் சமூக விதிமுறைகளை வலுப்படுத்தவும் செய்கின்றன. இதன்மூலம் ஸ்டீரியோடைப்புகள்களை உருவாக்குவதிலும், நிலை நிறுத்துவதிலும் இவை முக்கிய பங்கு வகிக்கின்றன.

*பல்வேறு ஊடக நிகழ்ச்சிகளைக் கவனித்து மாதிரியாக்கங்களை உருவாக்குவதிலும் நிலை நிறுத்துவதிலும் ஊடகங்களின் பங்கை விளக்கும் டிஜிட்டல் ஆல்பம் / டிஜிட்டல் படக் கலவை தயாரித்து வகுப்பில் வெளியிடவும்.*

## 5. ஊடகமும் சமூக தலையீடுகளும்
**(Media and Social Interventions)**




# நம்முடைய கிராமத்தைப் பாதுகாப்போம் # சமூக நீதிக்காக
# நிலையான எதிர்காலம் # பாகுபாட்டிற்கு எதிராக

தலைப்புச் செய்திகளையும் ஹாஷ்டேக் வாக்கியங்களையும் கவனியுங்கள். இவை என்னென்ன சமூக பிரச்சனைகளைப் பிரதிபலிக்கின்றன?

- 
- 
- 
- 
- 
- 

பல்வேறு சமூக பிரச்சினைகளைப் பொதுமக்களிடம் கொண்டு சேர்ப்பதோடு, அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை பல்வேறு நிலைகளில் துரிதபடுத்துவதிலும் ஊடகங்கள் ஈடுபடுகின்றன என்பதை இதன் மூலம் காணலாம்.

*உங்கள் பகுதியில் உள்ள ஒரு சமூக பிரச்சினையைக் குறித்த செய்தியைத் தயாரித்து வகுப்பில் வழங்கவும். அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பல்வேறு வழிமுறைகளைக் குறித்து வகுப்பில் விவாதிக்கவும்.*

## ஊடகங்களும் தொழில்நுட்பமும் (Media & Technology)

செய்தியை படியுங்கள்

### விளம்பர மாதிரியை அரசு மாற்றி எழுதியது




படம் *7.11*

கொச்சி: இவை கொச்சியில் நடைபெற்ற சர்வதேச ஜென். ஏ. ஐ. உச்சி மாநாட்டிற்காக உருவாக்கப்பட்ட விளம்பரங்களாகும். செயற்கை நுண்ணறிவு (AI) உதவியுடன் உருவாக்கப்பட்டதே இதிலுள்ள விளம்பர மாதிரிகள். நான்கு மாதிரிகளில் உஷா சேச்சி தையல்காரி, ஜோஸ் சேட்டன் அரசின் சேவைகள் தேவைப்படும் ஒரு சாதாரண மனிதன் ராமன் குட்டி வேளாண் தொழில் செய்பவர், மினிமோள் தொழில் முனைவோர். வேளாண் தொழில் செய்வோரையும் தொழில்முனைவோரையும் ஒரே போல இணைக்கின்ற இந்த விளம்பரத்தின் மாதிரிகள் செயற்கை நுண்ணறிவின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும்.

செயற்கை நுண்ணறிவு எனப்படும் நவீன தொழில்நுட்பத்தின் தோற்றம் சமூகத்தில் என்னென்ன மாற்றங்களை உருவாக்கியுள்ளது?

ஊடகங்களின் முன்னேற்றத்தைக் குறிக்கும் சுவர் விளக்கப் படம் தயாரித்தீர்கள் அல்லவா? அதிலிருந்து ஊடக வளர்ச்சிக்குத் தொழில்நுட்பம் ஊக்கம் அளித்ததைக் கவனித்தீர்களா? தொழில்நுட்பமும் ஊடகங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் புதிய ஊடக வடிவங்கள் உருவாகக் காரணமாக அமைந்தன. இந்தத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி சமூக ஊடக தளங்கள், இணைய வழி செய்தி முகப்புகள், ஸ்ட்ரீமிங் சேவைகள் போன்றன நவீன ஊடகங்கள் உருவாக வழிவகுத்தன. இது தகவல் தொழில் தொடர்பு துறையின் உற்பத்தி, விநியோகம், நுகர்வு ஆகியவற்றில் பெரும் மாற்றங்களுக்குக் காரணமாயின.

தொழில்நுட்பம் ஊடகங்களின் திறனை அதிகரிக்கச் செய்கிறது. எப்போதுவேண்டுமானாலும், எந்த இடத்திலும் உள்ளடக்கத்துடன் ஈடுபடுவதற்கான வாய்ப்பை உருவாக்கி உலகளாவிய

தகவல் தொடர்பை அதிகரிக்கவும் செய்கிறது. செயற்கை நுண்ணறிவு, பெருந்தரவுகள், அல்கோரிதங்கள் போன்றவற்றிலுள்ள புதுமையாக்கங்கள் நமது தனிப்பட்ட மற்றும் சமூக வளர்ச்சிக்குக் காரணமாகின்றன.

### செயற்கை நுண்ணறிவு *(Artificial Intelligence)*

*மனிதர்களைப் போல சிந்திக்கவும், தீர்மானம் எடுக்கவும் இயந்திரங்களைச் தயார்படுத்துவதே செயற்கை நுண்ணறிவு. இது கணினி அமைப்புகள் மூலமான மனித அறிவின் பின்பற்றுதலைக் குறிக்கிறது. கற்றல், முடிவெடுத்தல், பிரச்சனைக்குத் தீர்வு போன்ற பணிகளைச் செய்ய இது உதவுகிறது.*

### பெருந் தரவு *(Big Data)*

*பெருந்தரவு என்பது மிகவும் சிக்கலான, பாரம்பரிய தரவு செயலாக்க மென்பொருளால் கையாள முடியாத பெரிய தரவுத் தொகுப்புகளைக் குறிக்கிறது.*

### அல்கோரிதங்கள் *(Algorithms)*

*அல்கோரிதங்கள் என்பது ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கான படிப்படியான நடைமுறைகள் அல்லது சூத்திரங்களாகும். செயற்கை நுண்ணறிவு, பெருந்தரவு ஆகியவற்றின் பின்னணியில் தரவைப் பகுப்பாய்வு செய்வதற்கும், வடிவங்களை அடையாளம் காண்பதற்கும் கணிப்புகளை கணிப்பதற்கும் அல்கோரிதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக தேடு பொறிகள், இயந்திர கற்றல் மாதிரிகள் ஆகியவையெல்லாம் செயல்பாட்டிற்காகக் அல்கோரிதங்களை நம்பியுள்ளன.*

*'சமூக வாழ்வில் செயற்கை நுண்ணறிவின் தாக்கம்' என்ற தலைப்பில் பல்வேறு ஊடகங்களிலிருந்து தகவல்களைச் சேகரித்து ஆசிரியரின் உதவியோடு டிஜிட்டல் அறிக்கை தயாரிக்கவும்*

## டிஜிட்டல் ஒழுக்கங்கள் (Digital Etiquette)



டிஜிட்டல் ஊடகங்களில் வரும் சில நேர்மையற்ற தகவல்களைக் குறித்த செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. டிஜிட்டல் ஊடகங்களின் முறையற்ற உபயோகம் மோசடிகளுக்கும், அவதூறுகளுக்கும், குற்றங்களுக்கும், விபத்துகளுக்கும் உரிய தருணத்தை உருவாக்குகிறது. நீங்கள் டிஜிட்டல் தளங்களைப் பயன்படுத்துபவர்கள்தானே? அவற்றைப் பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டிய சில செய்திகள் உண்டல்லவா?

டிஜிட்டல் ஒழுக்கங்கள் என்பது டிஜிட்டல் தளங்களில் இடைபடும்போது தனிநபர்கள் பின்பற்ற வேண்டிய சரியான, மரியாதைக்குரிய நடத்தையாகும். (Digital Etiquette).

தகவல் தொடர்பிற்கான வழிமுறைகளை உள்ளடக்கியது டிஜிட்டல் ஒழுக்கங்கள் எவை? மேலும் பரிந்துரைகளைச் சேர்க்க முடியுமா?




டிஜிட்டல் ஒழுக்கங்கள் ஆக்கப்பூர்வமான, பயனுள்ள இணையவழி தொடர்புகளை ஊக்குவிக்கிறது. இவை சமூக நெறிமுறைகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

டிஜிட்டல் ஒழுக்கங்களை கடைப்பிடிப்பதால் நமக்கு என்ன நன்மைகள் கிடைக்கிறது?



- மதிப்புமிக்க தகவல் தொடர்பு சாத்தியமாகிறது
- தகவல் தொடர்பில் தெளிவும், புரிதலும் கிடைக்கின்றது
- ஆக்கப்பூர்வமான இணையவழி சமூகங்கள் உருவாகின்றது
- சைபர் குற்றங்கள் குறைகிறது
- பாதுகாப்பான டிஜிட்டல் தளங்கள் சமூகத்தை நடத்துகிறது
- டிஜிட்டல் கல்வியறிவை ஆதரிக்கிறது
- 

## ஊடக எழுத்தறிவும் இலக்கமுறை எழுத்தறிவும்
*(Media Literacy & Digital Literacy)*

*பல்வேறு வகையான ஊடகங்கள் மூலமாகப் பெறப்பட செய்திகளை அணுகவும், பகுப்பாய்வு செய்யவும், மதிப்பீடு செய்யவும், உருவாக்கவும், தகவல் தொடர்பு நடத்துவதற்குமான ஊடக திறன் ஆகும். ஊடக உள்ளடக்கம் எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதும் அது நம்முடைய புலனுணர்வை எவ்வாறு வடிவமைக்கிறது என்பதும் செய்திகளை விமர்சன முறையில் எவ்வாறு விளக்கலாம் என்பதும் இதில் அடங்கும்.*

*டிஜிட்டல் இடங்களில் தகவல்களைக் கண்டறியவும் மதிப்பீடு செய்யவும், பரிமாற்றம் செய்யவும் டிஜிட்டல் கருவிகளையும் தகவல் தொழில்நுட்பங்களையும் திறம்பட பயன்படுத்துவதற்கான திறமையே டிஜிட்டல் எழுத்தறிவு. அடிப்படைக் கணினி அறிவு, இணையத்தை எவ்வாறு உபயோகிக்க வேண்டும் என்ற புரிதல், டிஜிட்டல் தளங்களின் வழியாகச் செல்லுதல் (Navigate), இணையவழி உள்ளடக்கத்தை விமர்சன முறையில் மதிப்பீடு செய்தல், சைபர் விழிப்புணர்வு போன்ற நிபுணத்துவம் இதில் அடங்கும்.*

*டிஜிட்டல் ஒழுக்கங்கள் குறித்த சுவரொட்டி தயார் செய்து பள்ளியில் காட்சிப்படுத்தவும்.*

நமது கருத்துப் பரிமாற்றத்திலும் தகவல் பெறுவதிலும் உலகைப் புரிந்துகொள்ளும் முறையிலும் ஊடகங்களின் தாக்கத்தைக் காணலாம். தனிநபர்களுக்கும் சமூகத்திற்கும் இடையிலுள்ள தொடர்பின் முக்கிய காரணி ஊடகங்களாகும். பொதுக்கருத்தை உருவாக்குதல், சமூக நடத்தையை உருவாக்குதல், சமூக பழக்கங்களை உருவாக்குதல் ஆகியவற்றில் ஊடகங்களின் தாக்கத்தைக் காணலாம். தொழில் நுட்பத்தின் வளர்ச்சியுடன் குறிப்பாக செயற்கை நுண்ணறிவின் வருகையால் ஊடகங்களின் வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது அவை சமூக மாற்றத்தின் பிரதிபலிப்பாகவும் மாறியுள்ளது.

## தொடர் செயல்பாடுகள்

- 'ஊடகமும் சமூக வாழ்க்கையும்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யவும்.
- 'நவீன ஊடகங்களின் தாக்கம் பொதுகருத்து உருவாக்கத்தில்' என்ற தலைப்பில் உரை தயாரிக்கவும்.
- ஊடகத்துறையில் செயல்படுகின்ற நிபுணர்களின் குழு விவாதத்திற்கு ஏற்பாடு செய்யவும்
- ஆகாஷ்வாணி/ தூரதர்ஷன், தினநாளிதழ் அலுவலகம் நேரிலோ/ மெய்நிகர் உண்மை வழியாகவோ சென்று அங்குள்ள செயல்பாட்டினைக் குறித்த ஆய்வறிக்கைத் தயாரிக்கவும்.

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ  பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**

ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,

கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்–34, தொலைபேசி : 0471–2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in

www.kescpcr.kerala.gov.in

சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400

கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000

*Online* ***R. T. E Monitoring : www.nireekshana.org.in***